ஜூன் 05 - 11, 2005
June 05 - 11, 2005

28 பக்கங்கள்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்



## பொதுக்கட்டமைப்பும் புத்தர்சிலை விவகாரமும்



## ஜனாதிபதியின் இந்திய விஜயம் பயனளிக்குமா?



## கிளிண்டனின் ஆதரவு



# வன்னிக்குள் ஆழ ஊடுருவும் படையணி?

விடுதலைப்புலிகளின் அனைத்துத் தலைமையகங்களும் இயங்கிவரும் வன்னிப் பெருநிலப்பரப்புக்குள் இராணுவப் புலனாயவுத்துறையைச் சேர்ந்த ஆழ ஊடுருவித்தாக்கும் பிரிவினரின் ஊடுருவல் குறித்து புலிகளின் புலனாய்வுப்பிரிவுக்குக் கிடைத்த தகவலை அடுத்து, வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் தெரிவுசெய்யப்பட்ட முக்கிய பகுதிகளை மையமாக வைத்து பலநூறு புலிப்போராளிகளால் தடைகள் அமைத்து சல்லடைத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊடுருவல்காரர்கள் தொடர்பான தகவல்களை திரட்டும் பணியிலும், கண்காணிக்கும் பணியிலும் புலிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு ஊடுருவிய சிலர் புலிகளின் ரோந்துப் பிரிவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதை அடுத்தே தீவிர உஷார் நிலையில் புலிகள் இருந்து வருகின்றனர்.

புலிகளின் பகுதிக்குள் தாக்குதல்கள் நடத்தும் நோக்குடன் பெருமளவான ஆயுதங்கள் இராணுவ உளவுப்பிரிவினரால் கடத்தப்பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து ஊடுருவிய உளவாளிகள் தப்பிச் செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இராணுவ ஆழஊடுருவும் படையணி 2000 ஆம், 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தீவிரமாக செயற்பட்டது. மிலேனியம் சிற்றி பகுதியில் இருந்து இயங்கிவந்த இந்தப் படையணியைச் சேர்ந்தவர்கள் பலர் 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர்.

### கடந்த கால தாக்குதல்கள்

2001 ஆம் ஆண்டு பல தொடர்ச்சியான ஊடுருவித்தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்த படையணி வன்னிப் பெருநிலப்பரப்பில் மட்டுமின்றி கிழக்கிலும் செயற்பட்டது.

புலிகளின் முக்கிய தளபதிகள் பலர் உயிரிழந்தனர். இவ்வாறான தாக்குதல்களில் ஒட்டுசுட்டானில் புலிகளின் மூத்த தளபதி கேணல் சங்கர் அல்லது முகிலன், கனகராயன் குளப்பகுதியில் கடற்புலிகளின் தளபதி லெப். கேணல் கங்கை அமரன், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் மட்டு.அம்பாறை புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் லெப்.கேணல் நிசாம் ஆகியோரும் மற்றும் சில தாக்குதல்களில் கீழ்மட்டப் போராளிகள் சிலரும் உயிரிழந்தனர். அதேவேளை கொக்காவிலில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், நெடுங்கேணியில் புலிகளின் தளபதிகள் பால்ராஜ், ஜெயம் ஆகியோர் மயிரிழையில் தப்பியிருந்தனர்.



இதேவேளை இன்று இராணுவ புலனாய்வுத்துறையில் இருந்து வரும் ஆழஊடுருவும் தாக்குதல் அணியின் தற்போதைய தலைவர் எனக் கருதப்படும் கருணா முன்னர் புலிகளின் தளபதியாக இருந்தபோது அவரைக் கொலை செய்யவும் ஊடுருவல் படையணி நகர்ந்திருந்தது. எனினும் 2002 டிசம்பர் 25 இல் போர்நிறுத்தம் ஏற்பட்டதால் அது பின்னர் தவிர்க்கப்பட்டது.

இதில் வேடிக்கை என்னவெனில் அன்று கருணாவை கொல்ல வந்த படைப்பிரிவு ஒன்றுக்கு இன்று அவரே தலைமை தாங்குவது வரலாற்றில் ஒரு கொடுமையான பக்கம்.

அண்மைக்காலமாக இராணுவபுலனாய்வுத்துறையால் புலிகளின் ஆதரவாளர்கள் பலர் தொடர்ச்சியாக அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் வன்னிப் பெருநிலப்பரப்பினுள் ஊடுருவி புலிகளின் முக்கிய உறுப்பினர்களைக் கொல்லும் நடவடிக்கையில் இராணுவ உளவுப்பிரிவு ஈடுபட்டுள்ளது.

இந்தப் பிரிவுக்கு ஊயிருட்டும் வகையில் கருணாகுழு மற்றும் ஈ.என்.டி.எல்.எவ் குழு உட்பட இதர துணைக்குழுக்களும் இப்பிரிவில் புதிதாக அங்கம் வகிப்பதாக தெரிகிறது. அண்மையில்கூட கொழும்பில் வைத்து இராணுவ புலனாய்வுப்பிரிவினர் எனச் சந்தேகிக்கப்படுவோரால் புலிகளின் முக்கியஸ்தர் நியூட்டன் கடத்தப்பட்டார். அவரிடம் இருந்து கொழும்பில் புலிகளின் செயற்பாடுகள் குறித்து முக்கிய தகவல்களைப் பெறும் முயற்சியில் அரச புலனாய்வுத்துறை ஈடுபட்டுள்ளது. எனினும் கொழும்பில் புலிகள் தமது கட்டமைப்பைச் சுற்றி பின்னியிருக்கும் வலையமைப்பு மிகவும் நுணுக்கமானது என்பதால் ஒருவரையறைக்குமேல் தகவல்களைப் பெற முடியாது என்றே கூறப்படுகிறது.

### எதிர் முறியடிப்பும் தப்பி ஓடும் புலனாய்வாளர்களும்

இதேவேளை, புலிகளின் தீவிர எதிர் புலனாய்வு முறியடிப்புப் பிரிவால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் அரச புலனாய்வுத்துறை அதிர்ந்துபோயுள்ளது. இராணுவத்தின் முக்கிய உளவுப்பிரிவின் அதிகாரிகள் வெளிநாட்டுக்கு தப்பி ஓடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தப்பி ஓடியவர்கள் மலேசியா சென்று அங்கிருந்து தாய்லாந்து செல்லவுள்ளனர் என்றும் சில செய்திகள் கூறுகின்றன. இவர்களுள் பயங்கரவாத தடுப்புப்பிரிவைச் சேர்ந்த நிலாப்தீன், இராணுவப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளான மேஜர் இரத்னாயக்க, மேஜர் மத்தலிப், கப்டன் நிலாம் (மிலேனியம் சிற்றியின் பொறுப்பாதிகாரியாக இருந்தவர்) ஆகியோரும் அடங்குவர். இவர்களுடன் தமிழ் உளவாளிகள் இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

இதுதவிர இன்னொரு பிரிவினர் புலனாய்வுத்துறையில் இருந்து விலகப்போவதாக கூறிய நிலையில், அவர்கள் வெளிநாட்டுத் தூதரகங்களில் பாதுகாப்பு ஆலோசகர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ புலனாய்வுத்துறையில் கடமையாற்றிய கப்டன் மஞ்சுள பிரான்ஸில் உள்ள இலங்கைத்தூதர்கத்துக்கும், கப்டன் நீல் ரொசைரோ புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கும், பிரிக்கேடியர் மகிந்த பீரிஸ் அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கும், கப்டன் நிலாம் இந்தோனேசியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கும் பாதுகாப்பு ஆலோகர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

**-கலின்-**

இராணுவப்புலனாய்வுத்துறை ஆட்டம் காணும் அதேவேளை, புலிகள் தமது சில வலையமைப்புகளை மாற்றியமைத்து எதிர் முறியடிப்பு நடவடிக்கைகளை தீவிரமாக்கிவருகின்றனர் எனவும் நம்பகமாகத் தெரியவருகிறது.

---

## வாசகர் இதயம் பேசுகிறது

*மூர்த்தி, வயித்திராதி — கோண்டாவில்*

அன்புள்ள ஆசிரியருக்கு!

சுடர் ஒளியின் தரம் பற்றி பறைசாற்ற வேண்டிய தேவை எனக்கு இல்லை. அது பற்றி அனைவருமே அறிவர். உங்கள் பத்திரிகை தாங்கிவரும் கவிதைப்புனல் பகுதி 'பலேஜோர்'. நான் வெகுவாக இரசிக்கும் பகுதி அதுதான். தற்போதைய இளைஞர் சமுதாயத்தில் பல தரமான கவிஞர்களை உருவாக்கிய பெருமைக்கு உரியது சுடர் ஒளியே என்று கூறின் அது மிகையாகாது.

*த.தனேஸ்வரன் — கொக்குவில்*

உங்கள் பத்திரிகையில் அளவற்ற மதிப்பு வைத்திருக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். உங்கள் பத்திரிகையில் வெளியாகும் ஒவ்வொரு பகுதியையுமம் வாரம் தவறாமல் வாசித்து மகிழ்வேன்.

தாய்நாட்டுக்காகப் போராடித் தற்போது சிறையில் வாழும் எமது இளைஞர்களில் எத்தனை நிறமைவாய்ந்த கவிஞர்கள் இருக்கிறார்கள் என்பதை வாரா வாரம் கவிதைப் புனலில் நீங்கள் பிரசுரிக்கும் கவிதைகள் மூலம் தெரியவருகிறது.

சிறையில் வாடும் அவர்கள் தமது கவிதைகள் சுடர் ஒளியில் பிரசுரமாகும் போது அவர்கள் நிச்சயம் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தும் உங்களை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. வாழ்க வளர்க உங்கள் சேவை.

---

## திருமலை துறைமுக ஊழியரும் ஹர்த்தாலும்

பொதுவாக ஹர்த்தால், கடையடைப்பு என்றால் அனைத்துத் தரப்பினருக்கும் திண்டாட்டம் தான். ஆனால் திருகோணமலையில் ஹர்த்தால் என்றால் அதிகம் திண்டாடுபவர்கள் இலங்கை துறைமுக அதிகார சபை ஊழியர்களே. இருதலைக்கொள்ளி எறும்பாக அவர்கள்படும் பாடு அவர்களுக்குத்தான் புரியும்.

அரச ஊழியர்களின் கதையே வேறு. அவர்கள் அலுவலகங்களுக்குப் பின்கதவால் சென்று தமது வரவைப் பதிந்துகொள்வர். அவ்வாறு பதிந்துவிட்டு வீடு திரும்பி சின்னத்திரை சினுக்கங்களை தமது குடும்பத்தாருடன் சேர்ந்து பார்த்து இரசிப்பர். அல்லது வேறு ஏதாவது வழியில் தமது பொழுதை ஆனந்தமாக அனுபவிப்பார்கள்.

இந்த அலுவலர்கள் முதல் நாள் தமது அலுவலகங்களுக்குச் சென்று வரவைப் பதிய முடியாவிட்டால் மறுநாள் சென்று தமது லீவை நியாயப்படுத்தி விடுமுறை பெற்றுக்கொள்வர். அதனால் அவர்களுக்கு ஹர்த்தால் ஒரு பிரச்சினை அல்ல. அதுபற்றி அலட்டிக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை.

ஆனால் பாவம் துறைமுக ஊழியர்கள். அவர்கள் படும்பாடு யாருக்குத் தெரியும்?

ஹர்த்தால் அன்றி வேறு என்ன பகிஷ்கரிப்பாக இருந்தாலும்துறைமுக அதிகாரசபை ஊழியர்கள் கட்டாயம் தமது கடமைகளுக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

மேலும் ஏனைய நிறுவனங்களின் அலுவலகங்களுக்குஉள்ளதைப்போன்று துறைமுக ஊழியர்களுக்கு விசேட விடுமுறை கிடையாது. ஹர்த்தால் மட்டுமல்ல பூகம்பமே வெடித்தாலும் விசேட விடுமுறை வழங்கப் படமாட்டாது. ஊழியர்களின் சொந்த லீவிலேயே அவர்களின் வரவின்மை கழிக்கப்படும்.

**எஸ்.எஸ்.ஆர்**

சொந்த விடுமுறை போடலாம், ஒருநாள் இரண்டுநாள் ஹர்த்தால் என்றால்? ஹர்த்தால் தொடர்ந்து நடைபெற்றால்?

கடந்த காலங்களில் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்ற பேதம் இன்றி அனைவரும் ஹர்த்தாலில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்படியான ஹர்த்தால்கள் அனுஷ்டிக்கப்பட்டபோது திண்டாடியவர்கள் துறைமுக ஊழியர்களே. அத்துடன் வடக்கு கிழக்கு உள்ளிட்ட வெளி இடத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு பணி புரிவதால் (No pay leave) சம்பளமற்ற விடுமுறையை தவிர்த்துக்கொள்ள

(18 ஆம் பக்கம் பார்க்க)

---


## சுடர் ஒளி வாரமலரில் விரைவில் எதிர்பாருங்கள்!

ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் **வி.நவரத்தினம்** எழுதிய

## தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்

(The Fall and Rise of the Tamil Nation)

★ சுதந்திரத்தின் பின் தென் இலங்கை அரசியல்வாதிகளால் நயவஞ்சகத்தனமாக ஏமாற்றப்பட்ட தமிழ்த் தலைவர்கள்.

★ பேரினவாதிகளால் நசுக்கப்பட்ட அஹிம்சைவழிப் போராட்டங்கள்.

★ தமிழ் தேசத்தின் எழுச்சிக்கு வித்திட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்.

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம்வரை இடம் பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்.

இதன் தொகுப்பு, தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வாரா வாரம் வெளிவரவிருக்கிறது.

# ஆறுமுகன் தொண்டமானும் டி.எம்.ஜெயரட்னாவும்

மலையகத்தில் குறிப்பாக மத்திய மாகாணத்தில் இருவர் குட்டையைக் குழப்பிக் கொண்டிருந்தனர். ஒருவர் அமைச்சர் டி.எம். ஜயரட்ன. மற்றவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான்.

இவர்களுடைய அறிக்கைகளும் பேட்டிகளும் இவர்கள் இருவரும் உலகில்தான் இருக்கின்றனரா அல்லது கனவுலகில் சஞ்சரிக்கின்றனரா என்று சந்தேகிக்க வைக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலும் முக்கிய இடத்தில் இருக்கும் ஒரு சிரேஷ்ட அமைச்சர் டி.எம்.ஜயரத்ன. மத்திய மாகாணத்தில் செறிந்து வாழும் தமிழ் மக்களுடன் நெருங்கிப் பழகுபவர்.

இவருடைய பேச்சுக்கும், சொல்லுக்கும் ஓரளவு நம்பிக்கையும் செல்வாக்கும் உண்டு. ஆனால் அண்மைக்காலங்களில் இவருடைய போக்கும், பேச்சும் கடந்த காலங்களில் இருந்த நம்பகத் தன்மையை இழக்கச் செய்துவிட்டன. எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் சரி, ஆளும் கட்சியாக இருக்கும்போதும் சரி டி.எம்.ஜயரத்ன கூறினால் ஏதாவது நடக்கும். அங்கே உண்மை இருக்கும் என்று நம்பப்பட்டது.

தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சு, பொதுக்கட்டமைப்புக்கு ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டைகள் என்பவற்றால் ஜனாதிபதி சந்திரிகா முச்சுத்திணறிக்கொண்டிருக்கிறார்.

இப்படியான ஒரு காலகட்டத்தில்தான் ஆறுதல் அளிக்கக்கூடிய வகையில் அமைச்சர் ஜயரத்ன பேட்டி அளிக்கின்றார்.

அதாவது ஜனாதிபதியின்கரங்களைப் பலப்படுத்தும் வரிசையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஒரு கோஷ்டியினர் அப்படியே அரசுடன் ஒட்டிக்கொள்ளப்போகிறார்கள் என்று கூறியதோடு கால நேரமும் குறித்துவிட்டார்.

ஆனால், இதே மத்திய மலைநாட்டில் இருந்து வந்த ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க என்ன சொல்கிறார்?

"ஓட்டை விழுந்த ஓடத்துக்குள் ஏறுவதற்கு ஐ.தே.கவினர் ஒன்றும் முட்டாள்கள் அல்லர்." என்று அடித்துச் சொல்லி விட்டார்.

இதில் யார் சொன்னது நடந்தது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

கூறி மாதங்கள் சிலவாகி விட்டன இப்போது பொதுக்கட்டமைப்பின் நேர் எதிரிகளான ஜே.வி.பியினரில் ஒரு பகுதியினர் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புடன் சேர்ந்து கொள்ளப் போகின்றனர் என்று ஜயரத்ன கூறுகின்றார். உண்மையாகவே அமைச்சர் ஜயரத்ன ஆதாரங்களுடன் கூறுகின்றாரா அல்லது ஜனாதிபதியை சந்தோஷப்படுத்துவதற்காக இப்படிக் கூறுகிறாரா என்பது புரியவில்லை. அமைச்சர் ஜயரத்ன இதுவரை கட்டிக்காத்து வந்த நம்பகத்தன்மையை கட்டிக்காத்துக்கொண்டால் அவருக்கும் நல்லது அவருடைய பேச்சுக்கு மதிப்பளிக்கும் மக்களுக்கும் நல்லது.

அடுத்ததாக மக்களின் விமர்சனத்துக்கு உள்ளாகி இருப்பவர் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான்.

ஆறுமுகன் தொண்டமான் கடைசிவரையில் எந்த ஒரு விடயத்தையும் நேரடியாக ஊடகங்களுக்கு கூறுவதில்லை. உறுதியான ஒரு முடிவு காணப்பட்ட பின்னரே வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று கூறிவிடுவார். அது அவருடைய 'ஸ்டையில்.'

ஆனால் அவருடைய பெயரில் அவரது சகாக்கள் கொடுக்கும் விவரங்கள் மலையக மக்களை மட்டும் அல்ல நாட்டு மக்களையே திக்குமுக்காட வைத்துள்ளன.

"இரண்டு பேரை அமைச்சர்களாக்க எட்டு பேரும் அரசுக்கு கை உயர்த்தினர். தொடர்ந்து தலைவர் ஆறுமுகன் உட்பட இருவருக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட உள்ளன. இ.தொ.கா ஒட்டு மொத்தமாக அரசுடன் சங்கமமாகப்போகிறது. ஆறுமுகன் தொண்டமான் இன்ன திகதியில் அமைச்சராகப் போகிறார்" என்றும் கூறப்பட்டது.

இந்த செய்தியை எழுதிய மை காயும் முன் அமைச்சர்கள் இருவரின் இராஜினாமா நாடகம். பின்பு அந்த இராஜினாமாக்களை வாபஸ் பெற்ற விதம் எல்லாம் ஊரறிந்த விடயமாகிவிட்டன.

ஜனாதிபதியை சந்தித்து இராஜினாமாவை வாபஸ் பெற்றார்களோ இல்லையோ சந்திரசேகரன் புலிகளை மலை நாட்டுக்கு கொண்டு வரப்போகின்றார் என ஜனாதிபதியின் காதோடு சொன்ன விடயம் சந்திப்பில் கலந்துகொண்ட சிரேஷ்ட அமைச்சர் ஒருவரினாலேயே அம்பலப்படுத்தப்பட்டது என்னவோ உண்மை.

இதனால் ஏற்பட்ட சர்ச்சைகள் சிறிது ஓய்ந்த பின் மீண்டும் ஒரு காட்டமான அறிக்கை. "இ.தொ.காவின் கோரிக்கைகள் அரசினால் நிராகரிக்கப்பட்டதால் இ.தொ.கா அரசுடனான உறவை வெட்டிக்கொள்ளப் போகிறது. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மே தினத்தில் இதனைப் பகிரங்கமாக பிரகடனப்படுத்தப்போகிறார்" என்று கூறினார். மக்கள் ஆவலுடன் தலைவரின் பிரகடனத்தை எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அதுவும் புஷ்வாணமாகிவிட்டது.

இதற்கிடையில்கண்டி மாவட்ட இ.தொ.கா எம்பியான பைசல் முஸ்தபாவுக்கும், அமைச்சர் முத்து சிவலிங்கத்துக்கும் இடையிலான பனிப்போர் கட்சிக்குள்ளேயே பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. பைசல் முஸ்தபா இ.தொ.காவுக்கு முழுக்குப்போட்டுவிட்டு ஐ.தே.கவுடன் இணையப்போகிறார் என்று அடித்துக்கூறப்பட்டது.

ஆனால் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் முஸ்தபாவை மடக்கிவிட்டார். தன்னுடைய அரசியல் சாணக்கியத்தால் ஜனாதிபதியிடம் பேசி முஸ்தபாவுக்கு பிரதி அமைச்சர் பதவி ஒன்றை வாங்கிக் கொடுக்கின்றார். இன்னும் சில தினங்களில் முஸ்தபா பிரதி அமைச்சராகின்றார் எனக்கூறப்பட்டது.

அதாவது பைசல் முஸ்தபா கொள்கைக்காக அல்லது சமூகத்துக்காக ஒரு கோரிக்கையை முன் வைத்து வெளியேற முற்படவில்லை. கேவலம் ஒரு எலும்புத் துண்டாக கிடைக்கும் அமைச்சுப் பதவிக்காகத் தான் இப்படி பம்மாத்துக் காட்டினார் என்பதை சொல்லாமல் சொல்லிக்காட்டிவிட்டது இ.தொ.கா.

மலையகத்திலேயே தலை நிமிர்ந்து நிற்கும் இ.தொ.காவின் பெயரில் இப்படி மாறுபட்ட செய்திகள் வெளிவருவது அதன் தலைமைத்துவத்துக்கே அவமானத்தைத் தேடித்தரும். தொண்டமான் இவ்விடயத்தில் சற்று கவனம் செலுத்த வேண்டும். சகாக்களின் வாய் சவடால் முதலுக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடக்கூடாது. சற்று நிதானமாகவே இருக்க வேண்டும்.

இந்தப் பெரும் தலைவர்கள் மலையகத்தில் குட்டையை குழப்பிக் கொண்டிருக்கும் போது மலையகத்தில் புதுக்கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக வீராப்புடன் வெளிக்கிளம்பி உள்ளார் மத்திய மாகாண சபை உறுப்பினரான என்.கோவிந்த ராஜ்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மீண்டும் இ.தொ.கா என பல்டி மேல் பல்டி அடித்தவர்தான் இந்த கோவிந்த ராஜ். இவரை இப்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் உதறித்தள்ளிவிட்டன. இதனால் கோவிந்தராஜ் இப்பொழுது மலையகத்தில் செல்லாக்காசாகிவிட்டார். இப்படி போக்கிடம் இல்லாத இவர் மலையகத்தில் புதிதாக ஒரு கட்சியை ஆரம்பிக்கப்போகிறேன் என அபாயச் சங்கு ஊதி உள்ளார். அப்படியானால் ஓரங் கட்டப்பட்டவர்களும், போக்கிடம் இல்லாதவர்களும், ஒதுங்கவும் அவர்களுடைய வியாபாரத்தை நடத்தவும் மலையகம் தான் கிடைத்ததா?

இப்படி மாறி மாறி ஏமாற்றப்படும் கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது மலையகம். அதாவது மலையக மக்களை ஒருநிலையில் சிந்திக்க விடாமல் தினந்தோறும் மாறி மாறி மடையர்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள் மலையக மந்திரிமார். அதுதான் இன்றைய மலையக அரசியல்.

- சிகா -


## வீடு விற்பனைக்கு

அளவெட்டி தெற்கு பிரதான வீதியில் 7 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொலைபேசி இலக்கம்:- 4202623

ENJOY THE BENEFIT OF BOTH THE WORLDS

INDIA — Vinayaka Missions Chennai

Centennial College Canada — CANADA

VINAYAKA CENTENNIAL CANADIAN BUSINESS SCHOOL (VCBS)

#1, Whites Road, Royapettah, Chennai-600 014, Tamilnadu, India

THREE YEARS TWINNING PROGRAMS FOR STUDENTS 12th STD COMPLETED / GRADUATES.



1st Year in INDIA, (Hostel Provided) IInd & IIIrd in CANADA or Ist & IInd year in INDIA, IIIrd year in CANADA or 3 Years in INDIA. Tution Fees: in India Rs:1,60,000/- in Canada $10,250 Canadian Dollars per Year

Average Earning for the co-op option during your two years of study in Canada for the following programs (Equivalent to BBA Degree in India)

| | Advanced Diploma in International Business | Advanced Diploma in Business Operations Management | Advanced Diploma in Human Resources Management |
|---|---|---|---|
| 1st work Term (after III sem for 3-4 months) | $377 Canadian Dollars per week | $477 Canadian Dollars per week | $477 Canadian Dollars per week |
| 2nd work Term (after IV sem for 3-4 month) | $317 Canadian Dollars per week | $417 Canadian Dollars per week | $417 Canadian Dollars per week |
| 3rd work Term (after V sem for 3-4 months) | $472 Canadian Dollars per week: | $531 Canadian Dollars per week | $531 Canadian Dollars per week. |

NN CONSULT

1st Floor, No 60, Peterson Lane, Colombo - 06, T.phone : 5558833
Telefax: 2365093/5558844
Email : nnconsult@sltnet.lk

Further Details Contact: Admission Cell Vinayaka Missions (Pandalai Hospital), #160, Poonamallee High Road, Kilpauk, Chennai -600010, Tamil Nadu, India. Mobile: 9381203272/9444161782/9381205644/9841096255 in Hindi Phone: 044-28203776 (Dir)044-28255060/5294 & 044-28203783/2811
E-mail: admissions@vinayakadmissions.com

## பலராது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள். மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

யூன் 22 – 27 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

யூன் 11 - 12 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

யூன் 14 - 19
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# ஜனாதிபதியின் இந்திய விஜயம் பயனளிக்குமா?

பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்து இறுதியான ஒரு தீர்மானத்துக்கு வரும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்திய விஜயத்தை மேற்கொள்கிறார்.

பொதுக்கட்டமைப்பில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுவது குறித்து சர்வதேச நாடுகள் அரசுக்குக் கடுமையான அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றன. இதில் தடுமாறிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி இந்திய ஆலோசனையைப் பெறுவதற்காகவே இந்திய விஜயத்தை பிரதானமாக மேற்கொள்கின்றார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இதில் இந்தியாவின் எதிர்விளைவு என்னவாக இருக்கும் என்பது ஓரளவு ஊகிக்கப்படக்கூடியதே.

ஆரம்பத்தில் பொதுக்கட்டமைப்புக் குறித்து அக்கறை காட்டாத ஜனாதிபதி சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். இது குறித்து இந்தியாவின் ஆதரவை பெற்றுவிடுவதன் மூலம் தென்னிலங்கையில் பொதுக்கட்டமைப்புக்கெதிராக துள்ளும் சக்திகளை ஓரம் கட்டிவிட முடியும் என நம்புகிறார்.

இந்திய விஜயத்தின்போது ஜனாதிபதி சந்திரிகா இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங், இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு, வெளிவிவகாரம் சம்பந்தமான அமைச்சர்கள் ஆகியோரைச் சந்திக்கின்றார். பொதுக்கட்டமைப்பு குறித்துப்பேசும் அதேவேளை பாதுகாப்பு விவகாரங்களும் முன்னிலைக்கு வரலாம் என நம்பப்படுகிறத.

## இந்திய நிலைப்பாடு

விடுதலைப்புலிகள் குறித்து இந்தியா கடுமையான ஒரு நிலைப்பாட்டிலேயே தொடர்ந்து இருந்து வருகிறது. பொதுக்கட்டமைப்பு உருவாவதைக் கூட இந்தியா உள்ளூர விரும்பவில்லை என்றே தெரிகிறது. பொதுக்கட்டமைப்பின் மூலம் புலிகள் பலமடைந்துவிடக்கூடும் என இந்தியா கருதுவதாகவே தெரிகிறது.

ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்தில் கடற்புலிகள் பிரிவு பற்றி இந்தியாவின் ஆய்வாளர்களும் முன்னாள் படை அதிகாரிகளும் விமர்சனம் செய்து வந்தனர். தற்போது விமானபடைப்பிரிவு பற்றி இந்தியாவின் உயர்மட்டத்தினர் தமது மனப்புழுக்கத்தை வெளிப்படுத்தி



சந்திரிக்கா



மன்மோகன்சிங்

வருகின்றனர். புலிகளின் விமானப்படை மூலம் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் எனவும் கூறி வருகின்றனர்.

தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா தவிர்க்க முடியாத சக்தியாக இருந்து வருகிறது. இந்தியாவை மீறி எதையும் தென்னிலங்கை அரசுகள் செய்யப்போதில்லை என்பது தெளிவானது. இந்த நிலையில் ஜனாதிபதியின் விஜயத்தின் மூலம் பொதுக்கட்டமைப்புக் குறித்து இறுதியானதும் உறுதியானதுமான முடிவு எடுக்கப்படும் என அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

1980களில் இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் இலங்கையை தமது பிடிக்குள் சிக்க வைக்கும் நோக்குடன் தமிழ்ப் போராளிக் குழுக்களை அரவணைத்துக்கொண்டிருந்தனர். அப்போது இஸ்ரேல் போன்ற இந்திய விரோத அமெரிக்க நேச சக்திகளுடன் இலங்கை இராஜ தந்திரத் தொடர்பு கொண்டிருந்தது. எனினும் 80களின் இறுதியில் இந்திய-புலிகள் போரும் பின்பும் 1991இல் இடம்பெற்ற ராஜீவ் கொலைக்குப் பின்பும் இந்தியாவின் கொள்கை வகுப்பு முற்றுமுழுதாக மாறியது. இலங்கை அரசுகளும் இந்தியாவுடன் ஐக்கியம் ஆகின. இந்தியாவும் எதிரிக்கு எதிரி நண்பன் கணக்கில் இன்றுவரை தமிழர் போராட்டத்தைக் குலைக்கும் வகையில் தனது நகர்வுகளை மேற்கொள்கிறது.

## அண்மைக்கால இந்திய நகர்வுகள்

அண்மைக்காலங்களில் கூட இதை தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. புலிகளுக்கெதிரான ஆயுதக்குழுக்களையும், அரசியல் உதிரிகளையும் பயன்படுத்தி வருகிறது இந்தியா. தன்னால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட ஈ.என்.டி.எல்.எப் குழுவை கருணாவுடன் இணைத்தும் ஆனந்த சங்கரி போன்ற அரசியல் உதிரிகளை வழி நடத்தியும் வருகிறது இந்தியா. புலிகளுக்கெதிரான இறுக்கமான நடைமுறையை பின்பற்றிவரும் இந்தியா (எனினும் விடுதலைப்புலிகளின் இரகசியமான செயற்பாடுகள் இந்தியாவில் தற்பொழுதும் உள்ளன.) புலிகள் குறித்த பலனாய்வுத் தகவல்களை இலங்கையுடன் பரிமாற்றம் செய்தும் வருகிறது. இவற்றை ஒரு சட்ட ரீதியாக்க அல்லது ஒழுங்கு முறையாக்க பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றையும் செய்ய இந்தியா தீவிரம் காட்டி வருகிறது. தனது வல்லாதிக்க எல்லைக்குள் விடுதலைப்புலிகள் பெரும் சக்தியாக வளர்வதை இந்தியா விரும்பப் போவதில்லை.

இந்த நிலையில் இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் மேற்குலகம் காட்டிவரும் ஈடுபாட்டை இந்தியா சகித்துக்கொள்ளப் போவதில்லை என்பதும் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் செல்வாக்கு வரையறையை மீறிச் செல்வதை இந்தியா விரும்பப்போவதில்லை என்பதும் இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களின் கருத்துகளில் இருந்து தெரிகிறது.

இலங்கை விவகாரத்தில் மேற்கு நாடுகளின் சமாதான முயற்சிகளை இந்தியா விரும்பவில்லை. இதிலும் பார்க்க இலங்கையில் யுத்தம் ஒன்றே மேலானது என்ற கருத்தியல் இந்திய வல்லாதிக்கத்திடம் மேலோங்கிக் காணப்படுகிறது.

பொதுக்கட்டமைப்புக்கூட மேற்குலகின் வற்புறுத்தலால் உருவாகிறது என்ற கருத்தில் இந்தியா உறுதியாக உள்ளது. இதனால் இந்தியா இதனை நிராகரிக்கக் கூடும் அல்லது இக்கட்டமைப்பால் ஜனநாயகம், பன்முகத்தன்மை குறித்து பேசிவரும் தமிழ் தேச விரோத குழுக்களையும் இதில் இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தக்கூடும். இதன் மூலம் தனது பிடியை இறுக்க இந்தியா எண்ணக்கூடும். இதைப்புலிகள் ஏற்றுக்கொள்வார்களா என்பதும் கேள்விக்குறி.

இந்தியா குறித்து ஆரம்பத்தில் தாம் மேற்கொண்டு வந்த கடும்போக்கை புலிகள் தற்போது தளர்த்தியுள்ளனர். எனினும் புலிகள் விஷயத்தில் இந்தியா இறங்கிவரும் சாத்தியமில்லை என்றே இந்திய இராஜ தந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதியின் முயற்சிகள் எவ்வளவுக்கு வெற்றியளிக்கும் என்பது விரைவிலேயே தெரிய வரும்.

## புலிகளின் மாற்றம்

பொதுக்கட்டமைப்பு பற்றி பேசிவந்த புலிகள் தற்போது மீண்டும் இடைக்கால நிர்வாகம் பற்றி பேசத் தொடங்கியிருக்கிறார்கள். பொதுக்கட்டமைப்பில் நம்பிக்கையிழந்ததன் தோற்றப்பாடே புலிகளை மீண்டும் இடைக்கால நிர்வாகம் குறித்து பேச வைத்துள்ளது.

புலிகளின் இந்த நிலைப்பாடு அரசுத் தரப்பையும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது. இதனால் துரிதமாக ஒரு கட்டமைப்பை ஏற்படுத்த தென்னிலங்கை அரசு முனைகிறது. புலிகளின் நிலைப்பாடுகள் கடும்போக்காக மாறக்கூடும் என்ற நிலையில் அரசு அவசர அவசரமாக வெளியுலகுக்கு தனது சமாதான ஆர்வத்தை (?) வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. பொதுக்கட்டமைப்பு வேலைகள் எல்லாம்முடிந்துவிட்டன என்பது போலவும் கையெழுத்திடுவதே மீதி என்பது போலவும் ஜனாதிபதி பேசி வருகிறார். புலிகள் இணக்கம் காணப்படாத பல விடயங்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர்.

இவ்வாறான குழப்பங்கள் இருக்கும் நிலையில் ஜனாதிபதியின் இந்திய விஜயம் பல சந்தேகங்களை எழுப்புகின்றது.

பிங்கலன்

ஜனாதிபதி தனது விஜயத்தின் மூலம் பொதுக்கட்டமைப்புக்கான அங்கீகாரத்தை பெற்றுவிடுவாரா? அல்லது இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதே ஒரு வழி என்ற முடிவுடன் வருவாரா என்பது விரைவில் தெரிய வரும்.

# பரவிவரும் பாலியல் கலாசாரம்

பாலியல் கலாசாரம் இலங்கையில் வேகமாகப் பரவி வருகிறது. இங்குள்ள கிராமப்புறங்களைச் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் இக்கலாசாரத்துக்கு வெகு இலகுவில் அடிமையாகிவிடுகிறார்கள் என பொலிஸ் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பாலியல்கலாசாரத்தால் கவர்ந்திழுக்கப்படும் யுவதிகளில் பலர்தமது காதலர்களுடன் உல்லாசமாகப் பொழுதைக் கழித்துவிட்டுப் பின்னர் அவர்களால் கைவிடப்படும்போது தமது வாழ்க்கைக்கு வழி தேடி பாலியல் தொழிலை நாடுகிறார்கள் என பொலிஸார் சேகரிக்கும் புள்ளிவிவரங்கள் அம்பலப்படுத்துகின்றன.

சில காதலர்கள் பெருமளவு வருமானம் கருதி தொழில் நடத்தும் விடுதிகளில் தமது காதலிகளை அறிமுகம் செய்து வைப்பதாகவும் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்து வருகின்றன.

விவரங்களைச் சேகரிப்பதற்காக வழிதவறிய யுவதிகள் சிலரைச் சந்தித்த பொலிஸ் பொதுசனத் தொடர்பு பகுதியின் இயக்குனர், இவர்களில் ஒருசிலர் கர்ப்பமாகி இருப்பது விசாரணையின்போது தெரிய வந்ததாகவும் சொல்கிறார்.

வாலிபர்களும், யுவதிகளும் தாமாகவே பூரண விருப்பத்துடன் இத்தொழிலில் ஈடுபடுவதும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சிகளில் தாம் பார்த்து மகிழ்ந்த காதல் அல்லது பாலியல் காட்சிகள் இவர்களை பாலியலில் ஈடுபட தூண்டிவிடும் உந்து சக்திகளாகக் காணப்படுகின்றன.

அத்துடன் பொருளீட்டக்கூடிய வாய்ப்புகளும் இருப்பதைக்கொண்டும் இவர்களின் வாழ்க்கையில் பாலியல் தொழில் தொடர்கதையாக நீடிக்கிறது.

வெளிநாட்டவர்களும், உள் நாட்டவர்களும் அதிக பணம் கொடுத்து ஆனந்தமாகத் தமது பொழுதைக் கழிக்க விரும்புகிறார்கள். எனவே, பாலியல்தொழிலில் ஈடுபடும் இளைஞர்கள், யுவதிகளுக்குத் தேவை தொடர்ந்து இருந்து வருவதனால் அவர்கள் இந்தத் தொழிலை விட்டு வேறு தொழிலை நாடுவதில்லை. சுலபமாகப் பணம் சம்பாதிக்கக்கூடிய வழி இது என்று நினைக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொழிலில் ஈடுபவர்களுடன் பேரம் பேசிக் கொண்டிருந்த சமயம் வெளிநாட்டவர் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.சில்வா கருத்துத் தெரிவிக்கையில் பசிக்கொடுமை பாலியல் தொழிலுக்கு பல இளைஞர்களையும், யுவதிகளையும் தள்ளிவிட்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

"சிலர் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைபெற்றுத் தருவதாக யுவதிகளை அழைத்து வந்து பாலியல் தொழிலில் ஈடுபடும் விடுதிகளில் சேர்த்துவிடுகிறார்கள்." என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகள் அபிவிருத்திக்கான வழிகளில் ஓர் அமைப்பின் இயக்குனர் திரகம, இப்போது இலங்கையில் காம உணர்வைத் தூண்டிவிடும் ஆபாசச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் பெரும் எண்ணிக்கையில் வெளியாகின்றன என்றும் பாலியல் தொழிலும் பாலியல் வன்முறைகளும் இங்கு அதிகரிப்பதற்கு அவையும் ஒரு காரணம் என்றும் அடித்துக்கூறுகிறார்.

"1906ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 'இரகசிய விஞ்ஞானம்' என்று தலைப்பிடப்பட்ட ஆபாச கையேடு ஒன்று அச்சாகி விற்பனைக்குத் தயாராக இருந்த நிலையில் கைப்பற்றப்பட்டு அதை வைத்திருந்தவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. வழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார். ஆபாசக் கையேடுகளை தம்வசம் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி இலங்கையில் முதன் முதலாகத் தொடரப்பட்ட வழக்கு இதுவாகும்.

புத்தகமோ அல்லது சஞ்சிகையோ அல்லது பத்திரிகையோ வெளியிடப்படும்போது வெளியீட்டாளரின் பெயர் விலாசம் போன்ற விவரங்கள் அதில் அச்சாகி இருக்க வேண்டும். அச்சிடப்பட்ட பிரதிகளில் ஒன்றை தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு அனுப்ப வைக்கவேண்டும். இவ்வாறு தகவல்கள் வழங்கப்படாதபோது அவற்றை வெளியிட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

முழு நிர்வாணமாக படங்களை பிரசுரித்தமைக்காக நியூஸிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் அவற்றைப் பிரசுரித்து வெளியிட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்ட சம்பவங்கள் அனேகம் உண்டு" இப்படிக் கூறி முடித்தார் திரகம.

– மதன் –

# புலனாய்வுத் துறையினரை அதிரவைத்த முத்தலிப் கொலை

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் உயர் அதிகாரியான மேஜர் துவான் நிஷாம் முத்தலிப் கொழும்பு கிருலப்பனையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பில் பாதுகாப்பை பலப்படுத்த ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பாதுகாப்பு அதிகம் உள்ள நாரஹேன்பிட்டி, பொல்ஹேன் கொட வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டது புலனாய்வுத் துறையினருக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்திஉள்ளது.

புலிகளின் பகுதிகளுக்குள் ஆழ ஊடுருவித் தாக்கும் இராணுவ அணியின் முக்கிய புள்ளியாக இருந்தவர் முத்தலிப். புலிகளுக்கு எதிரான பல்வேறு இரகசிய நடவடிக்கைகளிலும் அவர் பங்கேற்றிருந்தார்.

உத்தியோகபூர்வ வாகனத்தில் கடமைக்குச் சென்று கொண்டிருந்தபோதே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொல்ஹேன் கொட வீதி விளக்குச் சமிக்ஞையை நோக்கி அவரது கார் மெதுவாக நகர்ந்து வந்தபோது பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சரமாரியாகச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

புலிகளின் மட்டு – அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதியான கருணா அந்த அமைப்பில் இருந்து பிரிவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் மேஜர் முத்தலிப் என்று தெரிவிக்கப்படுகிறது.

கருணா அணியினருக்கு எதிராக கிழக்கில் புலிகள் தாக்குதலை ஆரம்பித்தபோது கருணா கிழக்கில் இருந்து கொழும்பிற்குத் தப்பிவர முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாகிர்மௌலானா மூலம்வசதியை ஏற்படுத்திக் கொடுத்தவரும் இவரே என நிதர்சனம் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.



இதற்கிடையில் மேஜர் முத்தலிப் கொலை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி இரு விசாரணைக் குழுக்களை அமைத்துள்ளார்.

## 5 சிங்கள இளைஞர்களுக்கு விளக்க மறியல்

கொக்கட்டிச் சோலையிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் நீதிமன்றம் ஊர்காவல் படைவீரர் உட்பட 3 சிங்கள இளைஞர்களை இம் மாதம் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

கடந்த மே 24ஆம் தேதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அனுமதி இன்றி நுழைந்தார்கள் என்று குற்றஞ்சாட்டியே இவர்கள் மீது விடுதலைப்புலிகளின் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு உள்ளது.

## படையை விட்டு ஓடுவோர் எண்ணிக்கை சமாதான காலத்திலும் அதிகரிப்பு

இலங்கை இராணுவத்திலிருந்து தப்பிச் செல்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என இராணுவத் தலைமையகம் விசனம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தை விட்டுச் சென்றவர்களின் தொகை 85 ஆயிரமாக அதிகரித்துள்ளது. சமாதான காலத்தில் மட்டும் 20 ஆயிரம் பேர் தப்பிச் சென்றுள்ளனர் என்று மேஜர் ஜெனரல் ரி.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

## சட்டவிரோத ஆயுதங்களைக் களைவதற்கு புதிய திட்டம்

புழக்கத்திலுள்ள சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்ற விசேட திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட இருப்பதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் 20 முதல் 25 சதவீதமான குற்றச் செயல்களுக்கு இந்த சட்டவிரோதமான ஆயுதங்களே காரணம் என்று கூறியுள்ள அவர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்கள், பாதாள உலகைச் சேர்ந்தவர்கள், பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் போன்றோர் இந்த ஆயுங்களை வைத்திருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

## ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு ஆனால் நிலுவை கிடையாது

கடந்த பல வருடங்களாகப் பதவி உயர்வு எதுவுமின்றிக் காத்திருந்த ஆசிரியர்களுக்கு கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் பதவி உயர்வு வழங்கப்பட உள்ளது.

அண்மையில் கல்வி அமைச்சினால் இது சம்பந்தமாக சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

'கடந்த 1994ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து வழங்கப்படாதிருந்த ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் 01.01.2005 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படும். ஆனால் குறிப்பிட்ட காலத்துக்குரிய சம்பள நிலுவை வழங்கப்பட மாட்டாது'— இவ்வாறு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட அந்த சுற்றறிக்கை தெரிவிக்கிறது.

இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம் குறிப்பிட்ட சுற்றறிக்கையில் காணப்படும் குறைபாடுகளைப்பற்றிக் கலந்துரையாட தமக்கு நேரம் ஒன்றை ஒதுக்கித் தருமாறு கல்வி அமைச்சின் செயலாளர் தாராடிமெல்லைக் கேட்டுள்ளது.

## சப் இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஜூட் தியாகராசா (42) இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். மட்டக்களப்பு லேக் வீதிக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் இடையில் இச்சம்பவம் நடைபெற்றது.

# பொதுக்கட்டமைப்புக்கு கிளிண்டன் ஆதரவு

# ஆனால் அரசுக்குள் முரண்பாடு முற்றுகிறது

" இந்த நாட்டின் ஒரு பகுதியில் இருக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும் சுனாமி அனர்த்த நிவாரண சேவைகளும் நிதியும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் உட்பட எல்லா இடங்களிலும் உள்ள மக்களுக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு பகிர்ந்து அளிப்பதில் ஏதாவது தடைகள் இருக்குமானால் அவற்றை அகற்றுவதற்கான வழிகளைப் பெற்றுக்கொடுப்பதே எனது வேலை''

இவ்வாறு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான ஐ.நா.வின் விசேட பிரதிநிதியுமான பில் கிளிண்டன் தனது 30 மணித்தியால இலங்கைக்கான விஜயத்தின் முடிவில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின்போது கல்முனைக்குச் சென்று சுனாமி அனர்த்தங்களை பார்வையிட்ட அவர், மீண்டும் இலங்கை வரும் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கும் செல்ல இருப்பதாக தெரிவித்தார்.

''ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த விரும்புகிறார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் பங்களிப்பதற்கான வாய்ப்புக்கள் எதுவும் எனக்கு இல்லை. ஆனால் இந்த நாட்டில் சீர்குலைந்து போயுள்ள சமாதானத்தை மீண்டும் மலரச் செய்வதற்கு இந்தப் பொதுக்கட்டமைப்பு பெரிய பங்களிப்பைச் செய்யும் என நான் நம்புகிறேன்.

பொதுக்கட்டமைப்பை அமைத்துச் செயற்படுத்தும்போது உள்ளூர் மட்டத்திலான பிரதிநிதிகள் அதில் அங்கம் வகிப்பார்கள். அப்போது நிவாரண உதவிகளை அனைவருக்கும் பகிர்ந்தளிக்க முடியும்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

''நான் இந்த பொதுக்கட்டமைப்புக்கு எனது முழு ஆதரவையும் வழங்குவேன். அதைப்போல் தமது ஆதரவை பொதுக்கட்டமைப்புக்கு வழங்குமாறு இங்குள்ள சகல அரசியற் கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன்'' என்றும் அவர் இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.


நடக்குமா?

ஆதரவு வழங்குவார்களா?

கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரத்தில் ஜே.வி.பி நடத்திய பொதுக்கட்டமைப்புப் பற்றிய விழிப்புணர்வு பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய விவசாய அமைச்சர் அனுரகுமார திசாநாயக்கா, ''ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கம் பொதுக்கட்டமைப்புக்கான உடன்படிக்கை ஒன்றில் புலிகளுடன் கூட்டாக கைச்சாத்திடுமானால் அதுதான் இந்த அரசாங்கத்தின் முடிவாக இருக்கும்'' என்று தெரிவித்துள்ளார்.

தவிர, பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவதற்கு எதிராக நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதற்கும் ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது. இவ்வாறான கூட்டங்கள் அடுத்து வரும் வாரங்களில் மாவட்ட ரீதியாக நடத்தப்பட இருக்கின்றன என ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது டோக்கியோவில் தங்கியிருக்கும் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க இலங்கை சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாசியி




னால் அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தொன்றில் பேசுகையில் ஆயுதம் தாங்கிப் போராடும் ஒரு குழுவுடன் சேர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதை தனது கட்சி முற்றாக எதிர்க்கிறது என்று தெரிவித்திருக்கிறார்.

ஜே.வி.பி மட்டுமல்லாது தீவிர பௌத்த சிங்களக் கட்சியான ஹெல உறுமயவும் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான தனது நிலைப்பாட்டை கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இந்தக் கட்சியினர் முதலில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராயைச் சந்தித்து பொதுக்கட்டமைப்பைத் தாம் எதிர்ப்பதற்கான காரணங்களை விளக்கி இருக்கின்றனர். தொடர்ந்து கொழும்பிலுள்ள பிரிட்டிஷ், அமெரிக்க, நோர்வே, ஜப்பான், சீனத் தூதுவர்களையும் சந்தித்து தமது நிலைப்பாட்டை எடுத்துச் சொல்ல இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மாநாட்டில் இந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் அழைப்பு எதுவும் இன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உரையாற்றி சர்வதேச 'புகழ்' பெற்றவர் என்பதை இட்டு நினைவூட்ட விரும்புகிறோம்.

இந்தக் கட்சிகளுடன் சேர்ந்து அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக இருக்கும் மற்றைய கட்சிகளும் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியும் தனது ஆதரவை இதற்கு வழங்குமா என்பது பற்றி தெளிவாக எதுவும் தெரியவில்லை. இவற்றுடன் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளும் தமது எதிர்ப்பைப் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்தி வருகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே இது சம்பந்தமான பல குத்துவெட்டுகளும் கழுத்தறுப்புகளும் இடம்பெற்று வருகின்றன. ஜனாதிபதி இவற்றை எல்லாம் எப்படிச் சமாளித்து பொதுக்கட்டமைப்பை அமைக்கப்போகிறார் என்ற கேள்வியே இன்று விஸ்வரூபம் எடுத்து அதற்கான பதிலை எதிர்பார்த்து நிற்கிறது.

அதனால்தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், ''பொதுக்கட்டமைப்பு என்பது பெரியதொரு விடயமல்ல. பத்திரிகைகள் தான் அதைப் பெரிதுபடுத்துகின்றன. வடக்கு கிழக்கில் உள்ள எமது மக்களுக்கு சுனாமி நிவாரண உதவிகளை தேவைக்கு ஏற்ப பகிர்ந்து அளிப்பதற்கான கட்டமைப்பே அது. ஆனால் இதற்கான முயற்சியும் ஆமை வேகத்திலேயே நகர்கிறது. அதனால் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படும் என்பதில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்'' என்று தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் அரசியல் வானில் இந்தக் கட்டமைப்பு எத்தகைய திருப்பங்களைக் கொண்டுவரக் காத்திருக்கிறது எனப்புரியவில்லை. எதிர்காலத்தில் எமக்குப் புரியாமலா போய்விடும்?

# இராணுவ உயர்மட்டக் குழு ஆயுதம் வாங்க சீனா பயணம்

இலங்கை இராணுவத்துக்குத் தேவையான ஆயுதத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான பேச்சுகளை நடத்துவதற்காக இராணுவ உயர்மட்டக்குழு ஒன்று சீனாவுக்குச் சென்றுள்ளது.

இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான குழுவினரே சீனாவுக்குச் சென்றுள்ளனர்.

ஆறுவார காலம் சீனாவில் தங்கியிருக்கும் இந்தக்குழு சீன இராணுவ உயர் அதிகாரிகளை சந்திக்கும். அத்துடன் இலங்கை இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் பயிற்சி குறித்து அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்.

கரு: வித்தகன் **நாட்டுக்கோர் நல்லதம்பி** உரு: சாமி



# சுடர் ஒளி

ஜூன் 05 – 11, 2005



85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401–6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com


## கை நழுவும் நிலையில் அரிய சந்தர்ப்பம்

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு உருவாககூடிய சூழ்நிலைகள் இன்னும் இல்லை.

பொதுக்கட்டமைப்பு உருவானால் புலிகளின் கை ஓங்கிவிடும் என்றும் அதனை உருவாக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் உடனடியாக அரசில் இருந்து தாம் வெளியேறிவிடப் போவதாகவும் ஜே.வி.பி. உறுதியாகத் தெரிவித்துவிட்டது.

ஜப்பானிலும் ஜே.வி.பி தலைவர் இதனையே கூறி இருக்கிறார். பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி. எதிர்க்கும் என்று அவர் தெரிவித்திருப்பது, ஜப்பானிய சமாதானத் தூதுவர் யசூஷி அகாசிக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜே.வி.பி தலைவர்களை ஜப்பான் அழைத்ததன் உள்நோக்கமே அவர்களை சமாதானம் செய்து பொதுக்கட்டமைப்பை ஏற்கவைக்கத்தான்.

பொதுக்கட்டமைப்புகுறித்து கண்டி உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் பெரும் ஆரவாரம் செய்த ஜனாதிபதியும் தற்போது ஓய்ந்துவிட்டார்.

தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் என்று சவால்விட்டவர் தற்போது மௌனம் சாதிக்கிறார்.

சர்வதேச நாடுகள் முன் பொய்யர் என்ற அவப்பெயரை சுமக்க வேண்டிவருமே என்ற கவலைகூட அவருக்கு இல்லை.

ஜே.வி.பியின் முட்டுக்கட்டை ஒருபுறம் இருக்க முஸ்லிம் எம்.பிக்களின் நெருக்குதலும் ஜனாதிபதியை இக்கட்டான நிலையில் தள்ளிவிட்டிருக்கிறது.

முஸ்லிம்களின் தரப்பில் நான்கு அமைச்சர்களும் ஒரு பிரதி அமைச்சரும் ஜனாதிபதியை நேரில் சந்தித்து உத்தேச பொதுக்கட்டமைப்பில் புலிகளுக்குக் கொடுக்கும் அதே சம பிரதிநிதித்துவத்தைக் கோரி உள்ளனர்.

ஆகவே பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் அரசு காலம் கடத்தக் கடத்த கட்டமைப்புக்கான வாய்ப்புக்கள் அருகிவருகின்றன. இப்போது பொதுக்கட்டமைப்பு இல்லை என்ற நிலைமையே ஓங்கிநிற்கிறது. பேரினவாதிகளின் பிடிக்குள் ஜனாதிபதி நன்கு சிக்கிவிடடார்.

இப்படியான நிலைமையிலேயே ''பொதுக்கட்டமைப்புக் குறித்து இனிப் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. அந்த மாயையில் சிக்கி ஏமாறவேண்டிய தேவையும் இல்லை'' என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அதுமட்டும் அல்ல புலிகளின் அனைத்துலகத் தொடர்பகம் தனது ஆய்வறிக்கையில் ''போரையே தனது தீர்வாக அரசு தெரிவு செய்துள்ளது. போருக்குத் தயாராகும் நிலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டுள்ளனர்'' என்று தெரிவித்துள்ளது.

''தமிழர்களுக்கு வழங்கப்பட்ட ஒரே தெரிவு போர் மாத்திரமே. போர் தவிர்க்க முடியாததொன்று. போர் மிகவும் குறுகிய காலத்தில் நடக்கும் என்பதே எமது இறுதிச் சொற்கள்'' என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு–கிழக்கு மனித உரிமைகள் செயலகமும் இதே போன்ற ஓர் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

''இலங்கையில் அடுத்தடுத்து நடந்து வரும் நிகழ்வுகள் நாட்டை மீண்டும் ஒரு போருக்குத் தள்ளுகின்றன'' என்று அது தெரிவித்துள்ளது.


இப்படியான சூழ்நிலைக்கான காரணங்களை அது பட்டியலிட்டுகக் காட்டிஇருக்கிறது. ஆகவே தற்போதைய யுத்த நிலைக்கு அரசே முழுக் காரணம் ஆகும்.

20 வருட காலத்தில் சமாதானத்துக்குக் கிடைத்த அறிய வாய்ப்பு 2002 பெப்ரவரியில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தம். அது கை நழுவிப் போவதையே நிலைமைகள் காட்டுகின்றன.

# பொதுக்கட்டமைப்பும் புத்தர்சிலை விவகாரமும்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க என்ன செய்யப்போகிறார்? புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை அவர் ஏற்படுத்துவாரா? இல்லையேல் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவேன் என்று ஜனாதிபதி கூறுவது வெறும் வார்த்தை ஜாலங்களா?

இவைதான் இன்றைய இலங்கை தேசிய அரசியலில் எழுதப்படும் முக்கியமான கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கு ஜனாதிபதியைத் தவிரவேறு எவராலும் உறுதியான பதிலைக் கூற முடியாது. ஆனாலும் இந்தக் கேள்விகளுக்கு பதில் பெற முன்னர் நாம் இன்னுமொரு முக்கியமான கேள்விக்கும் விடைகாண வேண்டியுள்ளது. அதுதான் திருகோணமலை புத்தர் சிலை விவகாரம். இதற்கான தீர்வு என்ன?



ஆழிப்பேரலை அனர்ந்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் பரபரப்பின கருத்துக்களைத் தெரிவித்துவந்த அரசாங்கம் இப்போதெல்லாம் இந்த விடயத்தில் அமைதி காத்து வருவதற்கான காரணங்களில் பிரதானமானது தான் திருகோணமலை விவகாரம். திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தை மேலோட்டமாக பார்த்தால் அது வெறும் சிலை சம்பந்தமான பிரச்சினையாகவே இருந்தாலும் அதன் உள்ளடக்கத்தை நோக்கினால் தமிழர் தாயகத்தின் தலைநகரத்தில் இடம்பெற்ற பகிரங்கமான அத்துமீறல் அல்லது பலாத்காரமான ஒரு குடியேற்றமாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

திருமலை புத்தர் சிலை தமிழர்களின் பொறுமைக்கு முடிவுகட்டிவிடும் என்ற அச்சம் இருப்பதுபோல் இது ஆளும் கூட்டணி அரசாங்கத்துக்கும் ஒரு இறுதி முடிவைக் கட்டிவிடுமோ என்ற அச்சமும் எழாமலில்லை. திருமலையில் குறிப்பிட்ட புத்தர் சிலை வைக்கப்பட்டபோது – அந்த சந்தர்ப்பத்தில் இந்த சிலைவைப்புக்குப் பின்னாலோ அல்லது சிலை வைத்தவர்களின் பின்னாலோ பலமான சக்திகள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் இப்போது நிலைமையோ தலைகீழ். இந்த விடயத்துக்குப் பின்னால் பல சக்திகள் பல்வேறு பெயரில் திரண்டு நிற்கின்றன.

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு. சிங்களவர்களை – பௌத்தர்களை – பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடு. அவர்கள் நினைத்தால் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் (புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தவிர) தமது மதம் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடலாம். இலங்கை அரசியலமைப்பிலும் பாதுகாப்புத்துறை கட்டமைப்பிலும் இதற்கு முழுமையான ஆதரவும், அனுசரணையும் உண்டு. இந்த விடயங்களை அடிப்படையாக வைத்துத்தான் இன்று திருமலை புத்தர் சிலை விவகாரம் கையாளப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்துக்கு இந்த விவகாரம் ஒரு பெரும் தேவையற்ற தலையிடியைக் கொடுத்திருக்கிறது என்பது தான் மறுக்கமுடியாத மறைக்கமுடியாத உண்மை. பொதுக்கட்டமைப்பு என்ற விடயத்துக்குச் செல்ல முன்னர் இந்த விடயத்தில் அரசாங்கம் ஒரு தீர்வொன்றைக் காணவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் எழுந்திருக்கும் சிங்கள அடிப்படை வாதிகளின் எதிர்ப்புகளை சமாளிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் அரசாங்கம் திருமலை புத்தர் சிலை விவகாரத்தை எப்படித்தான் சமாளிக்கப் போகிறது?

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பு என்ற போர்வையில் புலிகளுக்கு தனிநாடு வழங்க ஜனாதிபதி சந்திரிகா முயல்வதாகவும், நாட்டைக் கூறுபோட எடுக்கப்படும் முயற்சிகளுக்கு சிங்கள தேசாபிமானிகள் ஓரணியில் எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டுமெனவும் கூறி இங்கே சிங்கள தேசத்தில் பெரும் ஓலங்கள் எழுப்பப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா, திருகோணமலை புத்தர் சிலை விவாகாரத்தில் தலையிட்டு அந்த புத்தர் சிலையை அகற்ற மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ நடவடிக்கை எடுப்பாராயின் சிங்கள தேசத்தில் அவருக்கெதிராக பெரும் விமர்சனம் எழும். சிங்கள அடிப்படைவாதிகள் அவரை நாட்டின் துரோகத்தனத்திற்கு உதாரணம் காட்ட முயல்வார்கள். எனவே இந்த திருமலை புத்தர் சிலை விவகாரத்தை ஜனாதிபதி எவ்வாறு கையாளப் போகிறார் என்ற கேள்விக்கும் எவராலும் உறுதியான பதிலைக் கூறமுடியாது.

சிறிலங்கா அரசாங்கத்தின் ஆட்சியில்பௌத்தத்திற்கு இருக்கும் மேலாண்மை, அந்த ஆட்சியின் நீதித்துறைக்கும் அப்பாற்பட்டதாக இருப்பது தான் விந்தையானது. திருமலை புத்தர் சிலை விடயம் தொடர்பில் திருமலை நீதிவான்விடுத்த பணிப்புரையைக் கூட நிறைவேறற் முடியாத – நிலையில் பௌத்த – சிங்கள அடிப்படைவாதத்தின் பின்னால் நீதித்துறை மண்டியிட்டு நிற்கின்றது. உலக மனிதர்களுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்த கௌதம புத்தர் இன்று சிங்கள அடிப்படைவாதம் – அரசியலுக்குள் சிக்குண்போய் இராணுவ காவலுக்கு மத்தியில் நிஷ்டையில் இருக்கிறார்.

இதுதான் உண்மை

சிங்கள தேசத்தின் அரசியலில் உள்ள சரிபாதியானவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த பொதுக்கட்டமைப்பு முயற்சியை ஆதரிக்கிறார்கள் என்றே கூறப்படுகிறது.

பெரும்பாலானவர்கள் இதனை ஆதரிக்கிறார்கள் என்பதாகவே கருத்துச் சொல்லப்படுகிறது. அதேசமயம் திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் இந்த ஆதரவைத் தெரிப்பவர்கள் மாற்றுக் கருத்தையே கொண்டிருக்கிறார்கள். இது தான் உண்மை. திருகோணமலையை தமிழர் தாயகமாக எப்படி நினைப்பது? திருமலையில் புத்தர் சிலைகளை எங்கு வேண்டுமானாலும் அமைக்கலாம் என்றவாறான கருத்துக்களையே பெரும்பான்மையானவர்கள் கொண்டிருக்கின்றனர். பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பது என்பது அவர்களின் அரசியலாகும். சர்வதேசத்துக்குக் காட்டும் நாடகமே அது. ஆனால் அதே நாடகத்தை – கருப்பொருளை – திருமலை புத்தர்சிலை விடயத்தில் காட்ட முடியாது. சிங்கள பௌத்த மேலாண்மை முன்னிலையில் சிங்களத் தேசியம் தனது உண்மையான சுயருபத்தையே காட்டும்.

**சிவன்**

இவ்வாறானதொரு பின்னணியில் தான் ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த முயல்கிறார். ஜனாதிபதி நாட்டுக்கும், தமிழர்களுக்கும் நல்லது செய்ய வேண்டுமென நினைப்பவராக இருந்தால் திருமலை விடயத்தில் அதனைச் செய்துகாட்ட வேண்டும். அவரிடம் நிறைவேற்று அதிகாரம் என்ற ஒன்று உள்ளமையே இதற்குப் போதுமானது. பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதை சிங்கள தேசிய எதிர்ப்புக்குப் பயந்து நிறுத்தாமலிருக்க ஜனாதிபதி தீர்மானிப்பாராயின் திருமலை விடயம் அவருக்கு ஒருதூசு. ஆனால் ஜனாதிபதி அவ்வாறு செய்யமாட்டார். ஏனெனில் சிங்களத் தேசியத்தை நம்பித்தான் அவரது அரசியல் இருக்கிறது. அவரது அரசியலை அடிப்படையாக வைத்தே முடிவுகளை எடுப்பார். ஒரு நாள் கூத்துக்கு மீசை மழிக்காமல் இருப்பதே அவரது எண்ணம். இந்நிலையில் ஒருவருட காலத்துக்கு மட்டுமான பொதுக்கட்டமைப்புக்கு அவர் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி விடுவாரா என்ன?


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
| --- | --- | --- |
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |

# புதைந்து போன மர்மம்

– மணியோசை
கே.பி.பி.புஷ்பராஜா –



தோட்டத்துரையின் பங்களாவை நோக்கி குறுக்குப்பாதை வழியாக தோட்டத் தலைவர் தங்கசாமி, பெரியகங்காணி பெரியசாமி, மலையப்பன் ஆகியோருடன் கந்தசாமியும் போய்க்கொண்டு இருந்தான்.

அப்போது இரண்டாம் இலக்க மலையில் கொந்தரப்பு புல் வெட்டும் வேலையை முடித்தகையோடு, தலையில் மிலார்க் கட்டையை சுமந்தபடி போய்க்கொண்டு இருந்தான். கந்தசாமியின் ஆத்தா இருளாயி வலது கையில் சுரண்டியையும் பிடித்துக்கொண்டு பீலி லயத்துக்கு போவதற்காக அதேக் குறுக்குப்பாதையின் எதிரே வந்து கொண்டு இருந்தாள்.

கூட்டத்தோடு கூட்டமாக எதிரே வருவோருடன் வெள்ளையும் சொல்லையுமாக கந்தசாமியும் வருவதைப் பார்த்ததும் இருளாயி ஆடிப்போய் விட்டாள்.

''டேய் கந்தசாமி, வெள்ளைக்கார தொரமாரு மாதிரி உடுத்திக்கிட்டு எங்கேடா போறேய்?'' என தன் மகன் கந்தசாமியைப் பார்த்துக் கேட்டாள் இருளாயி.

''நம்ம தொரையைத் தான் பார்க்கப் போறோம் ஆத்தா'' என கந்தசாமியும் சட்டெனப் பதிலளித்தான்

''தலைவர் அய்யா நம்ம பயல தொரையோட பேச விடாதீங்க. இந்தப் பசலுக்கு வாயும் சரியில்லீங்க.''

''சரிபுள்ள இருளாயி. நீ லயத்துக்குப் போ. வானமும் இருட்டிக்கிட்டு வருது. நான் பயல பார்த்துக்கெறேன்'' என்றார் தலைவர் தங்கசாமி.

மலையின் உச்சியில் தோட்டத் துரையின் பங்களா தஞ்சாவூர் அரண்மனையைப் போன்று கம்பீரமாகக் காட்சி கொடுத்துக் கொண்டு இருந்தது. மாலை நேர சூரிய ஒளியில் தேயிலைச் செடிகள் பச்சைப்பசேலென பச்சைக்கிளி கலரில் கம்பளி விரித்த மாதிரி பளிச்சென இருந்தன.

பங்களாவை அடைந்ததும் துரையின் இரும்புக் கேட்டை பலமாக தட்டினார் தோட்டத்து தலைவர் தங்கசாமி. உள்ளே இரும்புக் கூட்டுக்குள் உறங்கிக் கொண்டு இருந்த துரையின் அல்சேசன் நாய் மெதுவாக தன் தலையைத் தூக்கி எழும்பி சத்தம் கேட்ட திசையை நோக்கி வேகமாக உறுமிக்கொண்டு லொள், லொள் என்று குரைத்தது.

அல்சேசன் நாயின் சத்தம் கேட்டு பங்களாவின் உள்ளே இருந்து கேற்றருகே ஓடி வந்து காவற்காரன் சிவனு கேற்றைத்திறந்து ''இப்படியே நில்லுங்க, தொர வருவாரு'' எனவீம்போடு சொல்லிவிட்டு உள்ளே போனவன் பத்து நிமிடம் கழித்தும் வெளியே வரவே இல்லை.

பங்களாவின் முற்றத்தில் செக்கச்செவேலென அந்தூரியம் செடிகள் பூத்துக் குலுங்கிக் கொண்டு இருந்தன. வேலியை ஒட்டியிருந்த டேலியா மரத்தில் சிகப்பு, மஞ்சள் நிறங்களில் பூக்கள் விரிந்து அந்தப் பங்களாவின் இயற்கை அழகை மேலும் அழகுபடுத்திக் கொண்டு இருந்தன.

அப்போது கந்தசாமி பங்களாவின் பின் பக்கம் தலையை நீட்டி நோட்டம் பார்த்தான். பங்களாவின் பின் பகுதியில் கோவா, லீக்ஸ், கரட் முதலியன பயிர் செய்யப்பட்டிருந்தன. தோட்டத்துப் பொடியன்கள் மூவர் துரையின் மரக்கறித் தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்தனர். அந்த மரக்கறிப் பாத்திகளுக்கு தண்ணீர் ஊற்ற வசதியாக பெரிய தண்ணீர் தாங்கித் தொட்டி ஒன்றும் இருந்தது. அத் தண்ணீர் தொட்டியிலிருந்து பாத்திகளுக்கு தண்ணீர் செல்ல வசதியாக பைப்பும் போடப்பட்டு இருந்தது.

இதைப் பார்த்ததும் கந்தசாமிக்கு இரத்தம் கொதித்தது. நம்ப லயத்து சனங்களுக்கு குடிக்கக்கூட தண்ணி இல்லை. இந்த தொரப்பயலுக்கு பெரிசா பைப்பு பூட்டி மரக்கறித் தோட்டத்துக்கு தண்ணீர் பாச்சுறான்னுங்க. நம்ம சனங்க இந்தியாவிலிருந்து வந்து நூற்றிமுப்பது வருசமா இந்த மண்ணையே நம்பி, இந்ததேசம் தான் நம்ப தேசம்ன்னு நம்பிக்கையா வாழ்ந்தாலும் இந்த தொரைமார் நம்பள வசதியா வாழ விடமாட்டேங்கிறாங்க. இவனுங்க மட்டும் அந்தூரியம் பூவையும், மரக்கறிகளையும் நட்டு கொழும்பூருக்கு ஏத்தி பணம் சம்பாதிக்கிறானுங்க. நாங்க ரெண்டு பணம் தேடிக்கலாமுண்ணு தோட்டத்து லயத்தில பொட்டிக் கடை வச்சா செக்கு ரோலுல்ல பேலர வெட்டி பற்றுச்சீட்டை குடுத்து கழுத்தப்புடுச்சி தோட்டத்தவிட்டே தொரத்தி விட்டுப்புரானுங்க. எத்தனை முறை சங்கத்தில எடுத்துச் சொல்லியும் என்னா பிரயோசனம் என தனது மனதிற்குள் தோட்டத்து துரையை திட்டிக் கொண்டிருந்தான் கந்தசாமி.

சிறிது நேரத்தில் துரை மகிபால தன் பங்களாவின் உள்ளேயிருந்து அரைக்கால் சட்டை, கைகட்டை சேட், காங்கிக்கலரில் வட்டத் தொப்பி, காலுக்கு சப்பாத்தும் போட்டுக் கொண்டு டாம்பீகமாக வாசலுக்கு வந்தார்.

துரையின் வருகையைக் கண்டதும் எல்லோரும் கூனிக்குறுகிப்போன நிலையில் பயபக்தியுடன் ''சலாம் தொரே'' என்றனர். ஆனால் கந்தசாமி மட்டும் ''சலாம்'' சொல்லவில்லை. கந்தசாமியும் வந்திருப்பதை துரை கண்டதும் அவரது முகம் நாலு நாட்களுக்கு முன் சுட்ட பணியாரம் மாதிரி உப்பிப் போய்விட்டது.

''தலைவரு லயத்திலிருந்து எல்லாரும் ஏன் கூட்டமா வந்திருக்காங்க?''

துரையின் கேள்விக்கு தலைவர் தங்கசாமி பதில் கூறுவதற்கு முன்பே கந்தசாமி முந்திக் கொண்டு ''லேபர் ரூமுக்கு போய் எல்லோருமே கதைப்போம்'' என்றான்.

கந்தசாமியின் இச் செயலினால் துரைக்குப் பெரும் சங்கடமாகிப் போய்விட்டது. குளிர்காற்று சில்லென வீசிய அந்த நேரத்திலும் துரையின் முகத்தில் வியர்வை புடைரத் தொடங்கியது.

''என்னா வந்தது? என்னா விசயம்?'' துரை மகிபால வந்தவர்களிடம் மீண்டும் வினா எழுப்பினார்.

தலைவர் தங்கசாமி மீண்டும் பேச முந்தப் பார்த்தார். தலைவரை பேசவிடாது தடுத்தான் கந்தசாமி.

லேபர் ரூமின் நாற்காலியில் எல்லோருமாக உட்கார கந்தசாமி பேச்சை ஆரம்பித்தான்.

''நம்ம தோட்டத்துல ஒவ்வொரு லயத்திலும் பனிரெண்டு காம்பராயிருக்கு. தோட்டத்துல மொத்தம் அஞ்சு லயன்கள் இருக்கு. இந்த அஞ்சு லயன்களுக்கும் பைப்புத் தான் இருக்கு. இந்த அஞ்சு பைப்பும் எங்க அப்பன், பாட்டன் காலத்துல சீமைத் துரைமாரு பூட்டினது. இன்னைக்கு நாட்டுல்ல என்னென்னவோ மாறுது. ஆனால் நாங்க பழைய நிலைமையிலேயே தான் வாழுறோம். ஒரு லயத்துக்கு ஒரு பைப்பு இருப்பதினால, எங்க சாதி சனங்க ரொம்பவும் கஷ்டப்படுறாங்க. குடிக்கவும், குளிக்கவும் உடுப்புக் கழுவவும் மட்டுமல்ல கக்கூஸ் போகவும் இந்த பைப்பு தண்ணியத்தான் பாவிக்கிறாங்க. அதுனால மூணு காம்பராவுக்கு ஒரு பைப்பு என்று போட்டுத்தாங்க'' என்றான்.

''ச்...சே... இதுதான் உங்க பிரச்சினையா? நாங்க வேற... ஏதும்... என்று பயந்து போயிட்டம். நீங்க எல்லாம் விவரமா கடதாசியில்ல எழுதித்தாரது. நாங்க அதை கொழும்பு லொக்கு கம்பனிக்கு அனுப்பி செஞ்சு தாரது.'' துரையின் பதில் எல்லோரையும் சந்தோசப்படுத்தியது.

அன்று இரவு ஏழு மணி. இலேசான மழை மெல்லிசைக்கீதம் போல பெய்து கொண்டு இருந்தது. தோட்டத் துரையின் பங்களா காவற்காரன் சிவனு பீலி லயத்துக்கு அரக்கப்பரக்கஓடி வந்தான்.

''என்னடா செவனு இந்தப் பக்கம்?''

''நம்ப துரை உன்னை கையோட கூட்டிக்கிட்டு வரச் சொன்னாரு. வா கந்தசாமி போவோம்'' என்றான் சிவனு.

இருவரும் துரையின் பங்களாவுக்கு சென்றனர். துரை கந்தசாமியைக் கண்டதும் அவனை பங்களாவுக்குள் அழைத்துச் சென்றார். கந்தசாமியை கதிரையில் உட்காரச் சொன்னார். முன்பு வீம்பு பேசியவன் இப்போது கதிரையில் உட்காரக் கூச்சப்பட்டான். துரையின் பேச்சிலும் உபசரிப்பிலும் தன்னையே மறந்துவிட்ட கந்தசாமி ''துரை நீங்க சொல்லுற மாதிரியே செய்யிறேன். என்னை கங்காணியாக் கீறிங்க தானே?'' இப்போது கந்தசாமியால் துரையை எதிர்த்துப் பதில் சொல்ல முடியவில்லை.

''கந்தசாமி நீ ஒன்றுக்கும் பயப்படாதே ஒரு கிழமையில் நீ நம்ப கங்காணி! உனக்கு குவாட்டஸ் வீடும் நாம் தர்றோம்.''

வீட்டுக்கு வந்து தூங்கியவன் எல்லோருக்கும் முன் அதிகாலை மூன்றுமணிக்கே எழுந்து கொண்டான்.

லயத்தைவிட்டு வெளியே வந்தான். நாலா பக்கமும் பார்த்தான். கண்கள் போன தூரத்துக்கு பார்வையைச் செலுத்தினான். எவரும் அவனது பார்வையில் விழவில்லை. லயத்து நாய்கள் மட்டும் கந்தசாமியைக் கண்டு லொள் லொள்ளென குரைத்தன. ஏற்கனவே துரை கொடுத்திருந்த இறைச்சித் துண்டுகளை நாய்க்கு வீசினான். லயத்து நாய்கள் இறைச்சித் துண்டுகளை கவ்விக்கொண்டு தொங்கல் லயத்துப் பக்கத்துக்கு ஓடிவிட்டன. மீண்டும் நோட்டம் விட்டான்.

பேய் இருட்டில் கந்தசாமியின் மனதில் ஒருவித பயம் அப்பிக் கொண்டது. லயத்து நாய்களின் லொள், லொள் சத்தமும் ஓய்ந்தது. எல்லா லயத்துப் பக்கமும் போய்ப் பார்த்தான். மனசு ரொம்பத்தான் சஞ்சலப்பட்டது. லயத்து காம்பராவுக்கு வந்தான். கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தான். மனசு அடங்காதது மாதிரி இருந்தது.

உறங்கும் சனங்கள் விழித்துக் கொள்ளக் கூடாது என மனதில் மாரியாத்தாளை வேண்டிக் கொண்டான். மார்கழி குளிர் அவன் உடலை முள்ளாய்க் குத்தியது. அவனுக்கு முன்பே யாரோ அந்த அசிங்கமான காரியத்தை செய்திருந்தனர்.

பெரும் மனப்பயம் அவனது உயிரை வாங்கியது. தூக்கம் வரவில்லை. கம்பளி பெட்சீட்டை எடுத்து போர்த்திக் கொண்டான். வயிற்றுக்குள் கடமுடா என சொப்பிங்பேக் கசங்கும் சத்தம்.

பொழுது விடிந்ததும் லயத்து காம்பராவுக்கு வெளியே வந்த சனங்கள் ''அடப்பாவிப்பயல் எவனோ இந்த அசிங்கத்தனமான வேலையை செஞ்சுப்புட்டானே! சண்டாளாப் பசங்க; நல்லா இருப்பானுங்களா?'' என கத்திக் குழறத்துவங்கினர்.

ஸ்டோரிலிருந்து லயத்து மணி அலறியது. கந்தசாமி அவசர அவசரமாக தோட்டத்துக்குப்போக கவ்வாத்து கத்தியை வேகமாக தேடிக்கொண்டு இருந்தான். அவனது கவ்வாத்து கத்தி கிடைக்கவில்லை. அவனுக்கு இப்போது பெரும் சங்கடமாய் இருந்தது.

கந்தசாமியின் ஆத்தா காம்பரா ஸ்தோப்பிலிருந்த அடுப்பில் ரொட்டி சுட்டுக் கொண்டு இருந்தாள். ''ஆத்தா நீயேதும் என்னுடைய கவ்வாத்து கத்தியை பார்த்தியா?'' அவனது பேச்சில் பயமும் தடுமாற்றமும் கலந்து சோகம் அப்பி இருந்தது.

''ஏண்டா காலம்பரவே தடுமாறுது. எங்கேயாவது வச்சிருப்பா, நல்லாய்த் தேடிப்பாரு'' என்றாள் இருளாயி.

கந்தசாமி எவ்வளவோ தேடியும் கத்தி கிடைக்கவில்லை அப்பொழுது பொலிஸ் ஜீப் ஒன்று வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து 10 பொலிஸ்காரர்கள் குதித்து இறங்கினார்கள். அவர்களுக்கு மத்தியில் காவற்காரன் சிவனும் இருந்தான்.

பொலிஸார் நேராக பீலி லயத்து தொங்க காம்பராவுக்குள் நுழைந்தனர். காம்பராவின் உள்ளே கந்தசாமி கவ்வாத்து கத்தியைக் காணாது தடுமாறிக் கொண்டு இருந்தான்.

''இவனா அவன்?'' பொலிஸ்காரன் காவற்கார சிவனுவிடம் கேட்க ''இவன் தாங்க றாலாமி கந்தசாமி'' என்றான்.

ஒரு பொலிஸ்காரன் கந்தசாமியை தரதரவென வெளியே இழுத்துக் கொண்டு வந்தான். அப்போது தோட்டத்து துரையும் பந்துடி களத்துக்கு வந்து சேர்ந்தார்.

''டேய் இது உங்க கத்தி தானே!''

''ஆமாங்க'' என்று கந்தசாமி சொன்னதும் பொலிஸ்காரரில் ஒருவன் அவனது பிடரியில் அடிவிட்டான்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

முதலாவது

பிறந்ததின வாழ்த்து



செல்வி

ஸ்வேத்தா அஸ்லி

பிரித்தானியாவில் வசித்துவரும் விமலேந்திரன் ஷமிலா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஸ்வேத்தா அஸ்லி தனது முதலாவது பிறந்த தினத்தை 08.08.2005 அன்று லண்டனிலுள்ள தனது இல்லத்தில் பெற்றார், பெரியோர் ஆசீர்வாதத்துடன் கொண்டாடுகின்றார்.

இவரை இலங்கையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியமாமா, பெரியமாமி, விஜய், கோகுல், பிரதாப் மச்சான், சின்னமாமா, சின்னமாமி, பானு, லக்ஷி மச்சாள், செந்தூர், அஜய் மச்சான், குட்டிமாமா, குட்டி மாமி, தீர்த்தி, பிருந்தி மச்சாள், துஷார் மச்சான், ஆசைமாமா, ஆசை மாமி, நிரோஷ் மச்சான், நிவேதி மச்சாள், பெரிய பெரியப்பா, பெரிய பெரியம்மா, வினிதாக்கா, பிரசன்னா அண்ணா, பெரியப்பா, பெரியம்மா, சங்கவியக்கா, சயந்துஅக்கா, டிலக்ஸ் அண்ணா, மற்றும் பெரியபாட்டி, கிருஷாந்தி, சின்னைநாத்தா, சின்னபாட்டி, வித்தியா சித்தி, ரஞ்சித் மாமா மற்றும் லண்டனில் வசிக்கும் அம்மம்மா, அம்மப்பா, ரகுமாமா (தாய்மாமன்) சுஜன்மாமா(தாய்மாமன்), ரமேஷ்மாமா, ஆதவன் பெரியப்பா, குமுதா பெரியம்மா, சிறீதரன்மாமா குடும்பம், சௌந்தராஜன் குடும்பம் அனைவரும் இவரை பதினாறும் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:

த.விமலேந்திரன் ஷமிலா (பெற்றோர்)

பிரித்தானியா (லண்டன்)





# ரோபோ டாங்கிகள்

தற்போது ஈராக்கில் நடைபெறும் யுத்தத்தில் கம்ப்யூட்டர் 'ரோபோ'க்கள் இயக்கும் டாங்கிகளையும் ரோபோ வீரர்களையும் களம் இறக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ரோபோ வீரர்களால் போர்க் களம் இறக்க... ரோபோ வீரர்களால் போர்ச் செலுத்தப்படவிருக்கும் ரோபோ இராணுவ டாங்கிகள் சுமார் 1 மீட்டர் உயரம் கொண்டவை. மேலும் இந்த டாங்கிகளில் 8 அதிநவீன வீடியோ கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் எதிரி இராணுவத்தினரின் 800 மீட்டர் தூரம்வரை உள்ள இலக்குகளை அடையாளம் கண்டு கொள்ள முடியும். எதிரிகளை அடையாளம் கண்டதும் இந்த ரோபோக்கள் ''படபட'' என்று சுட்டுத்தள்ளவிடும்.

கடந்த காலத்தில் ''ரோபோக்கள்'' எதிரிகள் வைக்கும் குண்டுகளை கண்டறிந்து அவற்றைச் செயலிழக்கச் செய்யப் பயன்படுத்தப்பட்டன.

இந்தப் புதிய வகை "ரோபோ" இராணுவ வீரன் ஒருவனது விலை என்னவென்று தெரியுமா? ஒரு கோடி ரூபாய். இது அணு பாட்டரியில் ஒரு தடவை ஏற்றப்பட்ட மின்னேற்றத்தில் தனது ரோந்துப்பணியில் ஈடுபடும் வல்லமை கொண்டதாம்.



ரோபோ யுத்தம் சகல சாவதேச இராணுவ தந்திரங்களில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுகிறது.

அமெரிக்கா ஈராக்கில் களம் இறக்க இருக்கும் தானியங்கி கம்ப்யூட்டர் ரோபோக்களினால்

# உலகப்புகழ் பெற்ற ஓவியம்

இங்கே நீங்கள் காணும் ஓவியம் உலகப்புகழ்பெற்றது. 1507ஆம் ஆண்டு தலைசிறந்த ஓவியக் கலைஞரான லியனாடோ டாவின்ஸி என்பவரால் இது வரையப்பட்டது. தாம் வரைந்த இந்த அழகிக்கு டாவின்ஸி 'மொனாலிஸா' என்று பெயர் சூட்டினார். இந்த ஓவியம் ஒரு உன்னத படைப்பு என்று முழு உலகுமே ஏற்றுக் கொண்டிருக்கிறது.



இந்த ஓவியம் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் உள்ள 'லூவர்' என்ற தொல்பொருள் காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இது யாருடைய தோற்றம் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் இந்த அழகியின் தோற்றம் அனைவரையும் கவரக்கூடியவாறு மிக அழகாக வரையப்பட்டுள்ளது.

1963ஆம் 1972ஆம் ஆண்டுகளில் அமெரிக்கத் தலைநகர் நியூயோக்கில் நடைபெற்ற ஓவியக்கண்காட்சியில் இந்த ஓவியம் 120 கோடி ரூபாவுக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதன் மதிப்பு 200 கோடி ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நாள்தோறும் சுமார் 1800 பேர் இந்த ஓவியத்தை பார்த்து மகிழ்கிறார்களாம்.

# ஹெலிக்கொப்டர்

20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் பிரான்ஸ் நாட்டிலேயே ஹெலிக்கொப்டர் முதன் முதலாகத் தயாரித்துப் பறக்க விடப்பட்டது.

உலகப்புகழ் பெற்ற 'மொனாலிஸா' ஓவியத்தை வரைந்த லியனர்டோடாவின்ஸி என்ற ஓவியர்தான் 15ஆம் நூற்றாண்டில் ஹெலி கொப்டர் ஒன்றை தனது கற்பனையில் வடிவமைத்து வரைந்து காட்டினார். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.

ஆனால் தொழில்நுட்பச் சிறப்பு மிக்க, கட்டுப்பாட்டுடன் செலுத்த வல்ல ஹெலிக்கொப்டர் 1963 ஆம் ஆண்டு ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டு பறக்கவிடப்பட்டது. 'ஹென்னா ரேட்ஸ்வே' என்பது தான் இதைத் தயாரித்தவரின் பெயராகும். இவர் தம்மால் தயாரிக்கப்பட்ட இந்த ஹொலிக்கொப்டருக்கு FW 61 என்று பெயர் சூட்டினார். இதை அவர் பரீட்சார்த்தமாக 4.6 மீட்டர் உயரத்தில் 90 மீட்டர் தூரத்துக்கு பறக்கச் செய்தார்.



சுழலக்கூடிய சிறகுகளைக் கொண்ட ஹெலிக்கொப்டரினால் ஆறு திசைகளில் பறக்க முடியும். ஆனால் ஒரு விமானம் ஐந்து திசைகளில் மட்டுமே பறக்கும். அது மட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றவாறு ஹெலிக் கொப்டர் ஒன்றினால் மிதந்து கொண்டு நிற்கவும் முடியும். இது ஹெலிக்கொப்டரில் நாம் காணும் சிறப்பம்சமாகும். விமானத்தினால் இவ்வாறு ஒரு இடத்தில் நின்றவாறு மிதக்க முடியாது.

# டைனோசர் யுகம்

டைனோசர் மிருகம் 9 கோடி ஆண்டுகளிலிருந்து 20 கோடி ஆண்டுகளுக்கு முன்புவரை வாழ்ந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் இப்போது உறுதியாக கூறுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் அண்மையில் ஆபிரிக்கா கண்டத்தில் 9 1/2 கோடி வருடங்களுக்கு முன்பிருந்த அபூர்வ டைனோசர் விலங்கின் படிமத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.

9 1/2 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலப்பரப்பாக இருந்த தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, மடகாஸ்கார், இந்தியா ஆகிய நாடுகளில் இந்த டயனோசர் அதிகளவில் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.



# செய்மதிப்புரட்சி


சென்றநூற்றாண்டில் இராணுவ வீரர்களின் பலத்துடன் அவர்கள் வைத்திருந்த நவீன ரகத் துப்பாக்கிகள், மற்றும் 'டாங்கி' போன்ற இராணுவ சாதனங்கள், போர் விமானங்களின் எண்ணிக்கை, ஆழ்கடலில் உலாவும் சப்மரீன்கள் ஆகியவற்றை வைத்தே ஒரு நாட்டின் பலம் கணிக்கப்பட்டது.

இப்போது விண்கலங்கள் அல்லது செய்மதிகள் செய்த புரட்சியால் ஒரு நாட்டின் வலிமை அது எத்தனை செய்மதிகளை அல்லது விண்கலங்களைக் கொண்டுள்ளது என்பதை வைத்தே கணிக்கப்படும்.

போட்டி போட்டுக் கொண்டு பலம் மிக்க நாடுகள் 'செய்மதி'ப் புரட்சிக்கு தயாராகி வருகின்றன. அரசாங்கங்கள் மட்டுமன்றி தனியார் துறையைச் சேர்ந்த பல நிறுவனங்களும் இம்முயற்சியில் இறங்கியிருக்கின்றன.

இன்று சுமார் பத்து ஆண்டுகளில் 1700 செய்மதிகள் விண்ணில் ... ஏவப்பட இருக்கின்றன.

இன்டர்நெட் என்னும் இணைய தளம், இன்று உலகை உள்ளங் கைக்குள் சுருக்கிவிட்டது போல் கணனி புரட்சிக்கு காரணகர்த்தாவான பில்கேட்ஸ் இப்போது செய்மதிகள் மூலம் பெரும் புரட்சியை உண்டு பண்ணமுயற்சிக்கிறார்.



தற்போது இருப்பதைவிட 2000 மடங்கு அதிக வேகத்தில் 'இன்டர் நெட்' மூலம் அதிகமான தொடர்புகளையும் செய்திகளையும் இமைக்கும் நேரத்துக்குள் அனுப்பவும் பெறவும் அவர் ஏற்பாடுகளைச் செய்கிறார்.

ஒரு 'சொடுக்கு' போடுவதற்குள் ஆயிரக்கணக்கான செய்திகள் செய்மதி தொடர்புகள் மூலம் உலகின் ஒரு கோடியிலிருந்து அடுத்த கோடிக்குப் போய் சேர்ந்துவிடும்.

இதற்கும் 10 வருடங்களில் செய்மதிகள் மிக மிக மலிவான விலையில் விற்கப்படும். இன்று குழந்தைகளுக்கு கடையில் பொம்மைகள் வாங்குவதுபோல் செய்மதிகளையும் வாங்கக் கூடியதாக இருக்கும்.

# கனடா

சனத்தொகை 3கோடியே 10 இலட்சத்து 25 ஆயிரம்.

தலைநகர்:— ஒட்டாவா

மக்கள்:— பிரிட்டிஷ் வம்சாவளியினர், பிரான்ஸ், இத்தாலி நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள், பழங்குடியினர் ஆகியோர் பெரும் பான்மையினராக இருக்கிறார்கள். ஐரிஷ், ஜேர்மன், உக்ரேனியன், டச், கிரீக், போலிஷ், சீன இனத்தைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையினராக இருக்கிறார்கள்.

மொழி:— ஆங்கிலம், பிரெஞ்ச்

மதம்:— கத்தோலிக்கர் 45%. புரட்டஸ்தாந் கிறிஸ்தவர்கள் 36%. தவிர உலகின் ஏனைய பிரதான மதங்களைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையினராக இருக்கிறார்கள்.

பிரதான கைத்தொழில்கள்:— பதப்படுத்தப்பட்ட, பதப்படுத்தப்படாத தாதுப்பொருட்கள், உணவுப் பண்டங்கள், மரம், காகிதப்பொருட்கள், போக்குவரத்து உபகரணங்கள், இரசாயனப்பொருட்கள், மீன்தயாரிப்புக்கள், பெற்றோலியப்பொருட்கள், இயற்கைவாயு ஆகியன.

நாணயம்:— கனேடியன் டொலர் C$



# உலக வரலாறும் மனித விடுதலையும் 3

ஹேகலின்தத்துவார்த்த எழுத்துக்களை ஆன்மீகவாதம் என்றும், புதிரான புராணக்கதை என்றும் கடுமையாக விமர்சித்த கார்ள் மாக்ஸ் அவரது இயங்கியல் கோட்பாட்டை மெச்சத் தவறவில்லை. 'இயக்கத்தின் இரகசியத்தை முதன் முதலாக ஆழமாக விளக்கிய பெருமை ஹேகலைச் சாரும்' எனப் பாராட்டினார். எனினும் ஹேகலின் இயங்கியல் இறையியலில் புதைந்து கிடக்கிறது; பிரபஞ்சம் எங்கும் வியாபித்து நிற்கிறது; ஆகாயத்தில் தலை கீழாகத் தொங்கும் அதனை, பூமிக்குக் கொண்டுவந்து நிலத்தில் காலூன்றச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார் மாக்ஸ்.

ஹேகலின் இயங்கியல் எண்ண விதை பூடகமான ஆன்மீக மேலுறையால் போர்த்தப்பட்டிருக்கிறது. இந்த மேலுறையை கழற்றி எறிந்து விட்டு விதையை மட்டும் எடுக்க வேண்டும் என்று இன்னொரு இடத்தில் கூறுகிறார்.

ஹேகலின் கருத்துலகிலிருந்து இயங்கியலைப் பிரித்தெடுக்கும் அறுவைச் சிகிச்சையை மாக்சீயம் நுட்பமாகச் செய்திருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சை மூலம் பிரபஞ்ச யாத்திரையில் சென்ற இயங்கியல் பூமிக்குக் கொண்டு வரப்படுகிறது. சமூக எதார்த்த நிலத்தில் நிறுத்தப்படுகிறது.

ஹேகலின் ஆன்மீகத்தை மாக்சீயம் விரட்டியது. ஆயினும், ஹேகலின் 'ஆவியை' மாக்சீயத்தால் விரட்ட முடியவில்லை. அது மறைபொருளாக, எதிர்மறையின் சாகாத பண்பாக மாக்சீயத்தில் புரையோடிக் கிடக்கிறது.

மாக்சீயத்தின் பிதாமகர்களான மாக்ஸ், ஏங்கல்ஸ் தொடக்கம், மாக்சீயப் புரட்சிவாதிகளான லெனின், மாவோ மற்றும் பல நவ-மாக்சீய தத்துவ அறிஞர்கள் வரை பலரால் ஹேகலின் இயங்கியல் தத்துவம் பல்வேறு ரகங்களில், பல்வேறு வடிவங்களில் உள்வாங்கப்பட்டிருக்கிறது.

மாக்சின் தோழரான ஏங்கல்ஸ் இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார். இயற்கையின் இயங்கியல் (Dialectics Of Nature) என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் இயங்கியல் விதிகளை விஞ்ஞான விதிகளாக நிறுவ முனைகிறது. உயிருலகமும், பொருளுலகமும் இயங்கியலால் இயக்கப்படுவதாக அவர் தரும் பல உதாரணங்களை இன்றைய அறிவியல் ஏற்க மறுக்கிறது. அன்றைய காலகட்டத்தில், அவர் இயங்கியலின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி எழுதினார் என்பதை இன்று பலர் ஒப்புக்கொள்கிறார்கள்.

இயங்கியலின் அடிப்படையில் ஆன்மத்தின் சூட்சுமத்தை விளக்க முனைந்தார் ஹேகல். அதே இயங்கியல் விதிகளைக் கொண்டு இயற்கையின் இரகசியங்களை விளங்க முனைந்தார் ஏங்கல்ஸ். அதே விதிகளைக் கொண்டு சமூக வரலாற்று இயக்கத்தை விளக்க முனைந்தார் மாக்ஸ்.

ஹேகலின் இயங்கியலுக்கும், மாக்சிய இயங்கியலுக்கும் மத்தியில் அடிப்படையான வேறுபாடு உண்டு என வாதிப்பவர்களும் உளர். ஹேகலின் இயங்கியல் கருத்து நிலை சார்ந்தது; அகவயமானது; அது நிஜவுலகத்தின் நிழலான மனவுலகத்தை ஆராய்கிறது. ஆனால், மாக்சின் இயங்கியல் பொருளியம் சார்ந்தது; அது நிஜவுலகத்தின் மெய்யுண்மைகளை விளக்க முனைகிறது என்பது இவர்களது வாதம். இவ்விதம் ஹேகலின் சிந்தனையிலிருந்து மாக்சீய இயங்கியலை வேறுபடுத்தி, அதனைப் பொருளிய இயங்கியல் (Materialistic Dialectics) என இவர்கள் வர்ணிக்கிறார்கள். இந்த வேறுபாட்டில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் இந்த வேறுபாடு ஆய்வுப் பொருள் சார்ந்தது; ஆய்வுமுறை சார்ந்தது. ஆனால், இயங்கியலின் மூல விதிகளில் அடிப்படையிலான மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இந்த மூல விதிகளை நெறித்தவர் ஹேகல். இது அபாரமான கண்டுபிடிப்பு என மாக்சீயத்தின் தந்தைகளே மெச்சியிருக்கிறார்கள். இந்த மூல விதிகளை மாக்சீயம் உள்வாங்கி, அதன் அடிப்படையில் ஆழமான சமூக ஆய்வுகளையும், நடைமுறைப் பரிசோதனைகளையும் செய்திருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப்போனால், ஹேகலின் இயங்கியல் விதிகளை மாக்சீயம் உள்வாங்கி, அவற்றைச் சீரமைத்து, செழுமைப்படுத்தி, சிறப்பான ஆய்வுக் கருவியாகக் கையாண்டிக்கிறது எனலாம். இயக்கத்தில் இரகசியத்தைக் கண்டுபிடித்த ஹேகல், அதனைப் படைத்தலின் சூட்சுமமாகக் கொண்டார். பிரபஞ்சப் பேரான்மாவின் சிருஷ்டிப்பு வித்தையாகக் கண்டார். இதனால் அவரது இயங்கியல் தத்துவம் ஆன்மீக உலகத்தின் சிகரத்திலிருந்தே மனித வாழ்க்கையை நோக்குகிறது. இந்த நோக்கில், மனித வாழ்வும் மனித வரலாறும் தெய்வீகத் திருக்கூத்தாக அவருக்குத் தென்பட்டன. இயங்கியலின் மூல விதிகளை நெறித்து, அந்தப் பிரமாதமான கண்டுபிடிப்பை ஆன்மீக கருத்துலகில் புதைத்து விடுகிறார் ஹேகல்.

கார்ள் மாக்சின் எழுத்துக்களில் ஹேகலின் இயங்கியல் விதிகள் பொருளுலகின் எதார்த்த களத்திற்கு கொண்டுபவரப்படுகின்றன. மெய்யுலகின் இயங்கும் விதிகளாக அவை நிறுவப்படுகின்றன.

கார்ள் மாக்ஸ் ஒரு பொருளியவாதி, பொருளுலகத்தையே மெய்யுலகமாகக் கண்டவர். பொருளுலுகத்திற்கே முதன்மை கொடுத்தவர். பொருளுலகத்திலிருந்தே மனவுலகம் தோற்றப்பாடு கொள்கிறது என்ற கருத்தைக் கொண்டவர். அவரது உலகப் பார்வை ஹேகலின் ஆன்மீகக் கருத்துலகிற்கு நேர்மாறானது.

ஹேகலின் தரிசனத்தில், வரலாறு என்பது ஒரு தெய்வீகச் சக்தி. மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி. மனித உலகத்திற்கு அந்நியமான சக்தி. மனிதனுக்குப் புறம்பாக நின்று, ஆனால் அதே சமயம், மனிதனுக்கு புலனாகாத ஒரு புனித பயணத்தில், பரிபூரணத்துவத்தை நோக்கிய, முழு மனித விடுதலையை நோக்கிய பரிணாமப் பயணத்தில், மனிதனை வழிநடத்திச் செல்லும் ஒரு சக்தி. இது பிரம்மமாக, பிரபஞ்சப் பேரியக்கமாக, பிரபஞ்ச மனமாக, எங்கும் எதிலும் சர்வவியாபகம் கொண்டு எல்லாவற்றையும் இயக்குகிறது. இது ஓர் இயங்கும் சக்தி. சிருஷ்டி சக்தி. இந்தத் தெய்வீக சக்தி இயங்கியல் சக்கரத்தில் சுழல்கிறது. இயங்கியல் விதிகளுக்கு அமைய இயங்குகிறது. இப்படியாக, ஹேகலின் தத்துவார்த்த எழுத்துக்கள் இயக்கத்தின் மூலம் விதிகளை பிரம்ம சூத்திரமாக மாற்றி, அதன் அடிப்படையில் மனித வாழ்விற்கும், வரலாற்றிற்கும் விளக்கங்கள் கொடுக்கிறது.

கார்ள் மாக்சைப் பொறுத்தவரை, மனிதனின் பொருளிய வாழ்வே எல்லாவற்றிற்கும் மூலமானது. மனித மனமும், மனித உறவுகளும், மனித வாழ்வும், மனித வரலாறும் - எல்லாமே மனிதனின் பொருளிய வாழ்விலிருந்து பிரவாகமெடுக்கின்றன. இந்தப் பொருளிய வாழ்வின் மூல இயக்கமாகவே இயங்கியலை நிறுவுகிறார் மாக்ஸ்.


இந்தப் பொருளிய வாழ்வு மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளால் நிர்ணயிக்கப்படுவதல்ல. மனிதனே பொருளுலகத்தைப் படைக்கிறான். மனித செயற்பாட்டின் மூலமே பொருளுற்பத்தி நிகழ்கிறது. இந்தப் பொருளுற்பத்தியில் நிகழும் ஒட்டுமொத்தமான உறவுகளின் கூட்டமைப்பாக பொருண்மியக் கட்டமைப்பு உருவாக்கம் பெறுகிறது. அதுவே, சமூகத்தின் அடித்தளமாக அமைகிறது. பொருண்மிய வளர்ச்சிப் போக்கில், பொருள் உற்பத்தி வடிவங்களில் தோன்றும் மாற்றங்கள் சமூக அமைப்பிலும் மாற்றங்களை நிகழ்த்துகின்றன. இந்த சமூக மாற்றத்தை நிகழ்த்திச் செல்லும் மாபெரும் இயங்கு சக்தியாக வரலாறு இயங்குகிறது.

பொருண்மிய உறவுகளில் எழும் முரண்பாடும், அந்த முரண்பாட்டைக் களைந்து விட மனிதர்கள் நிகழ்த்தும் போராட்டமும், அந்தப் போராட்டத்தால் நிகழும் சமூக மாற்றமுமாக வரலாறு நகர்கிறது. எனவே, வரலாறு என்பது சமூக மாற்றத்தை நிகழ்த்தும் இயங்கு சக்தி. இது பொருளுற்பத்திக் களத்திலிருந்து எழுவதால் அந்தப் பொருளியல் வரலாறு அல்லது வரலாற்றுப் பொருளியம் (Historica Materialism) என்கிறார் கார்ள்ஸ் மாக்ள் இந்தப் பொருளியல் வரலாற்றை நகர்த்திச் செல்லும் இயங்கு விதிகளாக இயங்கியல் விதிகள் இயங்குகின்றன.

இயங்கியல் பற்றி விளக்கமான ஆய்வுரைகள் எதையும் கார்ள் மாக்ஸ் எழுதிவிடவில்லை. ஆனால் அவரது தத்துவார்த்த எழுத்துக்களிலும், சமூக, பொருண்மிய ஆய்வுகளிலும் இயங்கியல் கருத்தாக்கங்கள் செறிந்து கிடக்கின்றன. இயங்கியலை ஒரு விளக்கக் கோட்பாடாக, ஓர் ஆய்வுக் கருவியாகக் கையாண்டு, சமூக மெய்யுண்மைகளை அவர் பிட்டுக் காட்டினார். இயங்கிய ஆய்வு முறைமையின் (Dialectical Methodology) ஒரு தலை சிறந்த உதாரணமாக அவர் எழுதிய 'மூலதனம்' விளங்குகிறது.

கார்ள் மாக்ஸ், மனித சமூகத்தை ஒரு முரண்பாட்டுக் களமாகக் கண்டார். அவரது சமூக ஆய்வுகளில் இயங்கியலின் மூல விதியான முரணியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

சமூகம் என்பது தனிமனிதர்களைக் கொண்ட ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் அல்ல. எல்லா மனிதர்களும் ஒன்றுசேர்ந்து, ஒத்திசைவாக, ஒன்றித்திருக்கும் ஒரு சுவர்க்க பூமியும் அல்ல. சமூகம் என்பது முரண்பாடுகள் நிறைந்த ஓர் உலகம். வர்க்கம் என்றும், சாதி என்றும், மதம் என்றும், ஏழை என்றும், பணக்காரன் என்றும், ஆளுபவன் என்றும், ஆளப்படுபவன் என்றும், ஒடுக்குபவன் என்றும், ஒடுக்கப்படுபவன் என்றும், சுரண்டுபவன் என்றும், சுரண்டப்படுபவன் என்றும், ஆண் என்றும் பெண் என்றும் மனித உறவுகளில், சமூகப் பிரிவுகளில், எங்கும், எல்லாவற்றிலும் முரண்பாடு தலைதூக்குகிறது. சமூகமானது முரண்பாடுகள் நிறைந்த ஒரு போராட்டக் களம்; கொந்தளிப்புகளும், நெருக்கடிகளும் நிறைந்த மனித உலகம். இந்த முரண்பாடுகளே சமூகத்தின் அசைவியக்கத்திற்கு காரணிகளாக இருக்கின்றன. இந்த முரண்பாடுகளின் இயல்புகளை இனம் கண்டு கொள்வதன் மூலமே சமூக அசைவியக்கத்தின் தன்மைகளைப் புரிந்து கொள்ளலாம். சமூக அசைவியக்கமாக கட்டவிழும் சமூக வரலாற்றின் போக்கினையும் அறிந்து கொள்ளலாம்.



கார்ள் மாக்ஸ்

மனிதர்களின் சமூக வாழ்வைப் பொறுத்தவரை, பொருளாதார வாழ்வே முக்கியமானது. பொருளுற்பத்தியே மனித வாழ்வுக்கு ஆதாரமானது. மனித தேவைகளை நிறைவு செய்வதும் அதுவே. இதனால், சமூகக் கட்டமைப்பில் பொருண்மிய அமைப்பிற்கே பிரதான இடத்தைக் கொடுக்கிறார் கார்ள் மாக்ஸ். பொருண்மிய அமைப்பே பொருளுற்பத்தியின் மையம். அதுவே சமூகத்தின் திண்ணியமான அடித்தளம். அந்த அடித்தளத்தின் மேற்தளமாகவே மற்றெல்லாம் இயங்குகிறது. பொருளிய வாழ்வே மனவுலகத்தையும் நிர்ணயிக்கிறது. பொருளிய புறநிலைகளின் வெளிப்பாடாகவே கருத்துலகமும் தோற்றப்பாடு கொள்கிறது.

பொருளுற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில், ஒரு காலகட்டத்தில், உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் மத்தியில் முரண்பாடு எழுகிறது. அந்த முரண்பாடு முற்றி, வர்க்கப் போராட்டம் தீவிரம் பெறுகிறது. சமூகப் புரட்சிக்கான புறநிலை தோன்றுகிறது. இறுதியில் சமூகப் புரட்சி வெடிக்கிறது. இந்தச் சமூகப் புரட்சியால் பொருண்மிய கட்டுமாணத்தில் மாற்றம் நிகழ்கிறது; உற்பத்தி உறவுகளில் மாற்றம் நிகழ்கிறது; சமூக வடிவத்தில் மாற்றம் நிகழ்கிறது. இதனால் புதிய சமுதாயம் பிறக்கிறது. இந்தப் புரட்சிகரமான சமூக மாற்றம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாக இடம்பெறுகிறது. இந்த வரலாற்று நிகழ்வு சமூகத்தை ஒரு புதிய படிநிலை வளர்சிக்கு இட்டுச் செல்கிறது.

இப்படியாக, கடந்த காலங்களில் சமூக மாற்றங்கள் நிகழ்ந்து, புதிய சமூக வடிவங்கள் தோன்றி, பொருளாதார கட்டமைப்பில் முன்னேற்றம் ஏற்பட்டதாகக் கூறுகிறார் கார்ள் மாக்ஸ். இந்த சமூக வடிவங்களை புராதன பொதுவுடமைச் சமுதாயம், அடிமைச் சமுதாயம், பிரபுத்துவ சமுதாயம், முதலாளிய சமுதாயம் என அவர் வகைப்படுத்தினார். ஆதிப் பொதுவுடமைச் சமுதாயத்தில், மனிதர்கள் காடுகளில் வேட்டையாடி வாழ்ந்த யுகத்தில், சொத்துரிமைப் பிரச்சினை இருக்கவில்லை. அதனால் ஆதி சமூகத்தில் வர்க்கப் பிரிவுகள் தோன்றவில்லை. ஆயினும் காலப் போக்கில், மனிதர்கள் நிலத்தைப் பகிர்ந்து விவசாய உற்பத்தியில் ஈடுபட்ட காலத்தில் சொத்துரிமைப் பிரச்சினை தோன்றி வர்க்கங்கள் பிறந்தன. கிரேக்கம், ரோம சாம்ராஜ்யங்களில் அடிமைகளின் உழைப்பை சுரண்டி விவசாய, கைத்தொழில் துறைகள் வளர்ந்தன. ஆண்டான் - அடிமைகளாக வர்க்கங்கள் தோன்றின. அடிமை சமுதாயத்தின் அழிவிலிருந்து பிரபுத்துவ உற்பத்தி வடிவம் தோன்றி, பிரபுக்களும் கூலி விவசாயிகளும் என்ற வர்க்கங்கள் தோன்றின. இதனையடுத்து, ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியாலும், விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளாலும் உற்பத்தி சக்தியில் நிகழ்ந்த மாற்றம் காரணமாக புதிய உற்பத்தி வடிவமாக முதலாளியம் தோற்றம் எடுத்தது. முதலாளிய உற்பத்தி வடிவத்தில் முதலாளி, தொழிலாளி என்ற இரு பெரும் வர்க்கங்கள் தோற்றம் கொண்டன. இவ்விதம் உற்பத்தி வடிவங்களில், உற்பத்தி உறவுகளாகத் தோன்றும் வர்க்கங்களும் அவை மத்தியில் எழும் போராட்டங்களுமாக சமூக மாற்றங்களை நிகழ்த்தி, மனித வரலாறு முன்னேறிச் செல்வதாக மாக்சின் வரலாற்றுப் பொருளியம் கூறுகிறது.

கார்ள் மாக்சின் சமூக வரலாற்றுக் கோட்பாட்டில் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. இந்தக் கோட்பாடு பொருண்மிய நியதியை (Economic Determinism) வலியுறுத்துகிறது என்பது சிலரது குற்றச்சாட்டு. அதாவது, பொருளாதாரக் கட்டுமானமே சமூகத்தின் சகல அமைப்புகளையும், மனித மன உலகையும் நிர்ணயிக்கும் சக்தியாகக் கொள்ளப்படுகிறது. இதில், மனித செயலாக்க சக்திக்கு மேலாக பொருளிய சக்தியே மேலோங்கி நிற்கிறது என்பது இவர்களது வாதம்.

வேறு சிலர், மாக்சின் வரலாற்றுப் பொருளியத்தை, தொழில்நுட்ப நியதி வாதம் எனவும் விமர்சிப்பதுண்டு. அதாவது, உற்பத்தி சக்தியில் தோன்றும் தொழில்நுட்ப வளர்ச்சியே சமூக மாற்றத்தை நிர்ணயிக்கும் சக்தியாக மாக்ஸ் சித்திரிக்கிறார் என்பது இவர்களது குற்றச்சாட்டு. உற்பத்தி சக்தி என்பது உற்பத்தி சாதனங்களையும், மனித தொழிலாக்க சக்தியையும் குறிக்கும். உற்பத்தி சாதனங்களில் நிகழும் தொழில்நுட்ப வளர்ச்சியே பொருளுற்பத்தி உலகில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் காரணியாக அமைகிறது. ஆகவே, தொழில்நுட்பத்தில் ஏற்படும் வளர்ச்சியே சமூக மாற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்கும் வித்திடும் உந்து சக்தியாக விளங்குகிறது. எனவே, வரலாற்றின் இயங்கு சக்தியாகத் தொழில் நுட்பத்தையே கொள்ள வேண்டும் என்பது இவர்களது கருத்து.

இந்த விமர்சனங்களை எல்லாம் மாக்சீயத்தின் பிதாமகர்களே நிராகரித்திருக்கிறார்கள். லெனினும் இது பற்றி நீண்ட விளக்கவுரைகள் எழுதியிருக்கிறார். அவற்றின் சாராம்சத்தை அடுத்தவாரம் பார்ப்போம்.



## விடுதலை

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை – பக்கத்தை – அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை – வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.**

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

இலக்கியப் பொழில்

# தமிழ் பௌத்தர்கள் 2

**பௌத்த சமயத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் தமிழ் பௌத்த குரவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியவை என பண்டித கிஸ்ஸெல்ல தம்மரட்ன தேரர் கூறுகிறார்.**

சோழ, பாண்டிய நாடுகளில் வாழ்ந்த சில தமிழ்ப் பௌத்த தேரர்கள் பற்றியும் அவர்களுள் அனுராதபுரிக்கு வந்து சமயப் பணியாற்றிய தமிழ் பௌத்த தேரர்கள் பற்றியும் 'தென்னிந்தியாவில் பௌத்த சமயம்'எனும் தலைப்பிலான ஆங்கில நூலில் இலங்கையைச் சேர்ந்த பண்டித ஹிஸ்ஸெல்ல தம்மரட்ன தேரர் விரிவான தகவல்களை தந்துள்ளார். அவற்றில் சிலவற்றை இங்கு சுருக்கமாகத் தருவது பொருந்தும். அவை வருமாறு:

## இளம் போதியார்

கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவரான இவர் ஒரு தமிழ் பௌத்த தேரர் ஆவார். தொகை இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் இவரின் செய்யுட்கள் உள.

## அறவண அடிகள்

இவர் ஒரு தமிழ்ப் பௌத்த தேரர் ஆவார். இவரைப்பற்றிய தகவல்களை மணிமேகலை வாயிலாக அறியலாம். இலங்கையில் சிவனொளிபாதமலைக்கு வந்து சென்ற அறவண அடிகள் கி.பி.முதலாம் நூற்றாண்டின் பிற்கூற்றில் அல்லது இரண்டாம் நூற்றாண்டின் முற்கூற்றில் வாழ்ந்தவர் ஆவார். முன்னர் கடற்கோளில் மாண்டுபோன காவேரிப் பூம் பட்டிணத்தில் (பூம்புகார்) அமைந்திருந்த பௌத்த விகாரையில் தங்கியிருந்து நீண்ட காலம் சமயச் சேவையாற்றியவர். சோழ நாட்டு அரசி, இவர் மீது வைத்திருந்த நன்மதிப்பை மணிமேகலையில் காணலாம்.

## சீத்தலைச் சாத்தனார்

கடைச்சங்ககாலப் புலவரான இவரே மணிமேகலையின் ஆசிரியராவார். 'மதுரை கூலவணிகர்' என அழைக்கப்பட்ட சீத்தலைச் சாத்தனார் ஒரு தமிழ் பௌத்தர். இவரால் இயற்றப்பெற்ற மணிமேகலை ஒரு பௌத்த காப்பியம் என்பது குறிப்பிடத்தக்கது.

## சங்கமித்திரர்

சோழ நாட்டைச் சேர்ந்த தமிழ் பௌத்த குரவரான இவர் மகாயாண பௌத்த பிரிவைச் சேர்ந்தவர். இவர் கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் அநுராதபுரியில் அரசியற்றிய கௌதாபய (கி.பி. 253 – 266) எனும் அரசன் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்து அனுராதபுரியில் அபயகிரி விகாரையில் தங்கி வாழ்ந்தார். இவரை மேற்சொன்ன அரசன் தனது இரு புதல்வர்களுக்கு ஆசிரியராக நியமித்திருந்தமையை மகாவம்சத்தின் வாயிலாக அறிய முடியும்.

## நாககுத்தன்

இவர் கி.பி. நாலாம் நூற்றாண்டில் (கி.பி. 345 – 425) தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்த தேரராவார். பெரும் புலவரான இவரே 'குண்டலகேசி' காப்பியத்தை இயற்றியவராவார். இக்காப்பியமும் ஒரு பௌத்த காப்பியம் என்பது குறிப்பிடத்தக்கது. ஐம்பெரும் காப்பியங்களில் மிகப் பழைய காலக்கதையை மையமாகக் கொண்டமைந்தது குண்டலகேசி காப்பியம் மட்டுமே!, நாககுத்தனார் என வழங்கப்பட்ட இவருக்கு 'நாகசேன' எனும் பெயரும் வழங்கி வந்திருப்பதை பாளி மொழி செய்யுள் ஒன்றினால் அறிய முடிகிறது. பாளி மொழியில் வல்லவரான இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர். இவரின் மாணவர்களில் ஒருவரான தர்மபால தேரர் பின்னர் வட இந்திய நாலந்த பல்கலைக் கழகத்தில் உபவேந்தராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**

## தர்மபால தேரர்

வடஇந்திய நாலந்த பல்கலைக்கழகத்தில் உபவேந்தராகப் பணிபுரிந்த தமிழ்ப் பௌத்த தேரரான தர்மபால தேரர் காஞ்சிபுரத்தில் அரசியற்றிய தமிழரசனின் மூன்றாவது மகனாவார். இவரிடமே சீன பௌத்த தேரரான ஹுஆன் திஸாங் நாலந்த பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத மொழியினைக் கற்றார்.

## ஆச்சாரியர் தர்மபால

இவர் கி.பி.எட்டாம் நூற்றாண்டில் (கி.பி.796) வாழ்ந்த தமிழ்ப் பௌத்த தேரராவார். தஞ்சாவூரைச் சேர்ந்த இவர் பாளி நூல்களில் பெரும் வித்துவம் பெற்றிருந்தார். இவரும் இலங்கைக்கு வந்து அநுராதபுரியில் மகா விகாரையில் வாழ்ந்தவரே. இங்கு இவர் வாழ்ந்த காலத்தில் பாளி மொழி நூல்களான தேர – தேரி காதா, உதான, இற்றிவுத்தக, பெற்றவத்து, விமானவத்து, கரிகாப்பிட்டக, நெற்றிபக்கரண போன்றவற்றிற்கு உரை நூல்கள் எழுதினார். இவ் உரை நூல்கள் யாவும் 'பரமத்தாதீபனி' என வழங்கப்படுகிறது. அத்துடன் 'விசுதிமக்கா' என்னும் பாளி நூலுக்கும் மேலதிக உரை நூல்



எழுதினார். இது 'மஞ்ஞுசா' என அழைக்கப்படுகிறது. இவர் தொடர்பான கல்வெட்டு ஒன்று இன்றும் அநுராதபுரியில் உள்ளது.

## சாரி புத்தர்

இவர் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சோழ நாட்டில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்த தேரர் ஆவார்.

## புத்த நந்தி

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சோழ நாட்டில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்த தேரர்களில் புத்த நந்தி என்பார் சைவநாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடன் பகிரங்கமாக மத விவாதத்தில் ஈடுபட்டார். ஆயினும் அவ் விவாதத்தில் புத்தநந்தி தேரர் தோற்றாரென அறியப்படுகிறது.

## வஜ்ரபோதி

இவர் பாண்டி நாட்டை சேர்ந்த தமிழ்ப் பௌத்த தேரர் ஆவார். இவரும் இலங்கைக்கு வந்து அனுராதபுரியில் அபயகிரி விகாரையில் ஆறு மாதங்கள் தங்கியிருந்தார். இவர் அனுராதபுரிக்கு வந்தபோது சீலமேக வண்ண எனும் அரசன் (கி.பி. 617 – 626) பெரும் மரியாதையுடன் வரவேற்றதை மகாவம்சத்தின் வாயிலாக அறியமுடியும்.

## புத்த மித்திரர்

இவர் பதினொராம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்த தேரர் ஆவார். தமிழ்ப்புலவரான இவர் வீரசோழன் (கி.பி. 1063 – 1070) எனும் அரசனின் வேண்டுதற் கிணங்க 'வீரசோழியம்' எனும் தமிழ் இலக்கண நூலினை இயற்றினார். இவ் இலக்கண நூலில் பௌத்த கோட்பாடுகள் போற்றப்பட்டுள்ளன. இந்நூல் இன்றும் உள்ளது.

## தீபங்கர புத்தாப்பிய தேரர்

இவர் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழ நாட்டில் வாழ்ந்த தமிழ்ப்பௌத்த தேரர் ஆவார். இவரால் இயற்றப்பெற்ற பாளி மொழி இலக்கண நூலான 'ரூபசித்தி' மிக பிரசித்தி பெற்ற நூலாகும். இந்நூல் இன்றும்கூட பௌத்த சமய உயர் போதனாபீடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நூலிலுள்ள ஒரு செய்யுளில் இவர் சோழ நாட்டில் பிறந்தவரென்றும் சிலகாலம் இலங்கையில் வாழ்ந்தாரென்றும் சொல்லப்பட்டுள்ளது. பெரும் அறிஞரான இவர் இலங்கையில் 'சோழ தீபங்கரர்' என அழைக்கப்பட்டார். தீவின் பல பாகங்களுக்கும் இவர் சமயாசமயம் சென்று வந்ததையிட்டு 'இலங்கை வானில் பறக்க விடப்பட்ட ஒரு வெற்றிப்பதாகை' எனப் புகழப்பெற்றார்.

## காசியப்ப தேரர்

பௌத்த சமயத்தின் வாகன மொழியான பாளி மொழியில் பெரும் வித்தகரான இவர் ஒரு தமிழ்ப் பௌத்த தேரர் ஆவார். இவர் பல பாளி மொழி நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவர் உரை எழுதிய நூல்களுள் 'அவிதம்ம' 'வினாய பிற்றக', 'அநாகதவம்ச' போன்ற நூல்களும் அடங்கும். பௌத்த சமய வரலாற்று நூலான சாசன வம்சத்திலும் பர்மிய பாளி நூலான கந்த வம்சத்திலும் இவர் சோழ நாட்டைச் சேர்ந்த தமிழரென்று சொல்லப்பட்டுள்ளது.

## அனுருத்த தேரர்

இவர் கி.பி.பத்தாம் அல்லது பதினொராம் நூற்றாண்டில் காவேரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்த தேரர் ஆவார். 'அபிதம்ம' தொடர்பாக இவர் எழுதிய அபிதம்மத சங்ககா எனும் நூல் அபிதம்ம தத்துவத்தின் அறிமுக நூலாக எட்டு நூற்றாண்டுகளுக்கு மேல் இன்றுவரை பயன்பட்டு வருகிறது. இந்நூல் இலங்கையிலும் பர்மாவிலும் மிகவும் பிரசித்திபெற்றதொன்றாகும். இந்நூலுக்கு பல அறிஞர்கள் உரை எழுதியிருப்பதுடன் மேலை நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தர்மகீர்த்தி தேரர்

சோழ நாட்டின் தமிழ்ப் பௌத்த தேரரான இவர் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சில காலம் இலங்கையில் அனுராதபுரியிலுள்ள மகா விகாரையில் வாழ்ந்த இவர் மகாவம்சத்தின் தொடரான சூளவம்சத்தின் முதற்பாகத்தை எழுதினார். 'தாதுவம்ச' நூலையும் இவரே எழுதியதாக அறியப்படுகிறது. இவரின் பிற வரலாற்றுத் தகவல்களிலிருந்து கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை தென்னிந்தியாவில் பௌத்த சமயம் பரவியிருந்ததை அறிய முடிகிறது.

சோழ, பாண்டிய நாடுகளைச் சேர்ந்த தமிழ்ப் பௌத்த தேரர்கள் பௌத்த சமயம் தொடர்பாக அதன் வளர்ச்சிக்கு பல நூல்களை எழுதியிருந்ததுடன் பாளி நூல்கள் பலவற்றிற்கு உரை நூல்களும் எழுதியுள்ளனர். அந்த நூல்கள் இலங்கையிலும் பயன்படுத்தப்பட்டு வருவது கண்கூடு.

கி.பி.பதினாலாம் நூற்றாண்டில் பண்டித பராக்கிரமபாகு (கி.பி. 1348 – 1360) எனும் அரசன் பாளி ஜாதக நூலை சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்க உதவும் முகமாக தென்னிந்தியாவிலிருந்து கல்விமானான ஒரு தமிழ்ப் பௌத்த தேரரை இலங்கைக்கு வரவழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தகவல்களிலிருந்து தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ்ப் பௌத்த தேரர்களுக்கும் இலங்கையின் தேரவாத, மகாயான பௌத்த பீடங்களுக்கும் நீண்டகால அன்னியோன்னிய உறவுகள் நிலவி வந்திருப்பதையும் சோழ நாட்டைச் சேர்ந்த தீபங்கர புத்தாப்பியர் எனும் தமிழ்ப் பௌத்த தேரர் இலங்கையின் பல பாகங்களுக்கும் பயணம் மேற்கொண்டு பௌத்த சமயப் பிரசாரம் செய்து வந்ததையும், அனுராதபுரியிலுள்ள கல்வெட்டு வாசகத்தின் மூலம் தர்மபாலர் எனும் இலங்கை தமிழ்ப் பௌத்த தேரர் எவ்வாறு மக்களால் நேசிக்கப்பட்டு புகழப்பட்டார் என்பதையும் நாம் அறிய முடிகிறதல்லவா?

ஆதியில் சைவர்களாகவிருந்த தமிழர்களிற் பலர் பின்னர் பௌத்த சமயம் தழுவி பௌத்தர்களாக வாழ்ந்து மீண்டும் சைவ சமயம் சார்ந்ததைக் கொண்டு முற்காலத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்த வரலாற்றை முற்று முழுதாக மூடி மறைக்க முடியுமா? கால ஓட்டத்தில் பழைய வரலாறுகள் மாறிக் கொள்வதுண்டா? இல்லையல்லவா?

இலங்கையின் பிரதமர்களாகவிருந்த டி.எஸ்.சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, சேர்.ஜோன்.கொத்தலாவல, எஸ்.டபிள்யு ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போன்றோரும் பிற சிங்களத் தலைவர்களும், கிறிஸ்தவ சமயத்தவர்களாக இருந்தனர். இதனால் இவர்கள் தமிழரின் சமூக அரசியல் விடயங்கள் தொடர்பாக வெள்ளையரிடம் பின் கதவால் சில இறுக்கமான கொள்கைகளை முன் வைத்திருக்கலாம். 1948 இல் வெள்ளையர் போனபின் பெரும்பான்மை, சிறுபான்மை அரசியல் சதுரங்கத்தில் ஆட்சி அதிகாரத்தை கையிலெடுத்துக் கொண்ட இச்சிங்களத் தலைவர்கள் மீண்டும் பௌத்தர்களாக மாறிக் கொண்டனர்.

கி.பி.இருபதாம் நூற்றாண்டின் நிலை இதுவெனின், கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்த பிக்குகள் போதாமலிருந்ததால் சீயாம் நாட்டிலிருந்து பௌத்த குருக்களை தருவித்து பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்கு உதவியவன் கண்டி இராச்சியத்தில் அரசியற்றிய திராவிடர் குலத்தைச் சேர்ந்த இந்து அரசனான கீர்த்தி சிறி இராஜசிங்கன் (கி.பி. 1747 – 1782) என்பது மகோன்னத செய்தியன்றோ! இதனை சூளவம்சத்திலிருந்து (மகாவம்ச தொடர்) அறியலாம்.

புத்த சாசனத்தை கடைசிவரை பேணிப் பாதுகாத்து வந்தவர்களும் கண்டி இராச்சியத்தில் அரசியற்றிய திராவிடர் குலத்தைச் சேர்ந்த இந்துக்களான நாயக்க அரச வம்சத்தினரே. கண்டி இராச்சியத்தில் அரசியற்றிய கண்ணுச்சாமி எனும் இயற்பெயர் கொண்ட சிறிவிக்கிரம இராஜசிங்கன் (கி.பி. 1798 – 1815) பிரிட்டிஷ் ஆட்சியினரால் கைது செய்யப்பட்ட பின்னரே கண்டி அரண்மனையில் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்த புத்தசாசனம் ஆங்கிலேயரின் வசமாயிற்று.

வட இந்திய மொழிகளுள் ஒன்றான பாளி மொழியில் எழுதப்பெற்றிருந்த மகாவம்சத்தை முதலில் மொழி பெயர்த்தவர் ஓர் ஆங்கிலேயர். பின்னர் ஒரு ஜேர்மனியர் மொழி பெயர்த்தார். அது ஆங்கில மொழியிலிருந்து சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இப்போது மகாவம்சத்தின் மூலப் பிரதி (ஓலைச்சுவடி) காணாமல் போய் விட்டதாக சொல்லப்படுகிறது. நாயக்கர்குல அரசர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த இப் பகுதி ஓலைச் சுவடிகள் காணாமல்போன கைங்கரியம் என்ன?

முற்காலத்தில் தமிழ்ப் பௌத்தர்கள், பௌத்த சமயத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் அளப்பரிய சேவை ஆற்றி வந்துள்ளதாக பண்டித ஹிஸ்ஸெல்ல தம்மரட்ன தேரர் BUDDHISM IN SOUTH INDIA (தென்னிந்தியாவில் பௌத்த சமயம்) எனும் தனது ஆங்கில நூலில் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவிலிருந்து முன்னர் தமிழ்ப் பௌத்த குரவர்கள் இலங்கைக்கு வந்து அனுராதபுரியிலுள்ள மகாவிகாரை, அபயகிரி விகாரைகளில் தங்கி பௌத்த சமயத்திற்கு பல வழிகளிலும் தொண்டாற்றியிருப்பதை மகாவம்சத்திலிருந்தும் அறிய முடியும்.

— *முற்றும்* —

சொல்லேருழவன்
ம.க.அ.அந்தனிசில்

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (கணா)
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND
Telephone :- 0041 - 043. 3179137 - 9

# தொடை இடுக்கில் ஏற்படும் கடியும் அதனை குணமாக்கும் வழிகளும்

**கேள்வி:-வயது 24.ஆண்.மாஅரைக்கும் தொழிற்சாலையில் பணிபுரிகிறேன்.கோதுமை அரிசியை சேகரித்து வைத்துள்ள உயர்ந்த கோபுரங்களை (SILO) வருடத்துக்கு குறைந்தது 3 தடவைகள் துப்புரவாக்கும் பணி எனது வேலைகளில் ஒன்று. இப்படியான வேலையின் பின்னர் எனக்கு 'ஆஸ்துமா' நோய் போல் இளைப்பு ஏற்படும். எனது பரம்பரையிலோ,எனது சிறு வயதிலோ,இப்படி'ஆஸ்துமா' நோய் இருந்ததில்லை. கோதுமை தூசியினால் தான் இது ஏற்படுகின்றது என்று எனக்கு நன்றாகப் புரிகிறது. இவ்வேளைகளில் எனது தொழிற்சாலை மருத்துவர் இளைப்புக்கான மருந்து, புகைபிடித்தல், மருந்துகளை தருவார்.குணமாகிவிடும். எனது வீட்டில் இப்படி தொடர்ந்து மூச்சு இளைப்பு ஏற்படுவதால் பின்னர் நோய் வந்துவிடும் என்று பயப்படுகிறார்கள். உங்கள் விலைமதிப்பற்ற ஆலோசனையை வேண்டுகின்றேன்.**

***பதில்:***— உங்களுக்கு ஏற்பட்டிருப்பது Occupational Ashma என்ற சுவாசப்பை சம்பந்தப்பட்ட கோளாறு.கோதுமை ஆலைகள், மரம் அரியும் ஆலைகள், தேயிலை தொழிற்சாலைகள், பெயிண்ட் தயாரிக்கும் தொழிற்சாலைகள், உலோகத் தொழிற்சாலைகள் என்பவற்றில் வேலை செய்பவர்களுக்கு தொழில் சம்பந்தப்பட்ட துணிக்கைகள், புகை என்பவை நுரையீரலில் சேரும்போது அழற்சி,அலர்ஜி என்கின்ற ஒவ்வாத்தன்மை ஏற்படுகிறது. இதனால் நுரையீரல் குழாய்கள் இறுக்கமடைந்து குறுகிய அளவினதாகி சுவாசத்திற்கு இடையூறு விளைவிப்பதுண்டு.

இதனால் மூச்சு இளைப்பு, இருமல், கடிய, கரிய நிறசச் சளி என்பவை ஏற்படும். இந்த குறைபாடு ஆரம்பநிலையில் இருந்தால், இப்படியான சூழ்நிலையிலிருந்து விலகி இருக்கும்போது முற்றாக குணமாகிவிடும். தொடர்ந்து இந்த சூழ்நிலையிலேயே தொழில் புரியும் கட்டாயம் ஏற்படும்போது, நுரையீரல் குழாய்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நிரந்தரமாகி Bronchial Asthma என்கின்ற நோய் உருவாக காரணமாகிவிடும்.

ஆரம்பகாலத்தில் நுரையீரல் குழாய்களை இளக்கப்படுத்தும் — Salbutamol, Turbutaline மாத்திரைகளுக்கு குணம் காட்டும். இந்த குறைபாடு காலம் செல்லச் செல்ல -- இந்த மருந்துகளுக்கு பயன்தரமாட்டாது. சில வேளைகளில் நுரையீரல் பகுதிகள் தமது தொழிற்பாடுகளை செய்ய முடியாமல் — இறுக்கமடைந்து Fibrosed ஆகிவிடும்.

உங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த குறைபாட்டுக்கு -- உங்கள் தொழிலைவிட்டு வேறு தொழில் பார்ப்பது நல்லது. வீட்டில் உள்ள பெரியவர்களின் கருத்துப்படி நடப்பது நல்லது.இளவயதில் தீராத நோய்க்கு ஆளாகி வாழ்க்கையில் நல்ல விஷயங்களை இழக்க வேண்டி வரும். எனவே, ஒரு நுரையீரல் சம்பந்தப்பட்ட Pulmonologist என்கின்ற விசேட வைத்தியரை அணுகி மேலதிக ஆலோசனை பெறவும்.

***கேள்வி:- வயது 68. ஆண். கடந்த 3 வாரங்களாக தொடை இடுக்குகளிலும், விதைகளிலும் தாங்கொணாத அரிப்பு. இதனால் சொறிந்து சொறிந்து சில வேளைகளில் காயங்களும் ஏற்படுவதுண்டு. மருத்துவ சவர்க்காரங்கள் உபயோகித்தும் பயன் காணவில்லை. என்ன சிகிச்சை செய்யலாம்?***

***பதில்:***— உங்களுக்கு ஏற்பட்டுள்ளது Ring worm என்ற பங்கசு தொற்று. இதற்கு மூல காரணம் Tinea என்ற பங்கசு. ஈரப்பதன் அதிகமுள்ள எமது நாட்டில் அரை இடுக்குகளில், அக்குளில் இந்தத் தொற்றுக் காணப்படும்.தொற்றுள்ள ஒருவரின் ஆடைகளை—உள்ளாடைகளை இன்னொருவர் உபயோகிக்கும்போது மற்றவருக்கு இந்தத் தொற்று பரவிவிட வாய்ப்புண்டு. சலவை செய்யும்போது தொற்றுள்ளவர்களின் துணிமணிகளை ஒன்றாக நீரில் ஊற வைத்து,அவித்துக் கழுவும் சந்தர்ப்பங்களில் துணிமணிகள் இந்தப் பங்கசுக்களின் காவிகளாக பயன்படுகின்றன.

இந்த பங்கசு தொற்று தொடை இடுக்குகளில் ஏற்படும்போது Tina Cruris என்று அழைப்பார்கள். இந்தத் தொற்றை நீக்க நிறைய பங்கசு கிறீம்கள் உண்டு. Clotrimazole என்ற பூச்சுமருந்தை குறைந்தது இருவாரம் உபயோகிப்பதால் இந்தத் தொற்றை நீக்கலாம். இதோடு பங்கசு தொற்றை நீக்கும் மாத்திரைகளையும் உபயோகித்தால் நிறையப் பலன் கிடைக்கும். Griseofulvin, Ketaconazole என்ற பங்கசு கொல்லிகளை வைத்தியரின் கண்காணிப்பின் கீழ் மாதக் கணக்கில் உபயோகிக்க வேண்டி இருக்கும்.

இதைத்தவிர எமது உடல் சுகாதாரத்திலும் நாம் கவனம் எடுக்க வேண்டும். வியர்வை தங்கி பங்கசுக்கள் வளர்வதற்குரிய சூழ்நிலையைத் தவிர்க்க வேண்டும். வெப்ப காலத்தில் அடிக்கடி குளித்தல், தினமும் ஆடைகளை மாற்றுதல் முக்கியமாக உள்ளாடைகளைச் சுத்தமாக வைத்திருத்தல் தினமும் மாற்றுதல் விரும்பத்தக்கது. உள்ளாடைகளைக்கழுவி நல்ல வெயிலில் உட்புறம் வெயில் படக்கூடியதாக உலர்த்தல் பங்கசுக்கள் சூரிய கிரணங்களால் அழிவதற்கு உதவும்.



**கேள்வி:- எனது தலையில் 'சொடுகு' உள்ளது. பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தும் நாலாவிதமான மருந்துகளை உபயோகித்தும் பலன் இல்லை. சில மருத்துவர்களிடம் ஆலோசனை கேட்டு மருந்துகள் எடுத்தும் பலனில்லை. எனது நோய்க்கு உங்களால் உதவ முடியுமா?**

***பதில்:***— சொடுகை— மருத்துவத்தில் Seborrhoeic Dermatitis என்று அழைப்பார்கள். சொடுகு எதனால் ஏற்படுகிறது என்பது சரியாக இதுவரை அறியப்படவில்லை. இது ஒரு இலகுவில் மாறாத Chronic நோய். தலையில்— முகத்தில் இந்த நோயினால் மேல் தோலில் செதில்கள் செதில்களாக உதிரும்.

சில வேளைகளில் பற்றீரியா தொற்று இதன்மேல் ஏற்படும்பொழுது, அரிப்பினால் சொறிய நேரிடும். இதனால் புண்கள் ஏற்படலாம். அதிகமாக குடும்ப அங்கத்தவர்களிடையே இது காணப்படுகிறது. பெண்களை விட ஆண்களிடமே சொடுகு அதிகமாக காணப்படுகிறது. சில பிறந்த குழந்தைகளில் முதல் மூன்று மாதத்தில் இந்தச் சொடுகு காணப்படுகிறது.



பின்னர் 30 வயதுக்குப் பின்னர் அதிகமாகச் சொடுகால் பாதிக்கப்படுபவர்கள் உண்டு.

இதனை நான் முன்னர் கூறியவாறு முற்றாகப் போக்க முடியாது. ஆனால், சொடுகு ஏற்படும் வேகத்தை வீரியத்தைக் குறைத்து, சொடுகோடு வாழப் பழகிக்கொள்வது நல்லது. மனச் சஞ்சலங்கள், பரீட்சைக்குப் படிக்கும்போது ஏற்படும் மன இறுக்கங்கள், கவலை என்பன சொடுகு அதிகரிப்பதற்கு தூண்டுகோலாக இருப்பதாக கவனிக்கப்பட்டுள்ளது. Pyrithone Zinc, Selenium Sulphide போன்ற இரசாயன மருந்துகள் உள்ள ஷம்பு வகைகள், Salicylic Acid கந்தகம் கலந்த ஷம்பு வகைகள் Coaltar ஷம்பு வகைகள் ஒன்றுவிட்டு ஒருநாள் ஆரம்பத்தில் உபயோகித்து சொடுகு குறைந்ததும், வாரத்துக்கு இரு தடவைகள் உபயோகிப்பதன் மூலம் சொடுகு குறையும். Ketaconozole ஷம்பு புதிதாக இந்த நோய்க்கு வந்த மருந்து.

இது தவிர உணவு விடயத்தில் வினாகிரி கலந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். உணவில் காய் கறிகளை நிறையச் சேர்க்க வேண்டும். கண்ட கண்ட எண்ணெய் வகைகள், கிறீம் வகைகளை தலைக்கு உபயோகிக்கக்கூடாது. தொப்பி போட்டு வெளியில் திரிவதால் வியர்வை அதிகம் உருவாகி சொடுகு அதிகரிக்கலாம். வைட்டமின் B பயோட்டின் , விட்டமின் C மாத்திரைகளை உபயோகிக்க வேண்டும்.

***கேள்வி:-பெண் வயது 30. திருமணமாகி 4 வருடங்கள். 4 குழந்தைகள் உள்ளன. இப்பொழுது கொஞ்சக் காலமாக யாராவது மனம் நோகப் பேசினால் - அழுது விடுகின்றேன். சிறிய விஷயங்களுக்கும் அழுகை வந்துவிடுகின்றது. மிகவும் களைப்பாக இருக்கிறது. குழந்தைகள் சிறியவர்களாக இருப்பதால் வேலைப்பளுவும் அதிக நித்திரை குறைவு. வைத்தியர்களிடம் காட்டினால் நரம்பு தளர்ச்சி, வைட்டமின் குறைவால் ஏற்பட்டது என்று சொல்லி மருந்து தருகின்றார்கள். குணம் ஏதும் ஏற்படவில்லை. பரிகாரம் கூறவும்.***

***பதில்:***— முதலில் உங்கள் உடல் நிலையைப் பாருங்கள். நாலு வருடத்தில் நாலு குழந்தைகளுக்கு தாயாகி உள்ளீர்கள். ஒரு குழந்தை பிறந்த பின்னர், ஒரு பெண் இழக்கும் போஷாக்கு சக்தி, மனோ நிலை என்பவற்றை திருப்பிப் பெற்று பழைய நிலைக்கு திரும்புவதற்கு குறைந்தது ஒரு வருடமாவது ஆகும். நீங்களோ — நான்கு வருடத்தில் சரியான இடைவெளி இல்லாமல் தாய்மை அடைந்துள்ளீர்கள். அது தவிர பெற்ற சிறு குழந்தைகளை அதுவும் அடுத்தடுத்து பெற்ற குழந்தைகளை — பராமரித்து வளர்ப்பது என்பது இலேசான காரியம் அல்ல.

நித்திரை இழப்பு, ஓய்வின்மை, வேலைப்பளு,போஷாக்கில் அசிரத்தை என்பவை உங்கள் உடல் நிலையை மேலும் பாதித்துள்ளது. எனவேதான் உடல் நலக்குறைவுடன், மன அழுத்தம், மன இறுக்கம் என்பவையும் சேர்ந்து உங்களை ஒரு மனச்சோர்வு (Depression) நிலைக்கு ஆளாக்கியுள்ளன.இதன் ஒரு பிரதி பலிப்புத்தான் அடிக்கடி சிறுவிஷயங்களுக்கும் அழுவது.

பொதுவாகவே, மனச்சோர்வு ஏற்படும் நோயாளிகளுக்கு, நித்திரையின்மை, பசியின்மை அல்லது அதிகளவு பசி — முக்கியமாக கொழுப்பு அல்லது இனிப்பு பதார்த்தங்களை அதிகளவு அடிக்கடி உண்ணுதல் — முன்னர் விருப்புடன் செய்த காரியங்களில் தற்பொழுது ஈடுபாடு அல்லது விருப்பம் இல்லாமை, சோர்வு, களைப்பு, காரணமில்லாத மன எரிச்சல் (Irritation), மறதி என்பவை எல்லாம் ஒரு சில குணம் குறிகளாகும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாறாச்சி மாவத்தை
கொழும்பு - 14

எனவே உங்கள் நிலை நோயாக மாற முன்னர், சிகிச்சை பெறுவது அவசியமாகின்றது. முதலில் உங்களுக்கு அடிக்கடி ஏற்பட்ட பிரசவங்களால், இரத்த சோகை (Anaemia) ஏற்பட்டிருக்கின்றதா என்பதை அறிய வேண்டும். அப்படி இருந்தால் அதற்குரிய இரும்புச்சத்து போஷாக்கு என்பவை கொடுக்கப்படவேண்டும்.

அடுத்து உங்கள் வேலைப் பழுவைக் குறைக்க குடும்பத்தினரின் அன்பு, ஆதரவு, உதவி தேவை. முக்கியமாக உங்கள் கணவர்,உங்கள் பிரச்சினையைப்புரிந்து கொண்டு உங்கள் வேலைகளை, பிரச்சினைகளை, பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு ஓரளவு மன ஆறுதலை அளிக்க முன் வர வேண்டும். அதற்கு முதல்— பெற்ற குழந்தைகள் போதுமென்று இத்துடன் நிறுத்திக்கொள்வதற்கு அல்லது, அடுத்தடுத்து இன்னொரு பிரசவம் ஏற்படாமல் இருப்பதற்கு தக்க குடும்பத்திட்ட ஆலோசனைகள், முறைகளையே பெற்றுக்கொண்டு கடைப்பிடிக்க வேண்டும். இப்படிச் செய்வதனால் உங்கள் மன நிலை சீரடையும். இல்லாவிடில் நீங்கள் ஒரு மன நோயாளியாக மாறுவதைத் தடுக்க முடியாது.

# சொந்தம் ஆயிரம் பந்தம்

சொந்தங்களும், பந்தங்களும் நிறைந்தவன் தான் மனிதன். தாயின் வயிற்றில் சிசுவாக இருக்கும்போதே இந்த பந்தம் தொடங்கிவிடுகிறது. முதலில் தாயுடன், பின்பு தந்தையுடன் உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள் என்று அந்த பந்தம் விரிந்துகொண்டே போகிறது.

குழந்தை பிறந்த முதல் இரண்டு மூன்று மாதங்களில் தன்னைச்சுற்றி இருக்கும் எல்லோரையும் ஒரே மாதிரிப் பாவித்து சினேகம் காட்டும். மூன்று முதல் ஏழாம் மாதம் வரையுள்ள காலகட்டத்தில் குழந்தை தன்மீது அதிக நெருக்கம் கொள்கிறவரை அடையாளம் கண்டுகொண்டு அவர்களிடமே அதிக பாசம் காட்டும். ஏழு மாதம் முதல் மூன்று வயது வரையுள்ள பருவத்தில் அம்மாவோடு அல்லது அம்மாபோல் அதிக பாசத்தை பொழிகிறவரோடு தனது நட்பை வளர்த்துக் கொள்ளும்.

அம்மாவுக்கும் குழந்தைக்குமான பந்தத்தை



மூன்று விதமாகப் பிரித்துக் காட்டலாம்.

### பாதுகாப்பான பந்தம்

தாய் தன்னுடைய அனுசரணை மூலம் குழந்தைக்கு முழுப் பாசத்தை வழங்கினால், குழந்தைக்குத் தாய் மூலம் முழுமையான பாதுகாப்புக்கிடைக்கும். இது பாதுகாப்பான பந்தமாகும். இதன்மூலம் பாதுகாப்பான உணர்வுடன் குழந்தை தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரியத் தொடங்கும். இந்தப் பாதுகாப்பான பந்தத்தில் உள்ள குழந்தை தாயின் பிரிவால் துயர் அடையும். தாய் வந்ததும் மீண்டும் இயல்பான நிலைக்கு வந்துவிடும்.

### எதிர்ப்பான பந்தம்

தாய், தன் குழந்தைக்கு, பாதுகாப்பான பந்தத்தைத் தரவில்லை என்றால் குழந்தைக்குக் கோபம் வரும். அப்போது எதிர்ப்பான பந்தம் தொங்குகிறது. இந்தக் குழந்தையால் தன்னைச்சுற்றியுள்ள விடயங்களை அவ்வளவு எளிதாக கிரகித்துக்கொள்ள முடியாது. இந்தக் குழந்தையால் தன் தாயை முழுமையாக நம்ப முடியாது. அதனால் தாய் தன்னோடு இருக்கும்போதும் அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படாது. மாறாக அடிக்கடி கோபம் வரும். அடம்பிடிக்கும். எதிர்ப்பான பந்தம் கொண்ட குழந்தைகள் உருவாக தாயும், சுற்றத்தாரும் காரணம்.

### பந்தங்களை விலக்கும் குழந்தைகள்

இந்த வகைக் குழந்தைகள் தனிமை விரும்பிகள். தனித்தீவு போலவே வாழ்க்கையை நடத்த விரும்பும். தன்னைச் சுற்றியுள்ளவைகளைக் கவனிக்கவோ, தனக்கு விருப்பமானவர்களிடம் நட்புக் கொள்ளவோ விரும்பாது. அம்மா மூலம் பாதுகாப்பான பந்தம் கொள்ளும். குழந்தைகளால் மட்டுமே தன்னைச் சுற்றியுள்ளவைகளை புரிந்து கொண்டு அதற்குத் தக்கபடி நடக்கும் மனோவளர்ச்சி கிடைக்கும். பெற்றோர்கள் இதனைப் புரிந்துகொண்டு குழந்தை வளர்ப்பில் அக்கறை செலுத்த வேண்டும்.

# பித்தன் பதில்கள்

*செ.தயாளன் — வவுனியா*

***கேள்வி:— பித்தா! ஆரம்பத்திலேயே நீர் பிழைவிட்டு விட்டீர்.கல்யாணம் முடித்த உடனேயே உமது மனைவிக்கு 4 போட்டிருந்தால் இப்போது நீர் வாங்கிக் கட்ட வேண்டிய நிலை வந்திருக்காதே?***



*பதில்:—* ஐயோ... அதை ஏனப்பு கேட்கிறீர்...? நானும் நினைத்தேன் தான். ஆனால், கல்யாணம் கட்டின உடனே அடித்தால் பாரடா... புதுப் பொண்டாட்டியை போட்டு அடிக்கிறானே என்று ஊர் திட்டுமே என்று விட்டுவிட்டேன்.பிறகு ஒரு 2 — 3 மாதத்தில் 4 போடுவோமா என்று நினைத்தேன். அந்த நேரத்தில் பாரடா கல்யாணம் முடித்து 2 மாதம் கூட ஆகவில்லை — மனைவியைப் போட்டு அடிக்கிறானோ என்று ஊர் சொல்லுமே, அதனால் விட்டுவிட்டேன். பின்னர் 2—3 வருடத்தில் போடலாம் என்று நினைத்தேன். 2—3வருடங்கள் ஒண்டா இருந்துட்டு இப்ப போட்டு அவளை அடிக்கிறான் என்பார்கள்.. விட்டு விட்டேன்.

பின்னர் முதலாவது பிள்ளையை வயிற்றிலே சுமக்கும் போது போட்டால்... புள்ளத்தாச்சியைப் போட்டு அடிக்கிறான் என்பார்கள்,விட்டுவிட்டேன். குழந்தை பிறந்த பின்பு என்றால் அடடா...பச்சை உடம்புக் காரியை அடிக்கிறானே..படுபாவி என்பார்கள் என்று விட்டுவிட்டேன். இப்படியே காலாதி காலமாக நான் தருணம் பார்த்துக் காத்திருக்க.. அந்த ஊட்டுக்குள் அவளது கை ஓங்கிவிட்டது... என்ன செய்ய....?

*செ.தனஞ்சலி — வைரவ புளியங்குளம்*

***கேள்வி:— பித்தா அந்தக் காலத்திலே தனக்கு நீதியான நியாயம் கிடைக்காததால் கண்ணகி மதுரையை எரித்தாள். இந்தக் காலத்தின் பெண்களாகிய நாம் நியாயம் கிடைக்க என்னத்தை எரிக்கலாம்?***

*பதில்:—* வேண்டாம் அம்மணி... அந்தக் காலத்தில் மதுரை மன்னன் மீதுள்ள கோபத்தால் கண்ணகி மதுரையை எரித்தாள். அதேபோல், நீங்களும் — யார் மீதாவது உள்ள கோபத்தில் ஒவ்வொரு ஊரையும் எரித்துத் தள்ளினால்.. நாடு தாங்குமா? அப்படி எரிக்கத்தான் வேண்டுமென்றால் உங்களிடமுள்ள கிழித்துவிடப்பட்ட சட்டையை, அல்லது இறுக்கமான ஜீன்சை எரித்து உமது எதிர்ப்பை காட்டும்... ஊர்களிலே எல்லாம் கை வைக்காதேயும்.

*கஜன் — கறுக்காய் தீவு*

***கேள்வி:— அன்பின் பித்து! டக்ளஸ் தேவானந்தாவுக்கும் — சங்கரியாருக்கும் இடையே உள்ள ஒற்றுமை — வேற்றுமைகள் என்ன?***

*பதில்:—* ஒருவருக்கு தாடி உண்டு. மற்றவருக்கு நாடி தான் உண்டு. ஆனால் இருவரும் ஓடி ஓடி—விடுதலைப்புலிகளைச் சாடி —அரசாங்கத்துக்குத் துதிபாடி தங்களுக்கு தாங்களே நல்லவர்கள் என்ற முடிசூடி தமிழினத்தை கொச்சைப்படுத்துவதில் சாடிக்கேற்ற மூடிகள். இதற்காக வாங்கிறார்கள் மாதா மாதம் கோடி கோடி..

*சின்னத்தம்பி — தவசிக்குளம்*

***கேள்வி:— பித்துமாமா.... இந்தக் காலத்தில் மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்வதற்கு பேனா,பென்சில், கொப்பி, எல்லாம் கேட்கிறார்கள் இல்லை, செல்போன்தான் கேட்கிறார்கள். வசதி இல்லாத பெற்றோர் செல்போன் வாங்கிக் கொடுக்க என்ன செய்வார்கள்?***

*பதில்:—*ஆம் தற்போது நாட்டை ஆட்டிப் படைக்கும் மோகம் இது... பலர் கஷ்டப்பட்டு திண்டாடி கடன் பட்டாவது அம்மா அப்பாவைக் கொண்டு செல்போன் வாங்கி விடுகிறார்கள். போன் கிடைத்த ‘சுதி’யிலே கண்டபடி கதைத்துத் தள்ளிவிடுகிறார்கள். கட்டணமும் கண்டபடி ஏறி கடைசியிலே காசு கட்ட வழி இல்லாது செல்போனை தூக்கி கடாசி விட்டு ... வெறுங்கையுடன் அலைகிறார்கள்.



வேறு சிலர் கையிலே காசை வைத்துக் கொண்டு செல்போனை வாங்கிவிட்டு... யாருடன் கதைப்பது. என்னத்தைக் கதைப்பது,ஒருவரும் தங்களுக்கு ‘கோல்’ எடுக்கிறார்கள் இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டு திரிகிறார்கள்.

இந்த செல்போன் வந்தாலும் வந்தது; பலருக்கு நிம்மதி போயே போச்சு.

*வை.அசோகன் — வல்வெட்டி*

***கேள்வி:— பித்தா! ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால் என்ன வரும்?***

*பதில்:—* இன்னொன்று...

*து.வடிவேற்கரசன்—வத்தளை*

***கேள்வி:—பித்தா எனக்கொரு சந்தேகம்.வேண்டாம் வேண்டாம் என்று கொண்டு இந்த பெண்கள் ஏன்தான் ஏராளமான சீதனம் கொடுத்து ஆண்களை திருமணம் செய்துகொள்கிறார்கள்?***

*பதில்:—*கண்ணு...வீட்டுக்கு ஒரு வாஷிங்மெஷின், குக்கர், கிரைண்டர், மிக்ஸர் என்று ஏராளமான பொருட்களை லட்சக்கணக்கில் கொடுத்து வாங்குவதை விட இப்படி வாங்குவது லாபம்தானே! அவைகள் 1—2வருடங்களில் பழுதாகிவிடும். ஆனால், நாங்களென்றால் 30—35 வருடங்களுக்கு வேலை செய்வோம் அல்லவோ.

*க.சித்திரா—பாரதிபுரம்*

***கேள்வி:— பித்தா! இந்தக் காலத்தில் சேமிக்கின்ற எண்ணம் இல்லாமல் பிறந்ததினம், நது ஜனனம், காதுகுத்து, தொட்டிலில் போடுதல் என்று ஆடம்பரக் கொண்டாட்டங்கள் செய்பவர்களுக்கு நீர் என்ன அறிவுரை கூற விரும்புகிறீர்?(இருமனம் இணையும் திருமண விழாவை கொண்டாடுவதில் தப்பில்லை என நான் நினைக்கிறேன்)***

*பதில்:—* இந்த ஆடம்பரக் கொண்டாட்டாங்கள் சேமிப்பை பாதிப்பதாக ஏன் நினைக்கிறீர்? ஊரிலே ஏற்கனவே கொடுத்தவற்றை வசூல்பண்ணத்தான் பலரும் இவ்வாறான கொண்டாட்டங்களை நடத்துகிறார்கள். 50 ஐ செலவு செய்து 100 ஐ வசூலித்து கொள்கிறார்களே...! இது லாபம் தானே...!

*செ.தயாளினி — புதுக்குடியிருப்பு*

***கேள்வி:— பித்தா! ஆட்டோ வைத்திருக்கும் ஒருவரை நான் காதலிக்கிறேன்.***



***திருமணம் செய்து கொள்ளலாமா?***

*பதில்:—*ஓ... தாராளமாக... ஏனென்றால் பிரசவத்தக்கு ஆஸ்பத்திரி வரை போக வேண்டிய அவசியம் இருக்கிறதே...

*த.சில்வெஸ்டர், நீர்கொழும்பு.*

***கேள்வி:— பித்தா! பொல்லைக் கொடுத்து அடிவாங்குவது என்பதனை உதாரணம் ஒன்றுடன் விளக்கும்?***

*பதில்:—* அமெரிக்காவைச் சேர்ந்த சச்சில் சிங்கர் என்ற ஒருவர் 1981 ஆம் ஆண்டு அங்குள்ள நூலகம் ஒன்றில் புத்தகம் ஒன்றை வாடகைக்கு எடுத்தார். ஆனால் அதனைத் திருப்பிக் கொடுக்க மறந்து விட்டார். அதனைப்பற்றி மறந்தும் விட்டார். அண்மையில் தனது வீட்டின் அலுமாரியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது ஏதேச்சையாக அந்தப் புத்தகத்தைக் கண்டார். அதனை எடுத்துப் பார்த்தபோது பல வருடங்களுக்கு முன்னால் நூலகத்திலிருந்து எடுத்த புத்தகம் என்பதை உணர்ந்தார். உடனே புத்தகத்தை எடுத்துக்கொண்டுபோய் நூலகத்தில் ஒப்படைத்தார். நூலக நிர்வாகிகள் கணக்குப் பண்ணிப் பார்த்துவிட்டு 1981முதல் இப்போது வரை திருப்பிச் செலுத்தாததற்குத் தண்டப்பணமாக 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபா கட்டவேண்டும் என்றனர். கட்டிவிட்டு வீட்டுக்குச் சென்றார்.

*அன்னமலர் — நீர்கொழும்பு*

***கேள்வி:— பித்தா! என் மகனை டாக்டருக்கு படிக்க வைக்கலாம் என்றிருக்கிறேன்.... உமது அபிப்பிராயம்?***

*பதில்:—* படித்துவிட்டு நமது நாட்டிலேயே சேவை செய்யச் சொல்லும். இங்கே தமது அரசாங்கத்தின் இலவசக் கல்வியிலே படித்து — பட்டம் பெற்று டாக்டராகி விட்டு வெளிநாட்டுக்கு ஓடிப்போய் அங்கே உழைக்கும் எண்ணம் இருக்குமாயின் வேண்டாம்.

*அ.தங்கம் — சரசாலை*

***கேள்வி:— பித்தா! காதல் செய்வது தப்பா?***



*பதில்:—* யார் சொன்னது... ஆனால் உந்தப் பெயரை வைத்துக் கொண்டு காதலிப்பதுதான் மகாதப்பு. ஏனென்றால் உமது காதலர் உம்மை அடிக்கடி உரசிப் பார்ப்பாரே.

*பி.கருவேங்கை — மல்லாவி*

***கேள்வி:— அன்பின் பித்தா! இந்த காக்கை வன்னியன் பரம்பரை எப்போது அழியும் என்று கூறமுடியுமா?***

*பதில்:—* மூக்கு இருக்கும் வரை சளியும் இருக்கத்தான் செய்யும்.

*ம.வதனி — தெஹிவளை*

***கேள்வி:— பித்தா! இப்போதெல்லாம் ஆண்களைப்போல் பெண்களும் Sun Glass போட்டுக்கொண்டு அலைகிறார்களே! ஏன் கண்ணுக்கு குளிர்ச்சிக்காகவோ... அல்லது வேறு ஏதும் காரணத்துக்காகவா?***



*பதில்:—*இல்லை மனக் (கி)குளிர்ச்சிக்காக... அதாவது எதிரே வரும் பெண்ணை செட் அடிக்க வசதியாகத்தான் பல ஆண்கள் Sun Glass போடுகிறார்கள். இதே வழியை ஏன் நாமும் பின்பற்றக் கூடாதென்று இப்போது பெண்களும் போடுகிறார்கள்.

*த. தங்கேஸ்வரி—அரியாலை*

***கேள்வி:— இசையிலே ஆர்வம் இல்லாதவர்கள் எல்லாம் மரக்கட்டைகள் என்பது எனது அபிப்பிராயம். இவ்வளவு எழுதுகிறீரே உமக்கு வீணை, வயலின், நாதஸ்வரம், ஏதன் ஏதாவது வாசிக்கத் தெரியுமா?***



*பதில்:—* எனக்கு சுடர் ஒளி, உதயன், குமுதம், ஆனந்த விகடன் என்பவற்றைத்தான் வாசிக்கத் தெரியும். நீர் குறிப்பிட்டவைகளை எல்லாம் பேப்பரிலே எழுதித் தந்தால் நன்றாக வாசிப்பேன்.

# கையடக்கத் தொலைபேசியை கவனமாகப் பாவிக்கப்பட வேண்டாமா?

‘கையடக்கத் தொலைபேசி’ அதாவது மொபைல் போன், இது இன்றைய அதி நவீன உலகில் அத்தனை பேரையும் தன் ஆதிக்கத்தில் ஆட்டிவைக்கும் ஒரு கையடக்க விஞ்ஞான சாதனை. பத்தாம் வகுப்பு மாணவர் முதல் மிகப் பெரிய வர்த்தகர்கள் வரை முச்சக்கரவண்டி ஒட்டுநர் முதல் ஆகாயத்தில் பறக்கும் பைலட் வரை மொபைலை ஒரு செல்லக் குட்டி மாதிரி தூக்கிக்கொண்டு அலைகிறார்கள். மொபைல் கையில் இருந்தால் உலகே எம் வசம்தான். ஈமெயில் அனுப்பலாம். பொழுதுபோகாவிட்டால் விளையாடலாம். ஏன் சினிமா கூடப் பார்க்கலாம். அந்த மொபைலை சரியானபடி பராமரிப்பதும் மிக அவசியம். அதற்கான சில வழிகாட்டிகள் இவை.

*மொபைல் போனை ஈரக் கையால் தொடக்கூடாது. தண்ணீர் படும் இடங்களில் வைப்பதோ, மழையில் நனைப்பதோ கூடாது. அப்படி தண்ணீர் பட்டு விட்டால் உடனே நிறுத்தி வைத்துவிட்டு நன்கு உலர விடவும். ஈரத்தால் உள்ளே இருக்கும் இயந்திர பாகங்கள் பழுதடைந்தால் உபயோகத்திறன் குறைந்துவிடும்.

*மொபைலை கீழேபோடக்கூடாது. மேல் பாகமும், உள் பாகங்களும் விரிசலடைந்தால் சரியாகக் கேட்காது. கையில் வைத்துக் கொள்வதைத் தவிர்த்து கழுத்தில் தொங்கவிட்டுப் பொக்கெட்டிலோ, இடுப்பு பெல்ட்டிலோ வைத்துக்கொள்வதே நல்லது.

*சிறிய கைப்பை மற்றும் ஹான்ட் பாக்கில் வைத்தால் மற்ற சாமான்களுடன் உராய்ந்து வீணாகிவிடும். மொபைல் வாங்கியவுடன் அதற்குச் சரியான உறையை வாங்கி அதில் வைக்கவும்.

*அதிக வெப்பம், அதிக குளிர்ச்சி காரணமாகச்செல்போனிலுள்ள பாட்டரிகள் பாதிக்கப்பட்டு விரைவில் வீணாகிவிட வாய்ப்புண்டு.



* மொபைல் போனிலுள்ள பாட்டரி முழுதும் சாஜான பின்பு அதை சாஜரிலிருந்து எடுத்து விட வேண்டும். அதற்கு மேலும் சாஜ் செய்தால் அதிக வெப்பத்தால் பட்டரி வீணாவதுடன், உள் பாகங்கள் உருகவும் வாய்ப்பு உண்டு.

*மொபைலை விட அதனுள்ளிருக்கும் பட்டரிகளின் பாதுகாப்பு மிக முக்கியமானது.

*பட்டரிகளை எடுக்கும்போதும், போடும் போதும் எதன்மேலும் இடிப்பதோ, கீழே போடுவதோ கூடாது. அதிலுள்ள போன் மற்றும் பட்டரிகளை இணைக்கும் உலோகத் தொடர்புடைய தகடுகளை மிகக் கவனமாகக் கையாள வேண்டும்.

*பட்டரிகளை எடுக்கும் முன் மொபைலை அணைத்துவிடவும். பலர் இதுபோல் செய்வதில்லை. அப்படிச் செய்யாவிடின் பட்டரியின் சக்தி குறைந்துவிடும்.

*பட்டரிகளை சூரிய வெளிச்சம் நேரடியாகப் படும் இடங்களில் வைக்கக் கூடாது.

*நிக்கல் மெட்டல் ஹைட்ரைட் (NIMH) லித்தியம் இயான் (LIION) பட்டரிகள் நல்ல தரம் வாய்ந்தவை இவையே நவீன மொபைல் ஃபோன்களில் உபயோகிக்கப்படுபவை. நிக்கல் காட்மியம் பட்டரிகள் சரியானபடி சாஜ் செய்யப்படாவிட்டால் விரைவில் வீணாகிவிடும்.

35 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

# தொடரும் தவிப்பு

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

'இவங்களெல்லாம் தப்பு செஞ்சு விட்டு உள்ள வந்திருக்கிறாங்கள் - ஆனா நாம் இவங்க செஞ்ச தப்புக்காக அநியாயமா உள்ள வந்திருக்கோமே' என்ற உணர்வு தான் முதலில் தோன்றியது செல்விக்கு. தன் தோளைப் பற்றியிருந்த நளினியின் கையை மெதுவாக விலக்கினார்.

அதற்குள் எங்கிருந்தோ ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்க நளினி விரைந்து எழுந்து உள்ளே போனார். அப்போதுதான் நளினிக்கு சிறையிலேயே குழந்தை பிறந்தது செல்விக்கு ஞாபகம் வந்தது. பெண்ணுக்குப் பெண் ஒரு இரக்கம் தோன்றியது.

'ஒன்றுமே செய்யாத நம்ம மேலே பொய் வழக்குப்போட்டு இந்தப் பாடு படுத்தினார்களே - கைக்குழந்தையோடு இருந்த நம்மாலேயே அதைத் தாங்க முடியவில்லையே. பாவம் அந்தப் பெண் வயித்துல பிள்ளையோட எத்தனை கஷ்டப்பட்டுச்சோ? ஒருவேளை அந்தப் பெண்ணையும் இப்படி சித்திரவதை பண்ணித்தான் வழக்குல சேர்த்தாங்களோ என்னவோ. நம்ம பிள்ளைக்காகத்தான் நாம் விஜயனை கையெழுத்துப் போடச் சொன்னோம். அந்த மாதிரி இந்தப் பொண்ணும் வயித்துப் பிள்ளைக்காக என்ன கஷ்டத்தையெல்லாம் தாங்குச்சோ. இத்தனை கஷ்டத்துக்கு நடுவுல சேதமில்லாம பிள்ளையைப் பெற்று எடுத்ததே பெரிய விசயம்தான். அந்தப் பெண்மேல போய் அநாவசியாமா கோபப் பட்டுட்டோமோ?'

அதற்குள் சாந்தி பத்மாவிடம் தங்கள் இருவரின் கதையையும் கூறத் துவங்கியிருந்ததை கவனித்தார். அமைதியாக அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். சாந்தி கூறிமுடித்ததும் பத்மா அவர்கள் இருவரையும் ஆறுதல் படுத்தினார்.

'அவனுங்களுக்கு இதயமே கிடையாதும்மா' - என்றவாறே தாங்கள் அனுபவித்த சித்திரவதைகளைக் கூறினாள். கேட்ட செல்வியின் மனம் பதைத்தது. அவர்கள் அனுபவித்தவற்றில் தனக்கு நேர்ந்தது ஒன்றுமேயில்லையெனப் பட்டது. படுபாவிகள்.

பத்மாவிற்கு மூன்று பிள்ளைகள். மூத்தவர் நளினி. இரண்டாவது மகன் பெயர் பாக்கியநாதன். கடைக்குட்டி மகள் - கலியாணி. இவர்களில் பத்மா, நளினி, பாக்கியநாதன் மூவரும் வழக்கில் மாட்டுப்பட்டு சிறையில். போதாததற்கு நளினியின் கணவன் முருகனும். மீதம் உள்ள கல்யாணி மீது வழக்கில்லையே தவிர அவரும் சித்திரவதைகளுக்குத் தப்பவில்லை. சட்டத்திற்குப் புறம்பாக மல்லிகையில் வைத்து விசாரணை என்ற பெயரில் கொடுமைப்படுத்தப்பட்டார். ஒட்டுமொத்த குடும்பமும் பட்ட கொடுமைகள் சொல்லில் அடங்கா. அதிலும் வாக்குமூலம் பெறுவதற்காய் அந்த அதிகாரிகள் நடந்து கொண்டவிதம் இருக்கிறதே.

'உன் பிள்ளைகளைக் கொன்றுவிடுவோம்' - என மிரட்டியே பத்மாவிடம் கையெழுத்து வாங்கிவிட்டனர்.

பாக்கியநாதனிடம் வாங்கிய முறை மிகக் கேவலமானது. அடிக்கும் உதைக்கும் அஞ்சாது எந்தவித மிரட்டலுக்கும் மசியாது இருந்த அவரின் மன உறுதியையே பொடி பொடியாக்கும் வகையில் ஒரு மிரட்டலை அவர் முன்வைத்தனர். ஆம்! பெற்ற தாயையும் உடன் பிறந்த சகோதரிகளையும் கண் முன் நிர்வாணம் ஆக்குவதாகக் கூறினால் எந்த ஆணுக்குத்தான் மனம் பதைக்காது? இத்தனைக் கீழ்த்தரமாய் நடந்து கொண்டவர்களை அதிகாரிகள் என்று கூறாமல் அரக்கர்கள் எனக் கூறுவது சாலப்பொருந்தும் தானே!

இது எல்லாவற்றிலும் உச்சக்கட்டம் நளினிக்கு நேர்ந்ததுதான். கைது செய்யப்பட்டபோது நளினி இரண்டு மாத கர்ப்பிணி. கைதான நொடி முதலே கொடுமைகள் துவங்கிவிட்டன. கைதான இடத்திலிருந்து மல்லிகைக்குக் கொண்டுவரும் வழியெங்கும், கணவனின் கண் முன்பே, கூட வந்த அதிகாரி நளினியிடம் தவறாக நடந்து கொள்ள பெரும் மன அதிர்ச்சிக்கு ஆளானார். மல்லிகையில் நடந்த கொடுமைகள் ஒவ்வொன்றும் வெளியே சொல்வதற்கே நாகூசும் அளவில் இருந்தன. கர்ப்பவதி என்றும் பாராமல் அவரை அடித்துத் துன்புறுத்தினர் பாவிகள். கணவன் கண் முன் மனைவியை நிர்வாணமாக்கி அடிப்பதும் மனைவி கண் முன் கணவனை நிர்வாணமாக்கி அடிப்பதும் இது போல எத்தனையோ.. ஒரு பெண்ணாக மற்றொரு பெண்ணிடம், ஏன் பெற்ற தாயிடம்,கூட அதை சொல்வதற்குக் கூசினார் நளினி. அதையும் மீறி சொன்னவை போக, இன்னும் அவர் மனதிற்குள் புதைந்து கிடப்பவை எத்தனையோ?



சொன்னவை போக,
இன்னும் அவர் மனதிற்குள்
புதைந்து கிடப்பவை எத்தனையோ?

போதாததற்கு, தாங்கள் சொன்னபடி கேட்காவிட்டால் அவள் கணவனைக் கொன்றுவிடுவதாக மிரட்டி இருக்கின்றனர். இவை எதுவும் பலிக்காமல் போகவே அடுத்த கட்டமாக இருவரையும் தனித் தனியாகப் பிரித்து உளவியல் ரீதியான தாக்குதல்களைத் துவங்கி இருக்கின்றனர்.

நளினி அவர் கணவர் முருகனைவிட 5வயது பெரியவர். இதை வைத்தே அவர்களிடம் விளையாடி இருக்கிறார்கள்.

'முருகன் உன்னைவிட சிறியவன், மேலும் வெளிநாட்டுக்காரன், அதனால் உன்னை ஏமாற்றிவிடுவான். அவனுக்குக் காரியம்தான் முக்கியம். அதற்காகத்தான் உன்னைக் காதலிப்பதாக நடித்திருக்கிறான். உன்னைப்போல பல பெண்களிடம் அவனுக்குத் தொடர்பு உண்டு. அதனால் நீ அவனை மறந்துவிட்டு அப்ருவராகிவிடு. அப்படிச் செய்தால் காவல்துறையிலிருக்கும் ஒரு அதிகாரியையே உனக்கு திருமணம் செய்து வைக்கிறோம். அரசாங்க வேலை தருகிறோம். அதோடு அரசு வீடு அரசு பாதுகாப்பு என வசதியாக வாழலாம்.' - இப்படியெல்லாம் பலவிதமாகப் பேசியிருக்கின்றனர்.

அதே நேரம் முருகனிடம் சென்று 'நளினி உன்னைவிட பெரியவள். உன்னை நன்றாக ஏமாற்றுகிறாள். அவள் நடத்தை சரியில்லை. பலருடன் தொடர்பு வைத்துள்ளது எங்கள் விசாரணையிலிருந்து தெரிய வந்தது. நீ விரும்பினால் அதையெல்லாம் உனக்கு நிருபித்துக் காட்டுகிறோம்' - என்று கூறியுள்ளனர்.

இதற்கும் இவர்கள் மசியாதபோது பத்திரிகைகளுக்குப் பலவாறாக பொய்ச் செய்திகள் கொடுத்துள்ளனர்.

'நளினியின் குழந்தைக்குத் தந்தை யார்?'

'விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவருடன் நளினிக்கு தொடர்பா?'

'நளினி குழந்தையைக் கொல்ல முயன்ற முருகன்!'

இப்படி பொய்ச் செய்திகள் பத்திரிகைகளில் வரத் துவங்கின. நளினியின் வயிற்றில் முருகனின் குழந்தை உள்ளவரை அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது என நினைத்து, அக்குழந்தையைக் கருவிலேயே அழிக்க பல விதங்களில் முயன்றனர். நளினியின் தாய் பத்மாவையும், தம்பி பாக்கியநாதனையும் துன்புறுத்தி நளினியிடம் குழந்தையை அழிக்க வற்புறுத்துமாறு மிரட்டினர்.

எதுவும் நடக்காமல் போகவே உடல்ரீதியாக மட்டுமல்லாமல் மிக மோசமான வார்த்தைகளால் வசைபாடுவதன் மூலமும், தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

முருகனையும் நளினியின் தாய் பத்மாவையும் மிகக் கேவலமாக தொடர்பு படுத்தி வசைபாடும் அளவிற்கு தரம் இறங்கினர். எல்லாக் கொடுமைகளையும் பொறுத்துக் கொண்டு, சரியான உணவின்றி உறக்கமின்றி அந்தக் குழந்தையைப் பெற்றெடுக்க நளினி பட்ட சிரமங்களைக் கேட்ட செல்வியின் நெஞ்சம் உருகியது. அவர்கள் மீது கோபப்பட்டதற்காய் மீண்டும் வருந்தினார்.

நளினி, பத்மா, செல்வி, சாந்தி, ஆதிரை ஐவரும் ஒருவருக்கொருவர் ஆறுதலாக ஒரு குடும்பமாக சிறையில் வாழ்வைக் கழித்தனர். நளினி, சாந்தி, செல்வி மூவரின் குழந்தைகளும் வித்தியாசமின்றி ஒன்றாக வளர்ந்தனர்.

*****

அத்தனை நேரம் ஒரு கதைபோல தன் வாழ்வின் கொடுமைகளைக் கூறிவந்த செல்வி சற்றே நிறுத்தினார். அந்த அரங்கமே நிசப்தமாக, இறுக்கத்துடன் அமர்ந்திருந்தது. செல்வி கூறியவை அங்கு கூடியிருந்த ஒவ்வொருவர் மனதிலும் பேரலைகளை ஏற்படுத்தியிருந்தது. சிறிது நீர் அருந்திய பின் மீண்டும் தொடர்ந்தாள் செல்வி.

சி.பி.ஐ.யின் வன் கொடுமைகளிலிருந்து தப்பித்துவிட்டபோதும் சிறை வாழ்க்கை அவர்கள் மன நிலையை மிகவும் பாதித்தது. அதிலும் குழந்தைகள் வளர, வளர அவர்களுக்குச் சரியான படி உணவளிக்க முடியாமல் போவதும், அவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற பயமும் அந்தத் தாயுள்ளங்களை அறுத்தது. மாற்றுடைகள் கிடையாது. தேவையான பொருட்களை வாங்கித்தர உதவினவர்கள் கூட கிடையாதென அவதியடைந்தனர். அதிலும் செல்விக்குப் பொருளாதார ரீதியாக உதவக்கூட யாருமில்லை. ஏனெனில் செல்வியின் உறவினர்கள் மிகுந்த ஏழ்மை நிலையிலேயே இருந்தனர். இந்த நிலையில்தான் ஒரு தெய்வம்போல வந்து உதவியவர் அறிவு அம்மா. உள்ளே அறிவும் ஆதிரையும் உதவினால் வெளியே பல வகைகளில் உதவியவர் அறிவு அம்மா. வேறு யார் நம் அற்புதம்தான். செல்விக்கு மட்டுமல்ல உள்ளேயிருந்த அனைவருக்கும் தன்னால் இயன்ற வரையில் என்றில்லாது, சிரமப்பட்டேனும் பல உதவிகளைச் செய்தார் அந்தத் தாய்.

'இன்று நான் அணிந்திருக்கும் உடை உள்பட என்னிடம் உள்ள உடைகள் எல்லாமே அவரும் ஆதிரையும் கொடுத்தது தான்! - என்று செல்வி கூறியபோது அரங்கமே தன் கையொலி மூலம் அந்தத் தாய்க்குப் பாராட்டுக் கூறி மகிழ்ந்தது.

(தவிப்பு தொடரும்.....)

யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?

# சின்ன சின்ன உளவியல் குறிப்புகள்

### மனப்பாரமா?

மனப்பாரம், கவலை, சோகம் என்பவை எல்லோருக்கும் பொதுவான விடயங்கள்தான். இந்த மண்ணில் பிறந்த எந்த ஜீவனுக்கும் இது இல்லாமல் போகாது. ஐந்தறிவு ஜீவனுக்குக் கூட இருக்கலாம்.

எனவே இவைஎல்லாம் உங்களுக்கு மட்டுமே வந்த தனிப்பட்ட சொத்தாக நினைத்து கப்பல் மூழ்கிவிட்டமாதிரி இருக்காதீர்கள். உங்களுக்குப்பிடித்தமான, நீங்கள் இரசித்த, உங்கள் வாழ்க்கையில் நடந்த சந்தோஷமான நிகழ்வுகளை குறிப்பெடுத்து எழுதி வையுங்கள்.

மனப்பாரமாக இருக்கும்போது இவைகளைப் படித்தால் தொந்தரவு செய்த சோகம் தொலைதூரம் போய்விடும். மறைந்துவிடும். சில நேரங்களில் இதுமாதிரியான வழிகளில் நாமே ஆறுதல் தேடிக்கொள்ளலாம்.

### பொறுமை இல்லையே நமக்கு?

எம்மை நாம் அறிந்துகொள்வது என்பது செயற்படுவதில் அதாவது உறவில் எம்மைச் சுற்றி வருவதாகும். இதில் கடினம் என்னவென்றால் நாம் பொறுமையற்றவர்களாக இருக்கிறோம். நாம் போக வேண்டும். ஒரு முடிவை அடைய வேண்டும். ஆகவே எமக்கு எம்மைப் பற்றிக் கற்றறிய, நோக்க வாய்ப்புக் கொடுக்கும் காலமோ சந்தர்ப்பமோ இல்லாமல் போய்விடுகிறது. அத்துடன் பலவித செய்கைகளுக்கும் நாம் கட்டுப் பாடுடையவர்களாக இருக்கிறோம். பணம் சம்பாதிப்பது, குழந்தைகளை வளர்ப்பது, ஏதாவது அமைப்புகளில் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது இப்படிப்பல.



இதனால் எம்மை அறிவதற்கோ, கற்பதற்கோ எமக்கு நேரம் கிடைப்பதில்லை.

ஆகவே எதிர்கால நிகழ்வுக்கான பொறுப்பு எம்மையே சாரும். மற்றவரை அல்ல. குருமாரைப் பின்பற்றுவது, அவர்களது வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது, கடைசியாக வந்த புத்தகங்களைப் படிப்பது இப்படி உலகம் முழுவதும் பல வழிமுறைகள் பரவிக்காணப்படுகின்றன.

இது முற்றிலும் வெறுமையானது, வீணானது. ஏனெனில் நாம் பூமி முழுவதும் சுற்றிவந்தாலும் கடைசியில் எம்மிடத்தில் தான் வந்துசேர வேண்டும். எம்மில் பலரும் எம்மைப்பற்றி முழுவதுமாகத் தெரிந்துகொள்ளாததால் எம்முடைய சிந்தனை, உணர்வு, செயற்பாடு ஆகியவற்றின் நடைமுறையைத் தெளிவாகப் பார்ப்பது என்பது மிகக் கடினமாகிவிடுகிறது.

### மனம் உடையாதீர்கள்

பொதுவாக நாற்பது வயதுக்கு மேற்பட்டால் உடலில் பல்வேறு பிரச்சினைகள் ஆரம்பித்துவிடுகின்றன. அப்பாடா என்று மனம் உடைந்து போகிறவர்கள் பலர் உண்டு. இப்போதெல்லாம் 35 வயதிலேயே கால் வலியிலிருந்து எல்லா வலிகளும் வந்துவிடுகின்றன.

இதனால் மனம் தளர்ந்து போகாமல் இருந்த ஏதாவது சுவையான பொழுதுபோக்கில் ஈடுபடுங்கள். மனதை சந்தோஷமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருங்கள். உடலைப் பலமாக வைத்திருக்க உடற்பயிற்சி செய்யுங்கள். ஆரம்பத்தில் இவை கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். ஆனால், இவற்றைச் செய்யத் தொடங்கிவிட்டீர்களானால் உங்கள் மனதில்சந்தோஷமும், புத்துணர்ச்சியும் நிலவுவதை நீங்களே உணர்வீர்கள்.

### குழப்பத்தைத் தவிர்க்க என்ன செய்யலாம்?

குழப்பங்கள் இல்லாமல் செயற்பட மனதில் தெளிவும், உறுதியும் வேண்டும். அதற்கு முதலில் சரியான முடிவெடுக்க வேண்டும் (decision making)

இரண்டாவது அந்த முடிவை எக்காரணம் கொண்டும் எந்தச் சூழ்நிலையிலும் மாற்றாமல் செயற்படுத்த வேண்டும்.

மூன்றாவது சரியான முடிவை செயற்படுத்தும்போது வரும் எதிர்ப்புகளை உணர்ச்சிவசப்படாமல் சண்டையிடாமல் சுமுகமாகப்பேசி செயற்படுத்த வேண்டும். தேவையான இடங்களில் பிறர் சொல்வதை மறுத்துப்பேச வேண்டும். இதைத்தான் ஆங்கிலத்தில் dont say yes, when you want to say no என்று சொல்கிறார்கள்.

மறுப்புத் தெரிவிக்க முன், மறு தரப்பிலுள்ளவர்கள் உங்கள் நலனுக்காக மட்டும் யோசனை சொல்கிறார் என்றால், அவரோடு உங்கள் விருப்பத்தை மனம் விட்டுப்பேசி அவரை ஏற்கும்படி செய்யலாம். ஆனால், மறுப்புத் தெரிவித்துவிட்டு தவறு செய்துவிட்டோமா என்று குற்ற உணர்வு கொள்ளக்கூடாது.

எந்தப் பிரச்சினையையும் சரியாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். சரியாக முடிவெடுக்கத் தெரியாதவர்கள் நடுநிலையாளர் ஒருவரின் உதவியுடன் முடிவு செய்யலாம். பிரச்சினைகளைத் தெளிவாக ஆராய்ந்து சரியான முடிவெடுத்து அதிலிருந்து பின்வாங்காது அவற்றைச் செயல்படுத்துபவர்களே மன உறுதி மிக்கவர்கள்.

# இங்கிலீஸ்காரன் படத்தில் சத்தியராஜ் - நமீதா

மகாநடிகன் வெற்றிப் படத்தை தொடர்ந்து சத்திய ராஜ்— ஷக்தி சிதம்பரம் மீண்டும் இணையும் படம் 'இங்கிலிஷ்காரன்'. செவன் கிளாஸ் பிலிம் சார்பில் இப்படத்தை முதன் முறையாக இயக்குநர் ஷக்தி சிதம்பரம் தயாரிக்கிறார்.

இங்கிலிஷ்காரன் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் ஷக்தி சிதம்பரம் தன் பாணியில் கொமடி கலந்த கதையாக இப்படத்தை உருவாக்கியுள்ளார்.

சத்தியராஜ்—வடிவேலு இருவரும் இணைந்து வரும் காட்சிகள் தியேட்டரை அதிர வைக்கும். குறிப்பாக சத்தியராஜை மிரட்ட, வெள்ளைச் சேலை உடுத்தி பேயாக வடிவேலு வர, அவருக்குப் பதிலடி கொடுக்க சந்திரமுகி கெட்டப்பில் சத்தியராஜ் வடிவேலுவைப் பயமுறுத்துவது இங்கிலிஷ்காரன் படத்தின் ஹைலைட் காட்சி.

நமீதா, மதுமிதா, சிவபாலாஜி,காதல் தண்டபாணி, ஐஸ்வர்யா, லொள்ளு சபா சந்தானம், சாம்ளின் பாலு உட்பட பலர் நடித்திருக்கிறார்கள். தெலுங்கு பட ஹீரோ சிவபாலாஜி இந்தப் படத்தில் மதுமிதா ஜோடியாக நடிக்கிறார்.

இங்கிலிஷ்காரன் படம் கிராமத்தில் தொடங்கி பட்டணம் வருகிறது. கிராமத்துக்காட்சிகளுக்காக கோபி செட்டி பாளையம், ஈரோடு பகுதிகளில் படமாக்கப்பட்டிருக்கிறது.

'யாரது தலையாட்டி ரசிப்பது' என்ற பாடல் காட்சியை வித்தியாசமாகப் படமாக்கி இருக்கிறார் இயக்குனர் சக்தி சிதம்பரம்.

பாடகியாக நினைக்கும் மதுமிதாவின் ஆசைக்கு அவரது அம்மா தடைபோட, மதுமிதாவின் மனக் குமுறல் பாடலாவது போல் காட்சி. 126 ஷாட்களில் இந்தப் பாடல் படமாகி இருக்கிறது.

இசை — தேவா, ஒளிப்பதிவு—சுரேஷ்தேவன், சண்டைப்பயிற்சி—சூப்பர் சுப்புராமன், நடனம்—சிவசங்கர், சாந்தி, கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்—ஷக்தி சிதம்பரம். இங்கிலிஷ்காரன் ஜூன் மாதம் திரைக்கு வருகிறான்.

சத்தியராஜ் நடிக்கும் படங்கள் சுமாரான வசூலைத் தந்தாலும் அவருக்கு படவாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.



'இங்கிலீஸ்காரன்' —சத்தியராஜ், நமீதா—

# யாருக்கும் வளைந்து கொடுக்கமாட்டேன் -சைலாலோ போஸ்

தமிழ்பட உலகில் புதிதாக கலடி எடுத்து வைத்திருப்பவர் சைலாலோபேஸ். 1997இல் 'மிமிஸ் இந்தியா' அழகிப் பட்டம் பெற்ற இவர் 'பாய்ஸ் அன்ட் கேர்ள்ஸ்' தமிழ் படத்தின் நாயகி.

''எனது சொந்த ஊர் கேரள மாநிலத்தில் உள்ள வர்கலா. பெங்களூர் கல்லூரியில் பி.காம். ஒட்டல் மனேஜ்மன்ட் படித்திருக்கிறேன். நடிப்பு மீது எனக்கு அவ்வளவாக ஆசை இல்லை. மிஸ் இந்தியா ஆன பிறகு இந்தி, தெலுங்கு படங்களில் நடிக்க அழைப்பு வந்தது.

லாரா தத்தா என் நெருங்கிய தோழி. அவரோடு சேர்ந்து அரசாட்சி படப்பிடிப்பை பார்க்க வந்தபோது நடிகர் அர்ஜுனை சந்தித்தேன். அவர் என்னை நடிக்க வரும்படி அழைத்தார். விருப்பம் இல்லாததால் மறுத்துவிட்டேன்.

என்னைப்பற்றி கேள்விப்பட்டு, இந்த தமிழ்ப் படத்தில் நடிப்பதற்காக அழைத்தார்கள். கதை பிடித்து இருந்ததால் ஒப்புக் கொண்டேன். இந்த படத்துக்கு அந்தக்காட்சி ஒன்றில் நடிக்க வேண்டும் என்றார்கள். கதைப்படி இந்தக் காட்சி மிகவும் அவசியம் என்பதால் அதையும் ஏற்றுக்கொண்டேன். 4 பேர் மட்டும் அரங்கத்தில் இருக்க 3 நிமிடத்தில் அந்தக் காட்சியை படமாக்கினார்கள்.

என்னைப் பொறுத்தவரை, இந்த படத்துக்கு நான் நடிக்கும் காட்சி எப்படி அமைய வேண்டும் என்பதை மட்டும் சொல்கிறார்கள். அந்தக் காட்சி நன்றாக வரும்வரை கடுமையாக உழைக்கிறார்கள். நான் நடிப்புக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கிறேன்.

படத்திற்கு 'சான்ஸ்' வேண்டும் என்தற்காக எந்த தயாரிப்பாளருக்கும், டைரக்டருக்கும் நான் வளைந்து கொடுக்கமாட்டேன். அந்த அவசியம் எனக்கு இல்லை. உழைப்பு, திறமை, உற்சாகம் இருந்தால் வெற்றி பெற முடியும் என்றார்.

# கதாநாயகர்களுக்குக் கொடுக்கும் மாரியாதையை இயக்குநர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்

கதையும், திரைக்கதையும் சரியாக அமையாத பட்சத்தில் சூப்பர் ஸ்டாரும், புதுமுகமும் ஒன்றுதான் என முகத்தில் அறைந்துசொன்ன படங்கள் 'ஆளவந்தான்','பாபா'. ஆனாலும் மாறவில்லை திரையுலகம்.

நியாயமாக ஹீரோவுக்குக் கொடுக்கப்படும் மரியாதையை இயக்குனர்களும், தயாரிப்பாளர்களும் கதாசிரியருக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் இங்கு அதற்கு நேர் எதிராக கதாசிரியருக்கு சில ஆயிரங்களை வீசிவிட்டு, படத்துக்கு சம்பந்தமில்லாமல் நான்கு பாடலுக்கு ஆடும் நாயகிக்கு நாற்பது லட்சங்கள் வாரியிறைக்கிறார்கள்.

'சந்திரமுகி'இப்படி கண்மண் தெரியாமல் ஓட இரண்டு காரணங்கள். ஒன்று ரஜினி, மற்றொன்று கதை. 'சந்திரமுகி'யின் ஒரிஜினல் கதை 'மணிசித்ரதாழ்' எழுதியவர் மதுமுட்டம். இவருக்கு 'மணிசித்ரதாழ்' படத்துக்காக சில ஆயிரங்கள் கொடுக்கப்பட்டன. இதே கதை 'ஆப்தமித்ரா' என்ற பெயரில் கன்னடத்தில் எடுக்கப்பட்டபோது 'மணிசித்ரதாழ்' தயாரிப்பாளர் அப்பச்சனும் இயக்குனர் பாசிலும் கணிசமான தொகையைப் பெற்றுக்கொண்டனர். மதுமுட்டத்துக்கு கிடைத்தது ஒரிஜினல் திருநெல்வேலி அல்வா.

சந்திரமுகி அதே கதையுடன் தயாராவது தெரிந்து அப்பச்சனும், பாசிலும் கறாராக சிவாஜி புரொடக்ஷனிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டனர். இதில் பாசில் வாங்கியது மட்டும் 25 லட்சங்கள் எனத் தெரிகிறது. நியாயமாக பணம் கிடைக்க வேண்டிய மதுமுட்டத்துக்கு இந்த முறையும் ஏமாற்றமே. இதனால் நொந்துபோனவர் தற்போது நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளார்.



'கண்களால் கைது செய்' -ப்ரியமணி-

# சினி பிட்ஸ்



ஐயா, சந்திரமுகியில் கவர்ச்சி விஷயத்தில் அடக்கி வாசித்த நயன்தாராவை கள்வனின் காதலி படத்தில் செமத்தையாக பிழிஞ்சி எடுத்திருக்கிறார்களாம். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது போல் ஒட்டுமொத்த யூனிட்டையே வாய்ப்பிளக்க வைத்து விட்டாராம் நயன்தாரா.

***

அ...ஆ படத்தின் நாயகி நிலாவுக்கு தமிழில் நம்பர் ஒன் இடத்தை பிடிப்பதுதான் நோக்கமாம். அதற்கு என்னென்ன யுக்திகளை கையாண்டால் எளிதில் இலக்கை அடைய முடியுமோ அப்படிப்பட்ட திரைமறைவு கலாசாரங்களை கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டார் நிலா. இதற்கு நடிகையின் பெற்றோரும் முழு ஒத்துழைப்பு.

***

கிச்சா வயசு 16 படத்தில் கடைசியாக நடித்திருக்கும் சிம்ரன், டெலிவரி ஆனதும் மறுபடியும் சினிமாவில் நடிப்பேன் என்று ஏறகனவே சொன்னதை மனதில் கொண்டு டெலிவரி ஆனதும் முதல் ஆளாக புக் பண்ண சில கம்பெனிகள் காத்திருக்கின்றன.

***

காதலைப்பற்றி ஒரு தத்துவமே சொல்கிறார் நயன்தாரா. 'காதல் என்பது தானாக அரும்ப வேண்டும்' பின் அதனை உணர்ந்து லவ் பண்ண வேண்டும். அதுதான் உண்மையான காதல். இப்போதைக்கு என் வாழ்க்கையில் காதல் அரும்ப அனுமதிக்க மாட்டேன். ஒருவேளை அது அரும்பினால் கூட அதை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுவேன். முதலில் சினிமாவில் சாதிக்கணும். பிறகுதான் வேறு என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார்

***

'காதல்' நாயகி சந்தியா அறிமுகமான படத்தின் மூலமே அசைக்க முடியாத கதாநாயகி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார். அவர் அந்தப் படத்திற்கு வாங்கிய சம்பளம் சில ஆயிரங்கள் மட்டுமே. இப்போது நடித்துவரும் மலையாளப் படத்திற்கு 2 லட்சம் ரூபா சம்பளம் பெற்றார். ஆனால் இப்போது சிம்புவுடன் இவர் நடிக்கும் 'வல்லவன்' படத்தில் நடிக்க 10 லட்சம் ரூபா சம்பளம் பேசி இருக்கிறார். இதற்கு பரிசாக தாராளமாக கவர்ச்சி காட்டவும் ஒப்புக் கொண்டுள்ளார்.

***

ஜோ...கா என்ற நடிகையின் பெயரை தனது மகன் சூர்யா உச்சரிப்பதை கண்டு ஆரம்பத்தில் எதிர்ப்புக்கள் தெரிவித்த மார்க்கண்டேய நடிகர் சி...குமார் திடீரென ஒருநாள் மகனை அழைத்தார். அவர்களின் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டியதோடு தங்கையின் திருமணம் வரை பொறுத்திருக்குமாறு கட்டளையும் பிறப்பித்துள்ளார்.

# நாயகி அழைத்ததும் ஆஜரானார் டைரக்டர்

சோனியான நடிகைக்கும் அவரை அறிமுகப்படுத்திய டைரக்டருக்கும் இடையே காதல் என் கிசுகிசுக்கப்படுகிறது. ஒருநாள் வேறொரு படப்பிடிப்பில் இருந்தார் நடிகை. சீன்படி, இவரை இழுத்து கட்டிலில் தள்ள வேண்டும் ஹீரோ. அவரும் நடிகையை இயக்குனர் சொன்னபடி தள்ளினார். தள்ளிய வேகத்தில் படுக்கையில் விழுந்த சோனிக்கு இடுப்பில் பலமான அடி! உடனே முகத்தை பொத்திக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாராம். சட்டென்று தனக்காக ஒதுக்கப்பட் ரெஸ்ட் ரூமிற்கு ஓடிப்போய்விட்டாராம். வெகு நேரமாகியும் வரவில்லை. பயந்துபோன யூனிட் மொத்தமும் ரூமிற்கு வெளியே காத்திருக்க, காரில் வந்திறங்கினாராம் நடிகையின் காதல் இயக்குனர். அவர் நேராக போய் நடிகைக்கு ஆறுதல் சொன்ன பிறகுதான் படப்படிப்புக்கே வந்தாராம் சோனி: ரூமிற்கு ஓடிய உடனே தன் காதலருக்கு போன் செய்து அவரை உடனே வரச்சொன்னது நடிகைதான் என்பது பிறகுதான் புரிந்ததாம் யூனிட்டிற்கு. இப்போதெல்லாம் பூ போல் கையாள்கிறார்களாம் சோனியாவை.

# காட்மதராகிறார் நடிகை நதியா

ஜில்லென்று மார்கழி பனிமாதிரி வந்து பனி மாதிரியே சென்றார் நதியா. 'எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமிக்கு'க்குப்பிறகு அவரை கோடம்பாக்கம் அழைத்துவர யார் யாரோ முயன்றார்கள். எதுவும் இந்த அழகான அம்மாவிடம் பலிக்கவில்லை. கடைசியில் காட்பாதருக்கு அந்த அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது.

சொல்லி அடிப்பவர்கள் மத்தியில் சொல்லாமல் அடிக்க வேண்டும் என்ற வேகத்தில் மூன்றுக்கு மூன்று கேரக்டர்களில் நடித்து வருகிறார் அஜித். வில்லனுக்குப்பிறகு அஜித், கே.எஸ்.ரவிக்குமாரின் இந்தக் கூட்டணி எந்த வகையிலாவது வெற்றியைப் பறிப்பதில் தீவிரமாக உள்ளது.

அஜித்துக்கு இதில் வயதான வேடம் ஒன்று உள்ளது. இந்த அஜித்துக்கு ஜோடியாக அழகான அம்மா நடிகை தேவைப்பட நினைவுக்கு வந்தவர் நதியா. அமெரிக்காவுக்குத் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறது 'காட்பாதர்' யூனிட். நதியாவும் ஓ.கே சொல்லிவிட்டதாகத் தெரிகிறது.

காட்பாதர் பைனான்ஸ் பிரச்சினையில் தடுமாறிக்கொண்டிருக்கிறது. பணப்பிரச்சினை பைசல் செய்யப்பட்டதும், நதியா இந்தியாவுக்குப் பறந்துவரக்கூடும். இது நடந்தால் அஜித் ரசிகர்களுக்கு ஒரு காட்மதர் கிடைப்பார். அழகான காட்மதர்.



# பிப்ரவரி 14 கேசட் வெளியீட்டுவிழாவில கலந்து கொண்டார் நயன்தாரா

ஏ.வி.எம். ஸ்ருடியோ ஏ.சி திரையரங்கு விழாக்கோலம் பூண்டிருந்தது. எட்டிப்பார்த்தால் விஜய், நயன்தாரா, பரத் என கண்களுக்கு விருந்து வைத்துக்கொண்டிருந்தனர்.

சேலம் சந்திரசேகர் தயாரிக்க ஷங்கரின் உதவியாளர் ஹோசியின் இயக்கும் 'பெப்ரவரி—14' பாடல் கேசட் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளத்தான் இந்த ஹொலிவூட் விஜபிகள் ஆஜராகியிருந்தனர்.

மினி திரையரங்கில் பாடல் காட்சிகளைக் கண்டு களித்துவிட்டு வெளியே வந்த நட்சத்திரங்கள் அங்கு போட்டிருந்த மேடையில் ஏற ஆரம்பமானது விழா.

முதல் கேசட்டை இளையதளபதி விஜய் தன் கைராசிக்கரத்தால் வெளியிட, இரண்டே படங்களில் பலரது இதயங்களை பறித்த நயன்தாரா பெற்றுக்கொண்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஏ.எம்.ரத்னம் மற்றும் விழா நாயகன் பரத், நாயகி ரேணுகா மேனன், கேமிராமேன் ரத்னவேலு, இயக்குனர் ஸாரி விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் ஆகியோருக்கு பூமாலையும், பொன்னாடையும் அணிவித்து சிறப்பு செய்தார் தயாரிப்பாளர்.

சின்னத்திரை தேவதர்ஷினி அன்புக் கட்டளைக்குக் கட்டுப்பட்டு இரண்டொரு வார்த்தைகளை மட்டும் பேசி காதுகளைக் காப்பாற்றினர்.

விஜய் தனது உரையில் ''பாடல்கள் எல்லாம் பிரமாதமாக வந்துள்ளன. இதில் 'ஒத்தையா இரட்டையா..' பாடல்தான் என்னை மிகவும் கவர்ந்தது.'' என தனது டேஸ்டைச் சொல்ல தயாரிப்பாளர் முகத்தில் அப்பாடா இளைய தளபதியே சொல்லிட்டார், இனி முதலுக்கு மோசமிருக்காது என்கிற அளவுக்கு சந்தோஷக்களை.

இயக்கம் மட்டுமன்றி ஒரு பாடலையும் இவர் எழுதியிருக்கிறார் என்ற கொசுறு செய்தியும் விழாவில் பேசியவர்களிடமிருந்து கிடைத்தது. தனது கவிதைத் திறனை மெய்ப்பிப்பது போலவே படத்தின் ஒரு காட்சியில் ஐந்தாயிரம் வெண் புறாக்களை வைத்துப் படமெடுத்துள்ளார்.

கறுப்பு—வெள்ளை நிற மெலிதான ஆடையில் போட்டோகிராபர்களுக்கு நீனி போட்ட நயன்தாராவைப் பார்க்க, பார்வையாளர்களின் கண்கள் அனைத்தும் அவர் பக்கமே மொய்த்துக்கொண்டிருந்தன.



-நயன்தாரா, ரேணுகாமேனன்-

# ஜீவன் - ப்ரியமாணி இணையும் 'தோட்டா'



காவல்துறைக்கே சவாலாக இருக்கும் மிகப்பெரிய தாதா தோட்டா. நளினி என்ற இளம் பெண்மீது திராவகம் வீசுவதற்காக தோட்டாவுக்கு ஒரு மார்வாடி இளைஞர் 25 லட்சம் ரூபா கொடுக்கிறார்.

தன்னைக் காதலிக்க மறுத்த நளினியை திராவகம் வீசி கொலை செய்ய வேண்டும் என்பது அந்த மார்வாடி இளைஞரின் கட்டளை. இதை ஏற்றுக் கொண்டு தோட்டா, நளினி மீது திராவகம் வீச சென்றார். அந்த பெண்ணின் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த அவன், அங்கிருந்த ஒரு போட்டோவைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான்.

போட்டோவில் இருந்தவர் தன்னை வளர்த்து ஆளாக்கிய பொலிஸ் அதிகாரி என்பனை விளங்கிக் கொண்ட தோட்டா நளினியைப் பார்த்து 'இவர் யார்' என்று கேட்டார். 'எங்க அப்பா' என்று பதில் அளித்தாள் நளினி. அந்த நிமிடமே அவள்மீது திராவகம் வீசும் முயற்சியைக் கைவிட்டு, அவள் குடும்பத்துக்கு உதவ முன்வந்தார் தோட்டா. இதைத் தொடர்ந்து கொம்ட பொலிஸ் நளினியின் குடும்பதை துன்புறுத்துகிறது முழுக் குடும்பத்தையும் பொலிஸ் வானில் ஏற்ற தெருவே நின்று வேடிக்கை பார்க்கிறது இக் கதையை மையமாக வைத்து 'தோட்டா' என்ற படம் தயாராகிறது.

இதில் தோட்டாவாக ஜீவனும், நளினியாக ப்ரியாமணியும் நடித்தனர். இப்படத்திற்கு இசையமைக்கிறார் ஸ்ரீகாந் தேவா. இப்படத்தின் இயக்கம், திரைக்கதை, வசனம்,டைரக்ஷன் செல்வா.

# 'நான் அம்மாவோ ஆளு பார்த்து'

## தந்தையால் தப்பிய சிம்பு

நயன்தாராவின் உதட்டை கவ்வி இழுப்பது போல் போஸ் கொடுத்து ஏகப்பட்ட சர்ச்சைகளுக்கு உள்ளாகியிருக்கிறார் சிம்பு. சிம்பு மேல் வழக்குத் தொடர முடிவெடுத்தனராம் பொலிஸார்.

அவர்களை கூப்பிட்டு எச்சரித்த சிம்புவின் அப்பா விஜய.டி.ராஜேந்தர். ''சொன்னா கேளு... நான் அம்மாவோட ஆளு'' என்றாராம் தனக்கேயுரிய அடுக்கு மொழியில். இந்த நேரத்தில் இவரிடம் எதற்கு மாட்டிக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்த பொலிஸார் சத்தம் போடாமல் ஜகா வாங்கிவிட்டனராம்.

இதில் படத்தின் தயாரிப்பாளரும் தப்பித்துக் கொண்டதுதான் நல்ல விஷயம்!

# ஜெனிலியாவின் அதிரடி அறிவிப்பு

தமிழில் பாய்ஸ் படத்தின் மூலமாக அறிமுகமாகி, சச்சின் படத்தில் விஜயுடன் டூயட் பாடியவர், ஜெனிலியா டிவோவா. சச்சின் படத்தில் மூலமாக வெற்றிப்பட நாயகியாக வலம்வரும் அவர், தெலுங்கு திரை உலகையும், தனது இளமையின் கீழ் வளைத்து வைத்துள்ளார்.

ஜூனியர் என்.டி.ஆர்.சுமந்ட், அல்லு அர்ஜுன் என்று தெலுங்கு திரை உலகின் இளம் நாயகர்ளுடன் கெட்ட ஆட்டம் போடும் ஜெனிலியா, அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். தமிழ், தெலுங்கு திடைப்படங்களில் வயதான நாயகர்களுடன் நடிக்க மாட்டேன் என்பதே அந்த அறிவிப்பாகும்.

சச்சின் போன்ற காதல் கதையுடன் உள்ள திரைப் படங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வெற்றிப்பட நாயகியாக மாறுவதே தனது லட்சியம் என்றார் ஜெனிலியா.

'அந்நியன்'
-விக்ரம், விவேக்-



வேறு படம் எதனையும்
...டனேயே இருந்தால்
...மாக நீங்கள் அந்நியன்
...வார்கள் கவனம்?

# இயக்குநருடன் அனாமிகாவுக்கு லடாய்?

மூடி வைத்த மூணுநாள் பிரியாணியை திறந்து பார்த்த கதையாக இருக்கிறது அனாமிகா — ஜாக்குவார் தங்கம் விவகாரம். தனக்கு தர வேண்டிய ஏழு லட்சத்தை ஏமாற்றிவிட்டார் என்று நடிகை அனாமிகா மீது சண்டை இயக்குனர் ஜாக்குவர் தங்கம் புகார் கொடுக்க, இந்த செய்தி பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வந்தது. அது வந்துசில நாட்கள்தான் ஆகியிருக்கும். தன்னை கற்பழிக்க முயற்சித்தார்; காலில் விழுந்து கெஞ்சினார் என்று ஜாக்குவாரின் டங்குவாரை அறுத்திருக்கிறார் அனாமிகா.

சென்னை பொலிஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு நேரிடையாக வந்த அனாமிகா, ஜாக்குவார் மீது கமிஷனரிடம் நேரடியாக புகார் செய்தார். பின்னர் வெளியே வந்த அவர் மனந்திறந்து வரிசையாக ஜாக்குவார் பற்றி புகார்களை அடுக்க, நொந்து போயிருக்கிறது ஜாக்குவார் தரப்பு.

''ஜாக்குவார் தங்கம் என்னை சினிமாவில் அறிமுகம் செய்தது உண்மைதான். ஆகையால் அவரை 'காட்ஃபாதர்' என்று நினைத்தேன். 'பணம் படுத்தும் பாடு', 'கிரிவலம்' என்ற படங்களில் எல்லாம் நடித்துள்ளேன். அதன் பிறகு அவர் என்னை ஆசைக்கு அழைத்ததால்தான் பிரச்சினையே ஏற்பட்டது. அதற்காக நான் 7 லட்ச ரூபாய் அவரிடம் வாங்கியதாக பொய் புகார் கொடுத்துள்ளார். நான் அவரிடம் கடன் எல்லாம் வாங்கவில்லை. உண்மையான காரணம் செக்சுக்கு நான் இணங்காததுதான். அதை மனதில் வைத்து என்னை அசிங்கப்படுத்தியுள்ளார். ஆந்திராவில் இருந்து பிழைப்புக்காக தமிழ் நாட்டுக்கு வந்தேன். தமிழ் நாட்டு மக்கள் வந்தாரை வாழ வைப்பவர்கள் என்று கேள்வி பட்டுள்ளேன். ஆனால், இங்கு என்னை எவ்வளவு கேவலப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு கேவலப்படுத்திவிட்டார்கள்'' என்றார் அனாமிகா அழாத குறையாக!

இதற்கு ஜாக்குவார் தங்கத்தின் பதில் என்ன?

நான் 25 வருடமாக சினிமாவில் இருக்கிறேன். எந்த பெண்ணிடமும் தவறாக நடந்ததாக யாரும் புகார் சொன்னதில்லை. நான் நடிகை அனாமிகாவுக்கு7 லட்சம் கொடுத்தது உண்மைதான். அவர் என் மீது செக்ஸ் புகார் கொடுப்பார் என்பது எனக்கு முன்பே தெரியும். அவர் இப்படி பொய்ப் புகார் கொடுத்துள்ளாரே. அவர் கன்னி தன்மையோடுதான் இருக்கிறார் என்பதை நிருபிக்க தயாரா? யார் யார் மீது புகார் கொடுக்க வேண்டும் என்று ஒரு வரைமுறையே இல்லயா? அவர் மீது வீணாக பொய்ப் புகார் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் கிடையாது. மனிதாபிமான அடிப்படையில் சொல்கிறேன். அவர் கொடுத்த புகாரை வாபஸ் வாங்கினால், நானும் அவர் மீது கொடுத்த புகாரை வாபஸ் வாங்கத் தயாராக இருக்கிறேன்''.

இதுதான் இவர் தரப்பு பதில் சீக்கிரம் விவகாரத்தை முடிங்கப்பா ... ரொம்ப விகாரமா இருக்கு!



'கிரிவலம்'
-அனாமிகா-




ஒரு பெரிய செல்வந்தர் இருந்தார். அவருக்கு ஓர் இளம் மனைவி. மனைவி தனக்கு துரோகம் பண்ணுவதாக செல்வந்தர் சந்தேகப்பட்டார். பல தடவைகள் கண்காணித்தும் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே துப்பறியும் நிறுவனம் ஒன்றின் உதவியை நாடினார்.

அந்த துப்பறியும் நிறுவனம் உளவாளி ஒருவரை நியமித்து ரகசியமாக செல்வந்தரின் மனைவியைக் கண்காணித்தது. பின்னர் கண்டுபிடித்த விபரங்களை அந்த உளவாளி மூலம் செல்வந்தருக்குத் தெரியப் படுத்தியது.

"நீங்கள் வெளியூர் சென்ற சமயம் உங்கள் மனைவி ஓர் இளைஞனுக்குப் போன் செய்கிறாள்."

"அப்புறம்?"

"உடனே அந்த இளைஞன் உங்கள் வீட்டுக்கு வருகிறான்"

"அப்புறம்?"

"பின்னர் இருவரும் சேர்ந்து மது அருந்துகிறார்கள்."

"அப்புறம்?"

"பின்னர் இருவரும் நெருக்கமாக இருக்கின்றனர்...."



## ஜோக்

"அப்புறம்?"

"பின்னர் எழுந்து படுக்கை அறைக்குள் நுழைந்து கொள்கின்றனர்."

"அப்புறம்?"

"பின்னர் விளக்கை அணைத்து விடுகின்றனர்."

"சரி அப்புறம் என்ன நடந்தது?"

குழம்பிப்போன துப்பறிவாளர் சொன்னார். "அதன் பின்னரும் உங்கள் சந்தேகம் தீர்வதற்கு என்ன வேண்டும்?"

செல்வந்தர் சொன்னார் "மனைவியின் துரோகத்தனத்தை நிரூபிக்கும்படி கேட்டிருந்தேனே! இப்படி அறைக்குள் போனார்கள்– விளக்கை அணைத்தார்கள் என்றால் போதுமா? தப்புப்பண்ணி இருப்பாள் என்பதை நிரூபிக்க வேண்டாமோ! தப்புப் பண்ணுகிற மாதிரி தெரியேல்லையே!" என்றார்.

# கண்டு பிடியுங்கள்

கீழே உள்ள வசனங்களில் எத்தனை பெண்களின் பெயர்கள் ஒளிந்திருக்கின்றன.

* எனது அம்மா லாவகமாக பத்மாசனம் போட்டாள்.
* தீபாவளி அன்று இளங்கோ மதிவாணன் ஆகியோர் வீட்டுக்கு வந்திருந்தார்கள்.
* நீ உடனடியாக அங்கே செல் விஜயா.
* டாக்டர் தேவிகா மாட்சிமை பொருந்தியவர்.
* ராகினி வா போகலாம்.

[illegible]

# வித்தியாசமான படம்



வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் - ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் என்பது பழைய பழமொழி.
வண்டியும் ஒருநாள் காரில் ஏறும் -காரும் ஒருநாள் வண்டியில் ஏறும் இது ஒரு புதிய மொழி.

# நெட் குறும்பு



ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழ்த்துகிறார்.

ஆஹா இப்படி இரண்டுக்கு அடித்தல் என்பது எவ்வளவு சுகம்.... சூழலும் மாசடையாது பாருங்கள். ஒரு முயற்சியில் இரண்டு பயன்கள்.

# ஐடியா

இப்போதெல்லாம் செல்போன் (அலைபேசி) களில் கமெரா வருகிறதுதான். ஆனால் அந்த கமெராக்கள் மூலம் Zoom பண்ணி தூர இருக்கும் படங்களை - கிட்டவாக எடுப்பது என்பது முடியாது. எனவே இந்த கமெரா போன்களுக்கு இப்படி Zoom Lence பூட்டினால்... நன்றாக இருக்குமே.... கமெரா போன் உற்பத்தியாளர்களே! இது உங்களுக்கு சமர்ப்பணம்.



# விந்தை உலகம்

முத்தங்கள் பலவகைப்படும். அது கொடுப்பவர், கொடுக்கும் விதம், கொடுக்கும் நேரம், கொடுக்கும் இடம், கொடுக்கப்படும் (உடலில்) இடம் என்பவற்றால் வேறுபடும். இதற்காக எவரும் பயிற்சி பெறுவதில்லை.

ஆனால், அமெரிக்காவிலே இதற்கென ஒரு பயிற்சி நிலையத்தையே திறந்திருக்கிறார் ஒரு பெண்மணி. அந்த கிஸ்ஸின் சீ... மிஸ்ஸின் பெயர் செர்லி பைர்ரிட். இவர் பிசியோதெரபி படித்து பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு படித்து பட்டம் பெற்ற ஒருவர் அங்குபோய் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய தேவை என்ன என்று நீங்கள் கேட்பது எமக்குப் புரிகிறது. அமெரிக்காவிலே உள்ள வெட்டில் என்ற நகரில் வைத்து இந்த மிஸ்ஸுக்கு அவரது காதலர் ஒரு கிஸ் கொடுத்திருக்கிறார். அதில் மதிமயங்கி போனாராம் செர்லி பைர்ரிட். 'அடடா நான் வாழ்க்கையிலே எத்தனை முத்தங்களை எவ்வளவோ பேரிடம் பெற்றிருக்கிறேன். ஆனால், இதுபோன்ற ஒன்றைப் பெற்றதே கிடையாது' என்று சொல்லும் அவர்... இந்த முத்தக் கலையை மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த பயிற்சி நிலையத்தைத் தொடங்கியிருக்கிறாராம்.

இங்கே பயிற்சி பெற கட்டணமாக 24 ஆயிரம் ரூபா செலவாகிறதாம். ஆயினும் காதலர்கள் இங்கே பயிற்சி பெறமுட்டி மோதுகின்றனராம்.

"முத்தமிட்டால் மட்டும் போதாது, அதனை நளினத்தோடும் - இனிமையுடனும் கொடுக்க வேண்டும். அவ்வாறான முத்தங்களினால் மனிதன் நிறைவடைகிறான்" என்று சொல்கிறார் செர்லி.

இனி என்ன... செர்லியின் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் பாடு கொண்டாட்டம்தான்... சும்மா போட்டுத் தாக்குவார்கள் போங்கள்.

# கயிறுழுப்புக்குத் தயாராகும் தமிழக கட்சிகள்

தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல் நடக்க இன்னும் ஒரு வருடம் இருக்கிறது. ஆனால், தமிழகத்தின் பிரதான கட்சிகளான தி.மு.கவும், அ.தி.மு.கவும் தம்மை தேர்தலுக்கு தயார்படுத்தத் தொடங்கிவிட்டன. அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க வெற்றிபெற்றதுதான் இந்தப் பரபரப்புக்கு முக்கிய காரணம்.



ஜெயலலிதா

லோக்சபா தேர்தல்களில் தோற்று மனமுடைந்து போயிருந்த அ.தி.மு.கவினருக்கு இடைத்தேர்தல் வெற்றி ஒரு உந்து சக்தியாகவும் அமைந்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் நடந்து சகல இடைத் தேர்தல்களிலும் அக்கட்சியே வென்றுள்ளது. ஆனால், சட்டசபைத் தேர்தல் நெருங்கிவிட்ட சமயத்தில் நடந்த இந்த இடைத் தேர்தல் தி.மு.க. அணியினரை ஒரு கலக்கு கலக்கி விட்டது. தி.மு.க தலைமையும் நிலைமையை விளங்கிக் கொண்டு தனது தொண்டர்களை உற்சாகப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே தி.மு.கவின் மண்டல மாநாடு கோயமுத்தூரில் அடுத்தவாரம் பிரமாண்டமான முறையில் நடத்தப்பட உள்ளது. இடைத்தேர்தலில் தி.மு.க தோற்றாலும் சகல கூட்டணிக்கட்சிகளும் தி.மு.க பக்கமே உள்ளன என்பதைக் காட்ட சகல தோழமைக் கட்சிகளும் மாநாட்டில் பங்குபெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வை.கோ மட்டும் வெளிநாட்டிலிருப்பதால் மாநாட்டில் பங்குபற்ற மாட்டாரெனத் தெரிகிறது.

சமீபத்தில் தி.மு.கவின் பல தலைவர்களுக்கு எதிராக அ.தி.மு.க அரசு வழக்குகள் தாக்கல் செய்துள்ளது. சென்னை நகரில் மேம்பாலம் கட்டியதில் அப்போதைய தி.மு.க அரசு ஊழல் செய்ததாகவே வழக்கு பதிவாகியுள்ளது. இதே விவகாரத்தில் 2001 இல் தி.மு.க தலைவர் கருணாநிதி, மகன் ஸ்டாலின், மத்திய அமைச்சர் மாறன் ஆகியோரை பொலிஸ் நள்ளிரவில் கைது செய்து தொந்தரவு செய்ததும் குறிப்பிடத்தக்கது. ஆக ஜெயலலிதா தி.மு.கவை இலேசில் விடுவதாக இல்லை.

அ.தி.மு.க எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் தோல்வியுறும் என இலகுவாக கணிக்கமுடியாது என்பதை தி.மு.க. உணர்ந்துவிட்டது. இடைத்தேர்தலில் கருணாநிதி ஓரிரு பொதுக்கூட்டங்களில் பேசியதுடன் நிறுத்திக் கொண்டார். ஜெயலலிதாவோ ஒவ்வொரு வீதிவீதியாக சென்று பிரசாரம் செய்தார். இந்த வித்தியாசம் தேர்தல் முடிவில் தெரிந்தது. ஜெயலலிதாவுக்கு 57 வயது; கலைஞரோ எண்பத்தொரு வயதைத் தாண்டிய முதியவர். ஜெயலலிதாவின் சூறாவளிப்பிரசாரத்துக்கு ஈடுகொடுக்க அவரால் முடியுமா என்பது கேள்வியே. இன்னும் ஓராண்டு செல்லும் போது கலைஞருக்கு இன்னும் ஒரு வயது கூடியும்விடும். ஸ்டாலினை நட்சத்திரப் பிரசாரகராக உருவாக்க வேண்டிய அவசியத் தேவை தி.மு.கவுக்கு ஏற்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது.


இதற்கிடையில் குத்து வெட்டுக்களுக்கும் குழிபறிப்புகளுக்கும் பேர்போன தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குள் புதிதாக சலசலப்பு எழுந்துள்ளது. காங்கிரஸ் கட்சியில் அகில இந்திய அளவில் உட்கட்சித் தேர்தல் நடைபெற்று வருகிறது. இதனால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் பதவிக்கும் புதிய நியமனம் நடைபெறவேண்டும். தேர்தலை நடத்தாமல் கட்சித் தலைவர் சோனியா நியமிக்கும் ஒருவரை தலைவராக்கும் திட்டமும் இருப்பதாகத் தெரிகிறது. தேர்தலை நடத்தியிருந்தால் கட்சிக்குள் அடிமட்டத் தொண்டர் மத்தியில் செல்வாக்குள்ள தலைவர் யார் என்பது தெரிந்திருக்கும். அதைவிட்டுவிட்டு நியமனத் தலைவர் ஒருவரை உருவாக்குவது சரியல்ல என தற்போதைய தலைவர் வாசனின் எதிரிகள் கூறுகின்றனர்.



பாஸ்வான்

அதே சமயம் கிழக்கு இந்திய மாநிலமான பீகாரில் பெப்ரவரியில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் எந்த அணியும் பெரும்பான்மை பெறாததால் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றுவந்தது. மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசில் அமைச்சர்களாக உள்ள லல்லு பிரசாத் யாதாவும், ராம் விலாஸ் பாஸ்வானும் பீகாரில் எதிரெதிர் அணிகளில் இருந்ததாலேயே பிரச்சினை உண்டானது. பாஸ்வானினது கட்சியில் 29 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். அவர்களின் ஆதரவின்றி லல்லுவோ, பி.ஜே.பியோ ஆட்சியமைக்க முடியாதிருந்தது.

இந்நிலையில் பாஸ்வானின் கட்சியை உடைத்து அதில் உள்ள சில எம்.எல்.ஏக்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க பி.ஜே.பி. முயன்றது. அதை அடுத்து பாஸ்வான் கடுங்கோபமுற்றார்.



கருணாநிதி

பீகார் சட்டசபையை கலைத்து மீண்டும் தேர்தல் நடத்துமாறு அவர் சோனியாவைக் கோரினார். இதன்படி சட்டசபை கடந்தவாரம் கலைக்கப்பட்டது. இதனால் பி.ஜே.பி. கூட்டணியின் ஆட்சியமைக்கும் முயற்சி தோல்வியுற்றது.

-எஸ்.சுரேந்திரஜித்-

- இப்போது நவம்பரில் மீண்டும் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. ஏற்கனவே பி.ஜே. பி. கூட்டணியிலுள்ள பெர்னாண்டஸ், மற்றும் நித்திஷ்குமாருடன் கடும்பகை பாராட்டி வந்த பாஸ்வரன் இப்போது தனது கட்சியை உடைத்த கோபத்தினால் பி.ஜே.பியுடன் நிரந்தர பகைமை கொள்ள நேரிட்டுள்ளது. ஆக பாஸ்வான் காங்கிரஸ் அணியில் தொடர்ந்து இருப்பது நிச்சயமாகியுள்ளது.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.30 | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி. நகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | மேஜிக் கார்டுன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | ஹொலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | உங்கள் சாய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டொப் 10 விஸ் |
| 11.00 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | இப்படிக்கு நீங்கள் | இயக்குனர் பார்வை |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | மங்கையர் தெரிவு | மங்கை | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | (மதுமதி) | (செல்லமே) |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (சித்திரம்) | (கிளசிக்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | சுப்பர் 10 |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் | நினைவுகள் |
| 5.00 | கிய பியர்ஸ் | கி-மான் | கிட்ஸ் சூன் | தமிழ் கார்ட்டூன் | என்றும் கலாட்டா | நகைச் சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் சமையல் | சுப்பர் சேன்ஸ் | இசைத் தென்றல் | ருத்ர வீணை | சுப்பர் சேன்ஸ் |
| 6.00 | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | பாடல்கள்/இளந்தளிர் | கோல்டன் மொமன்ஸ் | புத்தம் புதுசு | மின்னல் |
| 6.30 | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் திமிருக்கதை | 6.55 முதன்மைச் செய்திகள் மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | ஊரும் உலகும் | வேலன் |
| 7.30 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மியூசிக்கல் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ராஜ ராஜேஸ்வரி | இளையகானம் |

# புதைந்து போன மர்மம்....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ஏறுடா ஜீப்புல்ல'' இப்போது கந்தசாமியின் மனம் திக்கென்றது.

''துரை நான் செய்யலீங்க. மாரியாயிசாமி சத்தியமா சொல்லுறேங்க. என்ன நம்புங்க. நீங்க சொன்ன மாதிரி செய்ய நினைச்சுத்தான், நாய் சத்தம் கேட்டு எழும்பிப் பார்த்தேனுங்க. நான் செய்ய முன்னமே எவனோ அதைசெஞ்சுப்புட்டாங்க. என்னை நம்புங்க துரை'' கெஞ்சிப்பார்த்தான்.

''போடா பயித்தியம் உனக்கு மோலே நாசம் போச்சு. நீ மெச்சம் பொய் பேசறது. இந்த தோட்டத்தை கொழப்புறது. நீ ஒரு றெறறிஸ்ட்மாதிரி. ரொம்பவும் சவடால்; வீம்பு பேசறது'' என்று சொல்லிவிட்டு தோட்டத்துரை தன் வாகனத்தில் ஏறிப் போய்விட்டார்.

பொலிஸ் ஜீப் கந்தசாமியை ஏற்றிச் சென்றது.

லயத்தில் கந்தசாமியின் ஆத்தா, ''மாரி யாத்தா நான் என்ன புள்ளையை காப்பாத்தணும்'' என தலையில் அடித்து புலம்பிக் கொண்டு இருந்தாள்.

அந்த தோட்டமே அப்போது அமைதியின்றி ஊஞ்சலாடியது. அடுத்து என்ன நடக்குமோ என தோட்டத்து சனங்கள் பயந்து நடுங்கிக் கொண்டு இருந்தனர்.

தோட்டத்துத் துரையை காணச் சென்ற தலைவர் தங்கசாமி மிக வேகமாக நடந்து வந்து பீலி லயத்து கோடியில் உட்கார்ந்து கொண்டான். அவனது முகத்தில் பயம் குடி கொண்டு இருந்தது. தோட்டத்துச் சனங்கள் அவனை சூழ்ந்து கொண்டனர்.

''எல்லாரும் கேட்டுக்கிங்க. கந்தசாமி நல்ல புள்ள மாதிரி நம்ம கிட்ட நடிச்சு நம்ம சனங்க மனசை மாத்தி, 'மந்திரிமாரோட பேசி அடையாள அட்டை வாங்கித்தாரேன்; வேலை வாங்கித் தாரன்; பழைய காலத்து லயத்து கக்கூஸ் காம்பராவை ஒடைச்சுப்புட்டு புதுசா கட்டித்தாரேன்' என்று சொல்லி நம்ம எல்லாரையும் ஏமாத்திப் புட்டான். நம்பளும் இவனை நம்பிவிட்டோம். ஏதோ நம்ம மாரியாத்தாதான் நம்பள காப்பாத்தி இருக்கா. இவனுக்கு பயங்கரவாதிகளோடு தொடர்பு இருக்காம். அதுதான் தினம்தோறும் சின்ன பசங்களோட கூட்டமா கூடிப் பேசுறானாம். அந்த துணிச்சலால்தான் கந்தசாமி வீம்பு பேசுகிறான்னு நம்புதுரை சொல்லுறாரு. யாரும் ஸ்ட்ரைக் செய்யாம நேரே வேலைக்குப் போங்க. இல்லாட்டி தோட்டத்துக்குள்ள பொலிஸ் வந்து எல்லாத்து லயத்து காம்பராவையும் சோதிப்பாங்களாம். அவுங்க தொரைமாரு. நல்லது கெட்டது தெரிஞ்சவங்க. காலமும் கெட்டுக் கெடக்குது. எல்லாரும் அமைதியா கலைஞ்சு வேலைக்குப் போங்க.''

தோட்டத்துத் தலைவரின் பேச்சைக் கேட்டதும் எல்லோரும் கந்தசாமியை மறந்துவிட்டு அமைதியாக கலைந்து சென்றனர்.

ஆனால் இருளாயி மட்டும் தலைவரின் பேச்சை நம்பவில்லை. லயத்துக்குப்போய் டவுனில் இருக்கும் பொலிஸ் நிலையத்துக்கு செல்வதற்காக காம்பராவை விட்டுவெளியே வந்தாள்.

அப்போது ஒரு சலசலப்பு சத்தம். பைப்பீலி பக்கம் இருந்து இருளாயிருக்கு கேட்டது. பயத்துடன் கையிலிருந்த டோர்ச் லைட் வெளிச்சத்தில் அவள் அந்த பயங்கரக் காட்சியை பார்த்தாள். சிவனு வேகமாக அந்தக் காரியத்தை செய்துவிட்டு இருளாயி இருந்த இடத்துக்கு ஓடிவந்தான்.

''ஏய் கிழவி இதை யாருக்கும் சொன்னேயின்னா இதே கல்வாத்து கத்தியால் ஒன்னையும் வெட்டி கந்தசாமியையும் வெட்டி ரோட்டு கானுல்ல புதைச்சுப்புடுவேன்''

''ஏய் செவனு இது கந்தசாமி வீட்டு கல்வாத்துக் கத்திடா? இது எப்படியடா ஒனக்கு வந்துச்சு?''

''தொரையோட கந்தசாமி ராவு பங்களாவில சாராயம் குடிச்சுக்கிட்டு இருந்தப்ப வெறியில மேசையில கத்திய வச்சுப்புட்டு வந்துட்டான். தொரதான் இவனை தோட்டத்துல எல்லா பைப்பு பீலியையும் வெட்டச் சொன்னாரு. கங்காணி வேலைக்கு ஏமாத்த இவனும் சின்னது சொல்லிப் புட்டான். தொரைக்கும் கந்தசாமி மேல கோவம். அதுதான் மாட்டி வைக்கப்பார்த்தாரு. அவன் குடி வெறியில் இருந்ததினால நானே பைப்பை வெட்டி இவனை நாளைக்கு பொலிஸில மாட்டி வைக்கப்போறேன். வாயைத் தொறந்தா தெரியும்தானே?'' என்று சொன்னது எல்லாம் அவளின் மனதில் ஆடியது.

'தூத்தேறி என்ன தைரியம் இவனுக்கு! இனியும் இவனை காப்பாத்தாம விட்டா நானு என்ன தாயி. நானு செத்தாலும் பரவாயில்லை காவல்கார செவனுவை இன்னைக்கு பொலிஸில் பிடிச்சுக் கொடுக்கணும். என் மவன் என்ன குத்தம் செஞ்சுப்புட்டான்'' என மனதில் பேசிக் கொண்டே உடுப்பை எடுக்க அட்டாளையிலிருந்த டிரங்குப் பெட்டியை இழுத்தவள் மீது கைதவறி அவள் தலையின் மீது டிரங்குப் பெட்டி விழுந்து விட்டது. 'ஐயோ' எனகத்திக் கொண்டு நிலத்தில் விழுந்தாள் இருளாயி.

அக்கம் பக்கம் லயத்து காம்பராக்களில் யாருமே இல்லை. தோட்டமே அடங்கிப் போய் வெறிச்சோடி இருந்தது.

பகல் ஒரு மணிக்கு எல்லாச் சனங்களும் பகல் சாப்பாட்டுக்கு லயத்துக்கு வந்து கொண்டு இருந்தனர். இருளாயியை பார்க்க தலைவர் தங்கசாமி லயத்துக்கு ஓடிவந்தார்.

இருளாயியின் லயத்து காம்பரா பளார் எனத் திறந்து கிடந்தது. உள்ளே சென்றார்.

லயத்து காம்பராவில் இருளாயி இரத்த வெள்ளத்தில் கிடந்தாள். அவளின் தலையில் இரத்தம் வடிந்து உறைந்து போய் இருந்தது.

''இருளாயி''பதிலில்லை. தலைவர் தங்கசாமி தன் முரட்டுக் கைகளினால் தட்டிப்பார்த்தான். அசைவில்லை மூக்கில் விரலை வைத்துப் பார்த்தான். சுவாசம் நின்று போய் இருந்தது. ஆமாம்! இருளாயி செத்துப் போய்விட்டாள். தோட்டமே கதறியது.

மாலை கழிந்து இரவு நிலவுடன் உலா வந்து கொண்டு இருந்த நேரம். இருளாயியின் லயத்து காம்பரா முன்றலில் சனங்கள் கூடி விட்டனர்.

கிழவி இருளாயி இறந்த சந்தோசத்தில் மிடுக்காக உடுத்திக் கொண்டு சிவனும் கூட்டத்தோடு கூட்டமாக பிளாஸ்டிக் கதிரையில் உட்கார்ந்து கொண்டு வீம்பு அரட்டை அடித்துக் கொண்டு இருந்தான்.

''அந்தப் பயலும் பொலிஸ்ல மாட்டிக்கிட்டான். கிழவியும் மண்டையைப் போட்டுறுச்சு. ச்....சூ.... என்ன சோதனைங்க தலைவர் அய்யா இத விதின்னு சொல்றதுங்களா, சதின்னு சொல்றதுங்களா?''

''என்னடா செவனு சொன்ன? இது விதியா, சதியான்னா கேக்குற? நம்பசனங்கள்ள பரம்பரை பரம்பரையா நம்ம கட்சி தலைவர்மாரு நன்றாக ஏமாத்தி வர்றாங்க? கேட்டா அப்பிடி இப்படின்னு சாக்குப்போக்கு சொல்லி, எலெக்சன் டைம்ல்ல எங்கள பேயா ஏமாத்துறாங்க. அது நம்ப விதின்னு நெனைச்சோம். இப்ப இந்தப் பயலும் இல்லை. நம்பள ஏமாத்திப்புட்டான். அவன் பயங்கரவாதின்னு சொல்லச் சொல்றாரு தொர. அவனுக்கு நடந்தது விதியா சதியான்னு நம்ப தோட்டத்து மாரியாத்தா தாயிக்கு மட்டும் தாண்டா தெரியும். அவ லேசுப்பட்டவ யில்லடா செவனு''

தலைவர் தங்கையாவின் பதிலைக் கேட்டதும் சிவனுக்கு பகீரென்று நெஞ்சில் சுருக்கென்று ஒரு வலி வர அவன் அப்படியே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு குறு குறுத்துப்போய்விட்டான்.

# திருகோணமலை துறைமுக......

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உண்டு.

அசம்பாவிதங்கள் நடைபெறும் தினங்களில் கடமைக்கு சமூகமளிக்காதோர் பெயர்ப்பட்டியலை மேலிடம் கேட்கிறது. இப்படியான இக்கட்டான சூழ்நிலையில்தான் அவர்கள் வேலை செய்கின்றனர்.

இறக்குமதி, ஏற்றுமதி சேவைகள் இடம் பெறும்போது கப்பல் முகவர்களும், விநியோகஸ்தர்களும் இலட்சக்கணக்கில் முதலீடு செய்திருப்பர். துறைமுகத்தில் கப்பல் தரித்து நிற்கும் போது சுமார் 1 இலட்சம் ரூபா ஒரு நாளைக்குச் செலுத்த வேண்டும். காசைச் செலுத்திவிட்டு கப்பலை வேலை இன்றி வைத்திருக்க எந்த முகவரும் விரும்ப மாட்டார். இப்படி வேலை இல்லாது இருக்கும்போது கப்பலை கொழும்பு துறைமுகத்துக்கு திருப்ப நேரிடும்.

தமிழர்கள் மீது எதற்கும் 'புலி முத்திரை' குத்துவது வழக்கம். அத்தகைய போக்குக்கு துறைமுக அதிகார சபையும் விதிவிலக்கல்ல.

குண்டு வெடிப்பொன்றை அடுத்து துறைமுக அதிகார சபை அலுவலகத்தில் இருந்து வெளியே சென்றவர்கள் குறித்த தேடுதல் இரகசியமாக இடம்பெற்று வருவது யாவரும் அறிந்ததில்லை.

கடந்தகால கலவரங்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி விடுதலை செய்யப்பட்ட துறைமுக ஊழியர்களை புலனாய்வுப் பிரிவினர் மாதம் ஒருமுறை சோதனையிட்டுச் செல்கின்றனர்.

இந்த நிலை புரியாமல் துறைமுக ஊழியர்கள் மீது அபாண்டமாக பழி சுமத்துவது நியாயமாகாது. இதை உணர்ந்த திருமலை துறைமுக வதிவிட முகாமையாளர் சூழ்நிலைக்கு ஏற்ப நீங்களே முடிவெடுங்கள். எமது அதிகார சபையில் இதற்கான விசேட விடுமுறை கிடையாது. எதையும் தலைமைப்பீடமேதீர்மானிக்க வேண்டும்'' என்று சொல்லி இருக்கிறார்.

எனவே, திருகோணமலையில் இடம்பெறும் ஹர்த்தால்களின்போது துறைமுக அதிகார சபை ஊழியர்கள் எதிர்கொள்ளும் கஷ்டமான நிலையை ஏனையோர் புரிந்துகொள்ள வேண்டும். மாறாக அபாண்டமாக பழி சுமத்துவதில் அர்த்தமில்லை.

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 06-06-2005 முதல் 12-06-2005வரை

**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 12இல் இருப்பது கூடாது. இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். பிரயாண வாய்ப்புண்டு. மன அமைதி இருக்காது. (2,7) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வாகன சுகம் உண்டு. தாய் நலம். (3,6) உரிய புதன் மூன்றில் ஆட்சியாக இருப்பது நல்ல பலனைச் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லையுண்டு. (9,12) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது நல்லது. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு உண்டு.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

(1,6) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலன் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. மன அமைதி இருக்கும். (2,5) உரிய புதன் இரண்டில் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் ராசியில் இருப்பது நல்ல பலன் செய்யாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12) உரிய செவ்வாய் 11இல் இருப்பது விசேஷம் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் சயன சுகம் உண்டு. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. குருவின் இருப்பும் ராசியைக் குரு பார்ப்பதும் நல்லது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் ராசியில் ஆட்சியாக இருப்பது நல்ல பலனைச் செய்யாது. இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இரண்டாம் இடம் சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (5,12) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. பூர்வீக சொத்துக்கள் சேர வாய்ப்புண்டு. (6,11) உரிய செவ்வாய் 10இல் நல்லபலன் செய்யும் என்று சொல்ல முடியாது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவரால் தொல்லை வரலாம். நண்பர்களால் செலவு ஏற்படலாம். மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (7,10) உரிய குரு நாலில் கேதுவுடன் இருப்பது கூடாது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் இடபம் முதல் கடகம் சஞ்சரிப்பதானது வார ஆரம்பத்திலும் இறுதியிலும் நல்ல பலன் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. மன அமைதி இருக்கும். இரண்டுக்குரிய சூரியன் 11இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். அறுசுவை உணவு கிடைக்கும். (4,11) உரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தாய் நலம். வாகன சுகம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய செவ்வாய் 9இல் நல்ல பலனைச் செய்யாது. பிள்ளைகளின் செயல்பாடு திருப்திதாரது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (7,8) உரிய சனி 12இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். வீண் அலைச்சல் இருக்கும். (6,9) உரிய குருபுதன் றில் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்லதல்ல. எதிரிகள் தாக்கக்கூடும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 10இல் இருப்பது விசேஷம். மேலும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைச் செய்யும் மன அமைதி இருக்கும். சென்ற இடம் எல்லாம் சிறப்புக்கிடைக்கும். (2,11) உரிய புதன் 11இல் ஆட்சியாக இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (3,10) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது சிறப்பானது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 8இல் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 11இல் இருப்பது விசேஷம். திருமண பலன் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. எதிரிகள் நண்பராகும் வாய்ப்பு உண்டு.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 10இல் ஆட்சியாக இருப்பது நல்ல பலனைச் செய்யாது. இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். மன அமைதி இருக்காது. தொழில்துறையில் போட்டி பொறாமை நிலவும். (2,9) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. (3,8) உரிய செவ்வாய் 7இல் இருப்பது தோஷம். இளைய சகோதரத்துக்கு கூடாது. (5,6) உரிய சனி 10இல் இருப்பது நல்லதல்ல பிள்ளைகள் கல்வியல் ஆர்வம் காட்டார். பகைவிலகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (4,7) உரிய குரு ராசியில் கேதுவுடன் கூடி இருப்பது கூடாது. தாய்க்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. திருமணபலன் இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவுவது கஷ்டம். குரு வழிபாடு ஆறுதல் தரும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது விசேஷம். மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. தெய்வீக பக்தி வளரும். (2,7) உரிய செவ்வாய் 6இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். திருமண பலன் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். (3,6) உரிய குரு 12இல் இருப்பது கூடாது. இளைய சகோதரத்துக்கு கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவிலகும். (4,5) உரிய சனி 9இல் நன்மை செய்யாது. தீமையும் செய்யாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார்.(9,12)உரிய புதன் 9இல் நன்மை செய்யமாட்டார். பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. சயன சுகம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 5இல் நன்மை இல்லை. இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு.(2,5)உரிய குரு 11இல் இருப்பது நல்லது கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 8இல் இருப்பது கூடாது. தாய்க்கு கூடாத காலம். இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. தொழில் கிரகம் சூரியன் 7இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (7,12) உரிய சுக்கிரன் 8இல் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுடன் இருப்பது தோஷம். இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. மன அமைதி இருக்காது. குறுந்தூரப் பிரயாணம் அமையும். (2,3) உரிய சனி 7இல் இருப்பது நல்ல தல்ல. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (5,12) உரிய செவ்வாய் நான்கில் இருப்பது தோசம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். சயன சுகம் இருக்காது. (6,11) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லையுண்டு. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரிய புதன் 7இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.

**மகரம்: உத்தராடம் 2, 3, 4,. திருவோணம், அவிட்டம் 1, 2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். கையில் பணம் இருக்கும். பிரயாணவாய்ப்பு உண்டு.(3,12)உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். இளைய சகோதரத்துக்கு நல்லது. சயன சுகம் உண்டு.(4,11)உரிய செவ்வாய் 3இல் இருப்பது நல்லது வாகன சுகம் உண்டு. தாய்க்கு நல்ல பலன் உண்டு. நண்பர்களுக்கு நல்லது. மூத்த சகோதரத்துக்கும் நல்லது. (5,10) உரிய சுக்கிரன் 6இல் நல்ல பலனைச் செய்யாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். ராசியை குரு பார்ப்பது விசேஷம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். மன அமைதி இருக்காது. சயன சுகம் இருக்காது. (2,11) உரிய குரு 8இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3,10) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது.(4,9) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது விசேஷம். பெற்றோருக்கு நல்லது. வாகன சுகம் உண்டு. 7க்குரிய சூரியன் 4இல் இருப்பது நல்லதல்ல திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவாது. குரு, சனி, வழிபாடு செய்வது நல்லது. சகல தோஷமும் நிவர்த்தியாகும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.** (1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது தோசம். கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. (3,8) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது நல்லது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. பூர்வீக சொத்து பாதுகாக்கப்படும். (4,7) உரிய புதன் 4இல் இருப்பது நல்ல பலன் செய்யாது. வாகன சுகம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தாய்க்கும் நல்ல பலன் இல்லை. 6க்குரிய சூரியன் மூன்றில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். ராசியில் இருப்பது கூடாது.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு செவ் | | சூரியன் | சுக் புதன் சனி |
| | செவ்வாய் மிருகசீரிட செவ் / சுக்கிரன் திருவா ராகு / புதன் திருவா ராகு | | |
| | சூரியன் மிருக செவ் / குரு அத்தம் சந் / சனி புனர்பூசம் குரு | | |
| | | | குரு கேது |

வைகாசி 23 முதல் 29 வரை

சந்திரன் இடபம் முதல் கடகம் வரை



## மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# ஆறுமுகனின் அகம்பாவமும் சந்திரசேகரனின் சவடாலும்

மலையகத்தில் இப்பொழுது தொழிற் சங்கத் தலைவர்களின் தலைகள் அடிக்கடி தோன்றி மறைகின்றன. அவர்கள் எல்லோரும் தத்தமது தொழிற்சங்கங்களுக்கு ஆள் பிடிப்பதற்காக நாயாய் அலைகின்றனர். இந்த மாதத்தில் வளைத்துப் பிடிக்காவிட்டால் இன்னும் ஆறு மாதங்கள் காத்திருக்க வேண்டும்.

'வருடத்தில் இரண்டு மாதங்கள் சந்தா வேட்டையாடும் இந்த மலையகத் தொழிற் சங்கத் தலைவர்கள் ஏனைய பத்து மாதங்களில் இந்த தொழிலாளர்களைப்பற்றி சிந்திக்கின்றார்களா? அவர்களுக்காக என்ன செய்துள்ளனர்?'' என்று கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டனர் தோட்டத் தொழிலாளர்கள்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விலைவாசி உயர்வு, வேலைநாள் குறைப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பவை ஏற்படுத்தும் பொருளாதாரத் தாக்கத்தினால் தோட்டத் தொழிலாளர்கள் மூச்சுவிட முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இந்த அப்பாவித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கான சம்பள உயர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவும் இந்த மலையகத் தலைவர்கள் செய்த சாதனைகளை சற்றுத் திரும்பிப் பார்ப்போம்.

மலையகத்தில் கால் ஊன்றும் நோக்கத்துடன் தொழிற்சங்கம் ஒன்றை ஆரம்பித்தது ஜே.வி.பி. ''இதுவரை காலமும் மலையகத்தில் இருந்து செயற்பட்ட தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களுக்காக எதையுமே செய்யவில்லை. நாங்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக் குவித்து விடுவோம்'' என்று வரிந்து கட்டிக்கொண்டு வந்தார் இராமலிங்கம் சந்திரசேகரன் எம்.பி.

முன் எப்போதுமே இல்லாத வகையில், வரவு செலவுத்திட்டத்தின் மூலம், தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு பெற்றுக்கொடுப்போம் என்று வாக்குறுதிகளை வாரி வீசினர். பற்றாக்குறைக்கு அமைச்சர்களும் தோட்டத் தொழிலாளர்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்தனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை வழங்குவோம் என நீட்டி முழக்கினர்.

இவை எல்லாம் மலையகத்தின் ராஜாக்கள் நாங்களே என்று கூறிக்கொண்டு வலம் வந்த ஆறுமுகன் தொண்டமானுக்கும் இ.தொ.காவுக்கும் ஒரு கலக்கத்தை ஏற்படுத்திவிட்டன.

என்னடா இது நேற்று முளைத்தவர்கள் பட்ஜெட் மூலம் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுத்துவிட்டால் நாம் செல்லாக்காசாகிவிடுவோமோ என்ற அச்சம் இவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

இதனால், தோட்டத் துரைமார் சங்கத்துடன் பேச்சு நடத்துகின்றோம், கூடிய விரைவில் ஒப்பந்தம் செய்யப்போகிறோம் என்றனர். பின்னர் பட்ஜெட் மூலம் ஏனையவர்களுக்கு வழங்கப்படும் சம்பள உயர்வைப் பார்த்து அதன் அடிப்படையில் கூட்டு ஒப்பந்தம் செய்யப்போகிறோம் என பம்மாத்துக் காட்டிக்கொண்டிருந்தனர்.

ஆனால் நாடாளுமன்றத்தில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் அவசரம் அவசரமாகத் தோட்டத் துரைமாருடன் உப்புச் சப்பற்ற கூட்டு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். இருநூறு ரூபாய், முந்நூறு ரூபாய் பெற்றுக்கொடுப்போம் என்று ஜம்பம் பேசியவர்கள் சில ரூபாய்களை மட்டுமே பெற்றுக்கொடுத்தனர். இது யானைப்பசிக்கு சோளப் பொரியைப் போட்டது போலாகிவிட்டது. அதோடு நின்றுவிடவில்லை. இதற்கு மேலே ஒரு சதமாவது எவராலும் பெற்றுக் கொடுக்க முடியாது என ஆறுமுகன் தொண்டமான் அடித்துக் கூறிவிட்டார்.

இது தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றமாகிவிட்டது. பட்ஜெட் மூலம் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்போம் என்றவர்களும் வாயடைத்துப் போயினர். கட்டாயமாக சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று கூறிய அமைச்சர்களும் கைவிரித்துவிட்டனர்.

கூட்டு ஒப்பந்தங்களின் மூலம் சம்பள உயர்வுகளைப் பெறும் ஊழியர்களுக்கு அரசு வழங்கும் சம்பள உயர்வுகள் கிடைக்காது என நிதி அமைச்சரும் கூறிவிட்டார். இதன் மூலம் ஜே.வி.பியினரும், இ.தொ.காவும் மற்றும் அமைச்சர்களும் தோட்டத் தொழிலாளர்களை ஆசை காட்டி மோசம் செய்துவிட்டனர்.

அரசின் செயற்பாட்டையும், இ.தொ.காவின் காட்டிக் கொடுப்பையும் ஏனைய தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் வன்மையாகக் கண்டித்தனர். இந்த சந்தர்ப்பத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தெம்பூட்டும் கோசத்துடன் போராட முன் வந்தது மலையக மக்கள் முன்னணி.

தன்னுடைய தொழிற்சங்கத்துக்குத் தேவையான அளவு அங்கத்துவ எண்ணிக்கை இல்லை என்பதைக் காரணம் காட்டி பேரம் பேசுவதற்கு முட்டுக்கட்டை போட்டதோடு, 'நயவஞ்சகமான முறையில் இ.தொ.காவும் தோட்டத் துரைமாரும் செய்துகொண்ட கூட்டு ஒப்பந்தத்தை ரத்துச் செய்து நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்போம். கூட்டு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போகின்றோம்' என்று கூட்டம் போட்டுக் கூறினர்.

மலையக மக்கள் முன்னணியின் இந்த வார்த்தைகள் தொழிலாளர்களுக்கு சிறிது ஆறுதலை அளித்தன. ஆனால் அதுவும் கூட ஆற்றில் போட்ட கல்லாகிவிட்டது.

வழக்குத் தாக்கல் செய்யப்போகிறோம் என்று வாலை முறுக்கிக்கொண்டு வந்தவர்களும் வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டனர். பல மாதங்கள் ஓடிவிட்டன. வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. இதுவும் ஒரு ஏமாற்றமே.

இப்படியாகவே மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களை பசப்பு வார்த்தைகளின் மூலம் ஏமாற்றி வந்த இதே தொழிற்சங்கவாதிகள்தான் இப்போது தோட்டம் தோட்டமாக சங்கத்துக்கு ஆட்கள் சேர்க்க உங்கள் முன் வந்துள்ளனர். தோட்டத் தொழிலாளர்கள் இந்த இடத்தில்தான் தமது புத்தியைப் பயன்படுத்த வேண்டும்.

தம்மை ஏமாற்றி அடகு வைத்து சுகபோகம் அனுபவிப்பவர்கள் யார்? உண்மையாகவே சேவை செய்பவர்கள் யார்? இவற்றை தெளிவுபடுத்திக்கொண்டு அவர்களுக்கே ஆதரவளிக்க வேண்டும். அப்போதுதான் மலையகத்தில் உறுதியான ஒரு தலைமையை உருவாக்க முடியும்.

---



## டேஸ்ட் கடை தணிகாசலம்

# இது படுகொலையா? இல்லை தற்கொலையா?

அன்று வெள்ளிக்கிழமை, தணிகாசலம் அண்ணன் கோவிலுக்குப் போவதாகக் கிளம்பினார். அப்போது தலைவிரி கோலமாக ஓடிவந்தாள் அலமேலு பாட்டி. 'என்னடா இது வெள்ளிக்கிழமை; அதுவுமா இந்தப் பாட்டி தலைவிரி கோலமாக வாறாளே' என்று அதிர்ச்சியுடன் நின்றார் தணி அண்ணன்.

''என்ன பாட்டி அவசரம்? இப்படி ஓடி வருகின்றீர்கள். என்ன நடந்தது?'' என்று விசாரித்தார் தணி அண்ணன்.

''தம்பி இந்தப் பாவிங்க எம் புள்ளையை கொன்னுபுட்டாங்க. வாழைக்குருத்தாட்டம் இருந்த எம்புள்ளையை அநியாயமா கொன்னுப்புட்டானுங்க'' என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டாள் அலமேலு பாட்டி.

''என்ன பாட்டி சொல்லுரீங்க. ஓங்க புள்ளையை கொன்னுபுட்டாங்களா? கொஞ்சம் வெவரமா சொல்லுங்க பாட்டி''

''ஆமாம் தம்பி. இந்த டாக்டரும் வெல்பெயார் நோனாவும் இந்த சின்ன சாமிப் பயலும் சேர்ந்து எம்புள்ளையைக் கொன்னுப்புட்டாங்க.''

''பாட்டி என்ன பாட்டி சொல்றீங்க. என்ன நடந்தது?''

''தம்பி ஓங்களுக்கு தெரியும் எம்புள்ள பரமேஸ்வரிக்கு இப்பத்தான் 31 வயது. கீரைத்தண்டு மாதிரி இரண்டு குழந்தைகள்''

''அதுதான் தெரியுமே பாட்டி. பரமேஸ்வரிக்கு இப்ப என்ன நடந்துபோச்சி?''

''அந்த அநியாயத்தைச் சொல்லத்தானே ஓடிவந்தேன். இந்த தோட்டத்து வெல்பெயார் நோனா வந்து எம் மருமகன் சின்னச்சாமிக்கிட்ட பேசி இருக்கா. குடும்பத்தில கஷ்டம்தானே. ரெண்டு புள்ளைகள் போதும். சின்னக் குடும்பமா இருந்தா சந்தோஷமா இருக்கலாம். அதுனால குடும்பக் கட்டுப்பாட்டு ஒபரேசன் செய்துகொண்டால் பணமும் கிடைக்கும். நீங்களும் நல்லா இருக்கலாம் என்று போதனை செய்துப்புட்டா.''

''அப்புறம் என்ன பாட்டி நடந்தது? தெரியச் சொல்லுங்க''

''இந்தப் பாவி சின்னச்சாமி தினமும் குடிச்சுப்புட்டு வந்து எம்புள்ளைக்கு கரைச்சல் கொடுத்து இருக்கான். அதுக்கு அவள் ஒத்துக்கலை. அதுனால எந்த நாளும் அடியும் உதையும். அடி தாங்காம எம் புள்ளையும் குடும்பக்கட்டுப்பாட்டு ஒபரேசன் செய்ய ஒத்துக்கிட்டா.''

''என்ன பாட்டி இது கொடுமையா இருக்கு. கட்டாய கருத்தடை ஒப்பரேசனா?''

''ஆமாம் தம்பி. எம்மவளோட இன்னும் 25 பேரை ஆடு, மாடு ஏத்துற மாதிரி தோட்டத்து லொரியில ஏத்திக்கொண்டு போனாங்க. தோட்டத்து ஆஸ்பத்திரியில நூறு, நூற்று ஐம்பது பேருக்கு மேல் நெறைஞ்சி இருந்தாங்க.''

''பாட்டி இப்படியும் நடக்குமா?''

''நான் என்ன பொய்யா சொல்லுறன். அத்தனை பேருக்கும் ஒரே டாக்டர் ஒப்பரேசன் செய்து முடித்துவிட்டார். கொஞ்ச நேரத்தில எல்லாத்தையும் லொரியில ஏத்திக்கொண்டு வந்து பிரட்டுக்களத்தில் கொட்டிப்புட்டு பொயிட்டானுங்க. அதுல என் மவ மட்டும் மயக்கமாகவே இருந்தா. என்ன செய்வது? பக்கத்து வீட்டு ஆளுங்களின் உதவியுடன் வீட்டுக்குக் கொண்டு போனோம்''

''அப்ப ஓங்க மருமகன் சின்னச்சாமி என்ன ஆனான்?''

''அந்தப்பாவி ஆஸ்பத்திரியில் கொடுத்த பணத்தை எடுத்துவிட்டு போதை அடிக்கப் போயிட்டான்.''

எம்மவளும் மூனு நாளா தண்ணி வென்னி இல்லாம படுத்த படுக்கையா இருந்திருக்கா. பக்கத்து வீட்டுக்குமாரசாமி ஓடி வந்து எங்களுக்கு சேதி சொன்னான். நாங்களும் ஓடி வந்து பார்த்தால் எம் பொண்ணு பொணமா கெடக்கா தம்பி.''




''கடவுளே அந்தப் பச்சைப்புள்ளைக்கு இப்படி ஒரு சாவா ? குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரில் நம்ப வம்சத்தையே அழிச்சுப்புட்டாங்களே. எந்தவிதமான வசதிகளும் இல்லாத இடங்களில் மாடு அறுப்பது போல் அறுத்துப்போட்டு படுகொலை செய்துபுட்டானுங்களே பாவிகள்.''

''இப்ப நான் என்ன தம்பி செய்வேன்?''

''இனிமேல் என்ன பாட்டி செய்ய இருக்கு. எல்லாம்தான் குடி முழுகிப் போச்சி. இந்த சின்னச்சாமி மாதிரி குடிகாரப்புருஷன் மாரும், புரியாத பொண்டுகளும் இருக்கும் வரை இப்படித்தான் நடக்கும். இப்ப நடந்ததை கொலை என்பதா அல்லது தெரிந்துகொண்டே செய்து கொண்ட தற்கொலை என்பதா? எமது சமூகமும் சமுதாயமும் ஒட்டுமொத்தமா சேர்ந்து இந்தத் திட்டமிட்ட கருச்சிதைப்பு வேலையை தடுக்காவிட்டால் விபரீதம் மேலும் பெருகும். வாங்க பாட்டி. இனி நடக்க வேண்டிய காரியங்களைப் பார்ப்போம்.''

இப்படிக்கூறி அலமேலு பாட்டியை அழைத்துக்கொண்டு நடந்தார் தணிகாசலம் அண்ணன்.

# மிஸ்டர் வேதாளம்



அண்மைக்காலங்களில் கொஞ்சம் அமைதியாகிவிட்ட வேதாளத்தார் இன்றும் அமைதியாக எம் முன்னே ஆஜரானார். ''என்ன ரொம்பத்தான் அடங்கிவிட்டீர்'' என்றோம்.

''ஆமாம் அடுத்தடுத்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதைப் பார்த்தால் நாமும் கொஞ்சம் அடக்கி வாசிப்பது நல்லது தானே'' என்றார்.

''என்னய்யா... உயிரோடிருக்கும் நாங்கள் தான் பயப்பட வேண்டும். நீர்தான் ஏற்கனவே ரிக்கட் வாங்கிவிட்டீரே!'' என்றோம்.

''இப்போதெல்லாம் ரிக்கட் வாங்கியவர்களுக்கும் ரிக்கட் கொடுப்பார்கள் போல் இருக்கிறதே. மனிதப்பிறவியாக இருந்த நான் ரிக்கட் கிடைத்த பின் மரத்திலே தொங்கும் பிறவியாகிவிட்டேன். இதிலேயும் ரிக்கட் தந்தால் என்னத்திலே தொங்க வேண்டி வருமோ?'' என்று கவலையாகச் சொன்னார்.

''சரி விடயத்துக்கு வாரும். எடுத்து வந்த விடயங்களை அவிழ்த்து விடும்'' என்றோம்.

''அண்மையிலே ஜப்பானுக்குச் சென்ற சிவப்புச்சட்டை தலைவர்கள் பற்றி எடுத்து விடட்டுமா?'' என்றார்.

''ஓ... தாராளமாக..'' என்றோம்.

''வழமையாக அரசியல் பிரமுகர்கள் வெளிநாடு செல்வதென்றால் விமான நிலையத்தில் VIP Lounge எனப்படும் முக்கிய பிரமுகர்களுக்கான வாசலின் ஊடாகத்தான் சென்று விமானத்தில் ஏறுவது வழக்கம். ஆனால் இம் முறை சிவப்புச் சட்டை தலைவர்கள் தாங்களும் நாட்டின் சாதாரண பிரஜைகள்தான் என்பதை வலியுறுத்துவதற்காக— சாதாரணமான பயணிகள் செல்லும் வாசலினூடாகச் சென்று விமானத்தில் ஏறினார்களாம்.''

''அப்படியா! தம்மைத் தாழ்மையானவர்கள் என்று காட்டிக்கொண்டார்கள் போலும்''

''ஆமாம். ஆனால் சென்றது மட்டும் தான் சாதாரண வழி. ஜப்பானில் சென்று இறங்கியதும் நிலைமை தலைகீழாம். அங்கே அவர்கள் தங்கியது ஜப்பானின் முதல் தரமான அதி நவீன வசதிகள் கொண்ட ஹோட்டலான 'இம்பீரியல்' ஹோட்டலிலாம். அந்த ஹோட்டலில் இவர்கள் தங்கிய அறையில் ஒருநாள் வாடகை இலங்கைப் பெறுமதியில் 30 ஆயிரங்களைத் தாண்டுமாம். இவ்வளவுக்கும் அங்கே அவர்களை வரவேற்க வந்திருந்த பல நண்பர்கள் தமது வீட்டுக்கு வரும்படி அழைத்த போதும் அதனை ஏற்க மறுத்துவிட்டார்களாம்''

''அப்படியா சங்கதி...?''

''ஆமாம். இங்கே சாதாரண பயணிகளாகப்புறப்பட்ட அவர்கள் அங்கேபோயும் சாதாரணமான விலை குறைந்த ஹோட்டலில் தங்கியிருக்கலாமே? ஏன் இங்கே சாதாரண பிரஜைகளாகவும் அங்கே கனவான்களாகவும் மாறினார்கள் என்று கவலைப்பட்டார் என்னுடன் பேசிய சகோதர பத்திரிகை நண்பர் ஒருவர்''

''அதுதானே! இங்கே சிவப்புத் தோற்றமும்— அங்கே செழிப்புத் தோற்றமும் காட்டுகிறார்களே! '' என்றோம் நாம்.

''இவ்வாறான இவர்களின் இரட்டை வேடம் விரைவிலே உடையத்தான் போகிறது. இவர்கள் தொடர்பான 35 முக்கிய கோப்புகள் தொடர்பாக ஜனாதிபதி இன்னமும் முடிவெதுவும் எடுக்கவில்லையாம்... எடுக்க வெளிக்கிட்டால் இவர்களின் சாயம் விரைவில் வெளுக்குமாம்'' என்றார்.

''ஆமாம். ஜனாதிபதி மேசையில் 35 கோப்புகள் உள்ளதாக முன்னர் சொன்னீரே! அதுபற்றி விபரம் சொல்லவில்லையே''

''ஆம். ஜே.வி.பியின் மிக முக்கிய தலைவர் ஒருவர் பாவித்த 5 கைத்தொலைபேசிகளுக்கான கட்டணங்களை வேறு நபர்கள் செலுத்தும்படி வற்புறுத்தியமை, இன்னொரு ஜே.வி.பியின் தலைவர் இரண்டரைக் கோடி ரூபா செலவில் வீடொன்றைக் கட்டியமை, இன்னொருவர் முன்னர் குழப்ப காலத்தில் செய்த கொலை— கொள்ளை என்பன பற்றி விசாரிக்கப்பட்ட அறிக்கைகள் அடங்கிய கோப்புகளாம் அவை.''

''அவைகளை ஜனாதிபதி என்ன செய்யப்போகிறார்?''

''தொடர்ந்து ஜனாதிபதிக்கு தொல்லை கொடுத்தால் அவைகளை கையிலெடுப்பாராம் ஜனாதிபதி. இந்தத் தகவல் ஏற்கனவே ஜே.வி.பி தலைவர்களுக்கு பறந்திருக்கிறது. அதனால் அங்கேஇப்போ கொஞ்சம் அடக்கி வாசிக்க ஆரம்பித்திருக்கிறார்களாம்''

''அடங்கின மாதிரித் தெரியவில்லையே! ஜப்பானில் துள்ளிக் குதித்திருக்கிறார்களே!!''

''துள்ளினார்கள்தான். ஆனால் அங்கே அழுத்தமாக சில விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவாம். குறிப்பாக பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ரஜனி பாணியில் கதம்.. கதம்.. எல்லாம் முடிந்துவிட்டது என்ற ரீதியில் சொல்லப்பட்டதாம்''

''ஆமாம்.. ஜப்பான் ரஜனி ரசிகர்களால் சூழப்பட்ட நாடு தானே...! சொல்லியிருப்பார்கள்''

''கிட்டத்தட்ட பொதுக்கட்டமைப்பு என்பது முடிவாகிவிட்ட விடயம்.எனவே அதனைப் பற்றி அலட்டிக்கொள்ள வேண்டாம் என்று ஆணித்தரமாக சொல்லப்பட்டதாம். அழுத்தமாகவும் விலாவாரியாக விளக்கப்பட்டதாம்''

''அதற்கு இவர்கள் என்ன சொன்னார்களாம்?''

''ஐயோ.. அப்படியென்றால் அதனை மாற்றி பொதுக்கட்டமைப்பு என்று இல்லாமல் வேறு பெயரில் அமுல்படுத்துங்கள். அப்போ நாம் எமது ஆதரவாளர்களிடம் அமுலுக்கு வந்துள்ளது பொதுக்கட்டமைப்பு அல்ல எமது ஆலோசனைக்கு உட்பட்ட ஒன்றுதான் என்று சொல்லிச் சமாளிக்கலாம் அல்லவா? என்று கெஞ்சிப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்களாம். பேசிப்பார்க்கிறோம் என்று சொல்லி வழி அனுப்பி வைக்கப்பட்டதாம்.''

''அப்போ ஜே.வி.பிக்குள்ளும் குழப்பம் தான் போங்கள்.''

''ஏகப்பட்ட குழப்பங்கள். இப்போ அங்கே ஜனாதிபதியை ஆதரிக்கும் குழு, எதிர்க்கும் குழு என்று இரண்டு குழுக்கள் கிளம்பி இருக்கின்றன. ஆதரிப்போர் கைதான் உயர்ந்து நிற்கிறதாம்''

''எதிர்ப்போர் என்ன செய்யப்போகிறார்களாம்?''

''முதல் கட்டமாக ஆதரிப்போர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, கண்ணை மூடிக் கொண்டு ஜனாதிபதியைத் தாக்கித் தள்ளும் அமைச்சர் லால் காந்தின் தொழிற்சங்கப் பதவியை பறித்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் அவரோ தனது பதவியை விட்டுக்கொடுக்க முடியாதென குழப்பம் பண்ணுகிறார்.''

''அப்போ அங்கே புகை கிளம்பிவிட்டது என்கிறீர்?''

''புகை என்ன புகை; நெருப்பே பற்றி விட்டது'' என்றவர்...''இம் முறை அந்தக் கட்சியின் விவரங்கள் மட்டும்தான்; வேறில்லை'' என்றபடி ஜாகா வாங்கினார்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 163

சொற்சிலம்பம் 163 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஜூன் 12 ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூன் 19 ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 26ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.161க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாவாச்சி மாவத்தை,

கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 163

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | ■ | 17 | |
| 18 | | 19 | | ■ | 20 | | ■ |
| | ■ | 21 | | | | ■ | 22 |
| ■ | 23 | | | ■ | 24 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.161

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏ | 2 மா | ப் | 3 பு | ■ | 4 க | 5 மு | 6 கு |
| 7 க | லை | ■ | 8 தி | 9 ரா | வி | ட | ம் |
| த் | ■ | 10 பா | ன | ம் | ■ | வ | ■ |
| 11 து | 12 வ | ர | ம் | ■ | 13 அ | ன் | 14 பு |
| 15 வ | ழு | தி | ■ | 16 மா | டி | ■ | த் |
| ம் | ■ | 17 தா | 18 ச | ர் | ■ | 19 அ | தி |
| ■ | 20 க | ச | ம் | ■ | 21 மு | தி | ர |
| 22 உ | ட | ன் | பா | டு | ■ | 23 தி | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல.163

### இடமிருந்து வலம்

1. (ஒன்றுக்காக வழங்கப்படும்) காலக்கெடு
5. அளவுக்கு மிஞ்சிய ஆசை.
7. சாய்ந்து விழுதல்.
8. வெளிச்ச-வேளை.
9. திருமணம்.
11. யானையை அடக்குபவன்.
13. உழைத்துப் பெறு.
15. வானுக்கு அப்பால் உள்ளது.
16. (ஏதேனும் திரவத்தில்) தோய்.
17. கீறு.
18. குறைதல்.
20. நாங்கள்.
21. பலதும் சேர்ந்து வருவது.
23. சிறு பானை போன்ற பாத்திரம்.
24. வெடித்தால் பேரழிவு தருவது.

### மேலிருந்து கீழ்

1. நிகழக்கூடிய சம்பவம்.
2. திரை.
3. கொலைகாரப் பாதகன்.
4. சிறிய பணக்குற்றி.
5. உட்செருக்கு.
6. குரங்குக்கு இது ஐந்தாவது கரம்.
8. காசு.
10. இரத்தல்.
12. பிடிப்பதற்கு அல்லது அழிப்பதற்கு வைப்பது.
14. அலை / மேடையை மறைக்கும் படுதா.
16. மேன்மையானவை / சிறந்தவை.
19. மெல்லியது. உலோகத்தாலானது.
20. இரண்டும் இரண்டும்.
22. தேசம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 160

1. திருமதி.சாந்தினி இராமநாதன்
கிளி/யூனியன் குளம்,
அ.த.க. பாடசாலை,
கோணாவில், கிளிநொச்சி.
2. எஸ்.ஜெயச்சந்திரராசா,
இராசேந்திரம் குளம்,
வவுனியா.
3. செல்வி.சே.சகாயமேரி,
9,சாஸ்திரியார்வீதி,
புதுமுகத்துவாரம்,
கல்லடி,
மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

1. திரு.ஐ. சந்திரசேகரம்,
இல.194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
2. இ.பிரதீபா,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
3. வ.ஆ. அதிரூபசிங்கம்,
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.
4. சி.பாஸ்கரன்,
பிரதான வீதி,
முள்ளியவளை.
5. எம்.ஜவாத்,
2ஆம் குறுக்குத் தெரு,
புத்தளம்.
6. ம.தில்லைநாதன்,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
7. சி.இராசேந்திரா,
42ஆவது ஒழுங்கை,
கொழும்பு—06.
8. ச.அர்ஜுன்,
சுமனாராம றோட்,
கல்கிசை.
9. நெல்சன் ஜெபத்துரை,
பிரதான வீதி,
பண்டாரவளை.
10. யோ.பிறிசில்லா,
குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

# ஆண்களிடம் அளவோடு நட்பு வையுங்கள்

எவ்வளவுதான் காலம் மாறிவிட்டாலும், பெண் என்பவள் புரட்சிகரமானவளாக தனது காலில் நின்றாலும் குடும்பம் என வந்துவிட்டால் அவளை அடித்தளமாகக் கொண்டுதான் அந்தக் குடும்பம் இயங்குகின்றது.

பொதுவாக ஒரு பெண்ணின் குணத்திலோ அல்லது நடத்தையிலோ ஏற்படும் சின்னச்சின்ன மாற்றங்கள் கூட அந்தக் குடும்பத்தின் அத்திவாரத்தையே மாற்றி அமைத்து விடுவது இயல்பு.

இதேபோல தான் முழுமையாக நம்பி வரும் கணவனின் நடத்தையும், அணுகுமுறையும் அவளுக்குப் பிடிக்காத ஒரு நிலை தோன்றுமிடத்து அவளது வாழ்க்கையே நரகமாகத் தோன்ற ஆரம்பிக்கும் நிலையும் உருவாகிவிடும்.



ஒரு குடும்பத்திலுள்ள எந்த ஒரு பெண்ணும் பிற ஆடவரிடம் பழகும்போது அளவுடன் பழகினால் எந்தப்பிரச்சினையும் தோன்ற வாய்ப்பிருக்காது.

பொதுவாக ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி தேவையில்லாமல் நண்பர்கள், தெரிந்தவர்கள் என்று கண்டவர்களை எல்லாம் வீட்டுக்குள் அனுமதிப்பது சிலவேளைகளில் பிரச்சினைகளை பெரிய அளவிலேயே தோற்றுவித்துவிடும்.

இதனால்தான் அந்தக்காலத்தில் 'கழுத்தளவு ஆழமான சிநேகிதனாக இருந்தாலும் வீட்டுக்கு வெளியே வைத்துக்கொள்ள வேண்டும்' என்று சொல்வார்கள்.

வீட்டுக்கு வருபவர்களிடம் எமது குறைகளைச் சொல்வது, நியாயம் கேட்பது, வீட்டிலுள்ள பிரச்சினைகளைச் சொல்வது இவை எல்லாம் எமது பலவீனத்தையே சுட்டிக்காட்டும்.

ஒவ்வொருவர் வீட்டிலும் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும் என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், அதை மறந்து நாம் அடுத்தவர் வீட்டுக்குச் செல்லும்போது, அவர்கள் எம்மிடம் இனிமையாகப் பேசும்போது இவர் என் மனைவியை விட எவ்வளவு இனிமையாகப் பேசுகிறார் என்று கணவனுக்கும், என் கணவரை விட எவ்வளவு அன்பானவராக, யோக்கியமானவராகத் தெரிகிறார் என்று மனைவிக்கும் எண்ணத்தோன்றும்.

இந்த எண்ணம் சின்னச் சபலமாக வெளிப்படும்போதுதான் தவறுகள் நடக்கின்றன. பின்பு இதை அறிய நேரிடும் கணவனாலோ அல்லது மனைவியாலோ பிரச்சினைகள் வெளியே கொண்டுவரப்பட்டு வீட்டு மானம் காற்றில் பறக்க நேரிடுகிறது.

நாம் மிகவும் சோஷியல் டைப் என பெண்கள் அலட்டிக்கொள்வதெல்லாம் ஓர் அளவோடு இருக்க வேண்டும். வெளி வட்டத்தோடு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எமது சொந்த விடயத்தில் பிறர் மூக்கை நுழைக்க நாமே ஒருவழியை உண்டாக்குவது போல அமைந்துவிடும்.

இனிய கணவன், அழகிய மழலைகள், நல்ல மனைவி என சிறந்த ஒரு குடும்ப வட்டத்தை அமைத்து வாழ்க்கையை சிறந்த முறையில் அமைக்க வேண்டும் என்ற சிந்தனையில் ஒவ்வொரு கணவன்–மனைவியும் செயற்பட்டாலே வாழ்க்கை சொர்க்கம் தான். அதைவிட்டு அடுத்தவர் வாழ்க்கையை ஆராய்ந்து உங்கள் சிறந்த வாழ்க்கையை நீங்களே ஏன் வீணாக்கிக் கொள்ள வேண்டும்?





## லெமன் டைமண்ட்ஸ்

*தேவையான பொருட்கள்*

| | |
|---|---|
| கோதுமை மா | – 2 கப் |
| உப்பில்லாத வெண்ணெய் | – 1 கப் |
| ஐஸிங் சுகர் | – 1/2 கப் |
| முட்டை | – 4 |
| தூளாக்கிய சீனி | – 2 கப் |
| பேக்கிங் பவுடர் | – 1 தேக்கரண்டி |
| உப்பு | – 1/2 தேக்கரண்டி |
| எலுமிச்சைச்சாறு | – 1/4 கப் |

*செய்முறை*

கோதுமை மாவுடன் வெண்ணெய் 1/2 கப் சேர்த்து ஐஸிங் சுகர் சேர்த்து ஒன்றுடன் மற்றொன்று சேரும் வரை நன்றாக அடித்துக் கலக்குங்கள். இந்தக் கலவையை பேக்கிங் தட்டில் ஊற்றி அவனில் 350 டிகிரி யில் 30நிமிடங்களுக்கு பேக் செய்யுங்கள்.

இன்னொரு பக்கம் முட்டைகளை உடைத்து ஊற்றி அத்துடன் தூளாக்கிய சீனி, உப்பு, எலுமிச்சைச்சாறு சேர்த்து நன்றாகக் கலக்குங்கள். அவனிலிருந்து பேக் ஆனதை வெளியே எடுத்து அதன்மேல் இந்தக் கலவையை ஊற்றி ஒரே அளவாகப் பரப்பிக்கொண்டு மீண்டும் 15 நிமிடங்களுக்கு அவனில் வைத்து பேக் செய்யுங்கள்.

இப்போது பேக் ஆனதை வெளியே எடுத்து ஆறவிட்டு, அதன்மேல் மீதமுள்ள அரைத் தேக்கரண்டி ஐஸிங் சுகரைத் தூவுங்கள். இதை டைமண்ட் வடிவங்களில் வெட்டித் தனியாக எடுங்கள். சுவையான லெமன் டைமண்டை இப்போது நீங்கள் சாப்பிடலாமே!

****

எமது வாழ்க்கையில் எவ்வளவோ மகிழ்ச்சியான சந்தர்ப்பங்கள். பிறந்த நாள், திருமண நாள் மற்றும் விழாக்கள், வெற்றிகள்...! ஆனால் அவை ஒவ்வொன்றையும் தனியாக எம்மால் கொண்டாட முடியாது. கொண்டாட்டம், கோலாகலம், மகிழ்ச்சி இவை எல்லாமுமே எம்மைச் சார்ந்தவர்களோடு முழுமையாக அதைப் பகிர்ந்துகொள்ளும்போதுதான் உருவாகின்றன.

சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் என்பது முழுமை பெற வேண்டுமானால் அதற்குப் பரிசு வழங்குவது அவசியமாகிறது. விழாக்காலங்களிலும், மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களிலும் பரிசு வழங்க வேண்டும் என்பது எம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் எந்தெந்த மாதிரியான நிகழ்ச்சிகள், யாருக்குப் பரிசுகளை வழங்குகிறோம் என்பவற்றை உணராமலே சிலர் பரிசுப் பொருட்களை வாங்கிக்கொடுத்து விடுவார்கள்.

நாம் ஒருவருக்குப் பரிசு கொடுக்கும்போது சில விடயங்களை முதலில் கவனிக்க

## பரிசுப்பொருள் வாங்கும்போது...

வேண்டும்.

*நாம் கொடுக்கும் பரிசு ஆணுக்கா, பெண்ணுக்கா?

*வயது,

*உங்களுக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு

*நிகழ்ச்சி

*அவரது தகுதி

*விருப்பங்கள்

*அவரது பொருளாதார நிலை

*அவரது தேவை



இவை அனைத்தையும் நீங்கள் புரிந்துகொண்டால் நிச்சயமாக அவருக்குப்பிடித்த பரிசுப்பொருளை உங்களால் தெரிவு செய்ய முடியும்.

பரிசு விடயத்தில் உங்களுக்கும் அவருக்கும் இடையே உள்ள நட்பின் தொடர்பு மிகவும் கவனிக்கத்தக்கது.

பரிசுப்பொருட்கள் வாங்கிக்கொடுக்கும்போது விலை உயர்ந்ததைத்தான் வாங்கிக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் சரியானதல்ல. அதற்கென ஒரு பட்ஜெட்டை ஒதுக்கிவிடுங்கள். அதற்குத் தக்கபடியான பொருளை, பயன்படுத்துபவரின் நிலை கருதி தேர்ந்தெடுங்கள். கொடுத்து மகிழுங்கள்—மகிழ்ச்சிப்படுத்துங்கள்.

## தினமும் ஷாம்பூ போடலாமா?

தலைமுடி அழுக்காகவோ அல்லது எண்ணெய்த் தன்மையுடன் இருந்தாலோ மட்டுமே தலைக்கு ஷாம்பூ போடலாம். தினமும் ஷாம்பூ போடுவதால் தலையில் இயற்கையாகவே சுரக்கும் எண்ணெய் கழுவப்படுகிறது. இந்த எண்ணெய்தான் முடி ஆரோக்கியமாக வளர்வதற்கு அத்தியாவசியமாகிறது.

சிலவேளைகளில் நீங்கள் எண்ணெய்ப் பசையுள்ள முடியைக் கொண்டிருந்தால் ஒரு நாள் விட்டு ஒருநாள் ஷம்பூவைப் பயன்படுத்துங்கள். வறண்ட முடியைக் கொண்டவர்கள் வாரத்துக்கு இரண்டு முறை மட்டும் தலைக்கு ஷம்பூ போட்டாலே போதும்.

## ஸ்மைல் ப்ளீஸ்...

"பெண்கள் சிரித்தால் போச்சு புகையிலை விரிச்சாப்போச்சு..." இது பெண்களின் சிரிப்பை வைத்து எம் முன்னோர்கள் கூறிய முதுமொழி. சிரித்தால் ஆயுள் கூடும் என்பது கூட எமது அறிஞர்களின் ஆய்விலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட உண்மை. ஆனால் எம் முகத்தில் தவழும் புன்னகை. எத்தகைய கடுமையான மனநிலையைக் கொண்டிருப்பவரைக் கூட மாற்றும் தன்மை கொண்டது என்பது கூட உண்மைதான்.

நாம் யாருடன் பேசினாலும் அவர்களுடைய நற்குணங்களை வாயாரப் புகழ்ந்தால் அது அவர்களுக்குப் பிடிக்கும் ஒரு விடயமாகும்.

மற்றவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைப் பாராட்டுவதை விட்டு எந்நேரமும் அவர்களைப்பற்றிக் குறை கூறிக்கொண்டிருந்தால் உங்களை யாருக்கும் பிடிக்காமலே போய்விடும். எனவே அந்தப் பழக்கத்திலிருந்து சற்றே வெளியே வந்து அடுத்தவர்களின் அழகை, அறிவுத்திறனை, சாமர்த்தியத்தைப் பாராட்டிப்பாருங்கள். உங்கள் உறவுகளிடமோ, நட்புகளிடமோ நிச்சயமாக மாற்றம் தெரியும்.

அதே போல் அவர்களுக்குப் பிடித்த விடயங்கள் குறித்து அடிக்கடி நீங்கள் பேச வேண்டும். உங்கள் நண்பர்கள் பேச முற்படும்போதெல்லாம் பேச்சை முடக்கும் வகையில் எதிர்வாதம்—நக்கல் செய்தால் அது அவர்களுக்கு ரசிக்காது.





பொதுவாக மற்றவர்களுக்குப் பிடிக்காத விடயத்தைப் பேசி அவர்களை மன ரீதியான பாதிப்புக்கு உள்ளாக்கக் கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக அடுத்தவர் கோபமாய் இருக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களைப் பார்த்து ஒரு புன்சிரிப்புச் சிரித்துப் பாருங்கள். அவ்வளவுதான். அவர்கள் கோபம் எல்லாம் பனிபோல் கரைந்து உங்களிடம் சட்டென ஒட்டிக்கொள்வார்கள்.

ஆம். இதுவே மற்றவர்களைக் கவர நீங்கள் செய்ய வேண்டிய விஷயம். எனவே நீங்களும் கொஞ்சம் முயன்று பாருங்கள் சகோதரிகளே!



## டிப்ஸ்

* இறைச்சியை வேகவைக்கும் போது, கூடவே ஒரு துண்டு பப்பாளியையும் சேர்த்து வேக வையுங்கள். விரைவில் இறைச்சி வெந்துவிடும். வித்தியாசமான சுவையும் கிடைக்கும்.

* இறைச்சித் தூளுக்குத் தேவையான கடுகை வறுக்கும் போது அதில் இரண்டு மூன்று கராம்போ, கராம்பு இலையோ சேர்த்தால் நல்ல மணம் கிடைக்கும்.

*பச்சைத் தக்காளியை சிறுசிறு துண்டாக நறுக்கி காய வைத்துத் தூளாக்க வேண்டும். அதனை இறைச்சிச் சரக்கோடு சேர்த்தால் இறைச்சிக்கறிக்கு நல்ல சுவை கிடைக்கும்.


*குக்கரில் வேகவைத்த இறைச்சியின் சுவை குறைவாகவே இருக்கும். அதனால் முதலில் அரைத்த இறைச்சிச் சரக்கைச் சேர்த்து, சட்டியில் வேகவையுங்கள். இறைச்சிச் சரக்குத் தூள் பாதியாக வற்றிய பிறகு குக்கரில் வைத்து, இலேசான தீயில் வேகவிடுங்கள். சுவை குறையாது.

* இறைச்சியை பப்பாளி இலையில் சுற்றி வைத்தால் மென்மையாக இருக்கும்.

* பிரியாணிக்காக இறைச்சியை வேக வைப்பதற்கு 2 மணி நேரத்திற்கு முன்பே, தயிர், இஞ்சி – பூண்டு போன்றவற்றை அரைத்துக் கலந்து வைத்துவிடுங்கள். நல்ல சுவை கிடைக்கும்.

* இறைச்சி கூட்டு, குழம்பில் பெரிய வெங்காயத்திற்குப்பதில் சிறிய வெங்காயத்தையும் சேர்த்தால் அதிக சுவை கிடைக்கும்.

* இறைச்சிக் குழம்பில் உப்பு அதிகரித்துவிட்டால், சோற்றை உருண்டைகளாக்கி அதில் போட்டு சிறிது நேரம் கழித்து, உருண்டையை உடையாமலே எடுத்துவிடுங்கள். உருளைக்கிழங்கை நறுக்கிச் சேர்த்தாலும் உப்புத் தன்மை குறைந்துவிடும்.





*பேசாத மொழி உறையிலுள்ள வாள். பேசிவிட்டால் வாளைப் பிறர் கையில் கொடுத்துவிடுகிறாய்.*




பாணும், பாலும் நாய்க்காக இதோ உள்ளன. ஆனால் நாய்க் குட்டியோ மேல் புறத்தில் பாவம்! நாய்க்குட்டிக்கு விரைவில் வழியை காட்டுங்கள்.



## விடுகதை

1. தலைகுனிந்த பெண்ணே பசி தீர்ப்பாய் கண்ணே.
2. மங்கள நாட்களுக்கு தேவையானவள், அதுவரை மண்ணுக்குள் இருந்தாள்.
3. ஆட்டிப் பிழிந்தால் அரைப் பங்கு சாறு; நீட்டி நிமிர்ந்தால் மன்மதனின் வில்.
4. நன்றிக்கு வாலுண்டு, ஆனாலும் நாலு வீட்டிலும் சோறுண்டு.
5. உரசினால் தீப்பற்றுவான், காற்றுக்கு கீதம் பாடுவான்.
6. மாவுப்பொருள் மணக்கும் பொருள்.
7. போடாத சட்டையை கழற்றினான், மாயக்காரன் அல்ல...
8. ஓடியாடித் திரிவான், ஓசை வராமல்! பல வீடுகளில் இவன் செல்லப்பிள்ளை.
9. எரிந்தான், ஒளிர்ந்தான், ஒளி தரத்தர குறைந்தான்.
10. ஒற்றைக்காலன், ஒய்யாரமாய் ஆடுவான்

விடைகள்

| | |
|---|---|
| 1. நெற்கதிர் | 6. வாசனைப்பவுடர் |
| 2. மஞ்சள் | 7. பாம்பு |
| 3. கரும்பு | 8. பூனை |
| 4. நாய் | 9. மெழுகுவர்த்தி |
| 5. மூங்கில் | 10. பம்பரம் |

## அறிந்து கொள்ளுங்கள்

* உலகின் மிகப் பெரிய பறவை?
*தீக்கோழி.*
* உலகின் மிகப் பெரிய பாலைவனம்?
*சகாரா பாலைவனம்.*
* உலகின் மிகப்பெரிய விரிகுடா?
*ஹட்சன் விரிகுடா.*
* உலகின் மிகப்பெரிய கண்டம்?
*ஆசியாக் கண்டம்.*
* உலகின் மிகப்பெரிய கடல்?
*தென் சீனக்கடல்.*
* உலகின் மிகப்பெரிய வளைகுடா?
*மெக்சிகோ வளைகுடா.*
* உலகின் மிகப்பெரிய நதி?
*நைல் நதி.*
* உலகின் மிகப்பெரிய உயரமான இடம்?
*எதியோப்பியாவில் உள்ள பால்லோல்.*
* உலகின் மிகப்பெரிய உயிரினம்?
*நீலத் திமிங்கிலம்.*
* உலகின் மிக நீளமான மலைத்தொடர்?
*அந்தீஸ் மலைத்தொடர்.*
* உலகின் மிக உயரமான மலை?
*எவறெஸ்ட் மலைத்தொடர்.*
* உலகின் சனத்தொகைக் கூடிய நாடு?
*சீனா.*
* உலகில் உள்ள நீரின் அளவு?
*1400 மில்லியன் கன லீற்றர்.*

**நவஜிகா நவரத்தினம், தரம் 10, புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், D8 உருத்திரபுரம், கிளிநொச்சி.**

## சிறார்களின் கைவண்ணம்













# கோபத் தீ

சுந்திரா என்பவன் 1739ஆம் ஆண்டு அரச குடும்பத்தில் பிறந்த ஓர் இளவரசன். பிறக்கும்போதே அவனுக்கு பல் முளைத்திருந்ததால் அதை ஜோதிடர்கள் அபசகுனம் என்று கருதினார்கள். மன்னரின் உயிருக்கு விரைவிலேயே ஆபத்து என்றும் இளவரசன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கமாட்டான் என்றும் கூறினார். அவனை அனாதையாக விட்டு விடும்படியும் ஆலோசனை சொன்னார்கள்.

ஆனால் வளர்ந்து பெரியவனான சுந்திரா ஜோதிடர்களின் கணிப்பை எல்லாம் பொய்யாக்கினான். அதுபற்றிய ஒரு சிறிய கதை, இங்கே.



ஒரு நாள் பிரசித்தி பெற்ற ஒரு முனிவரிடம் சுந்திராவை அறிமுகம் செய்து வைத்தார்கள். அவரைப் பார்த்ததும் சுந்திரா, "எனக்கு புகை வாசனை அடிக்கிறது. தயவு செய்து தீயை தணித்து விடுங்கள்" என்றான்.

"என்னது என்னிடம் தீயா?"

ஆச்சரியமாகக்கேட்டார், முனிவர்.

"அப்படிப்பட்ட தீ என்னிடம் இல்லை" முனிவர் ஆவேசமாகக் கூறினார்.

சுந்திரா விடவில்லை. "தயவு செய்து அந்தத் தீயை தணித்துவிடுவதுதான் உங்களுக்கு நல்லது" என்றான், மறுபடியும்.

முனிவருக்கு இப்போது கடும் கோபம். "உனக்கென்ன காது செவிடா? உன்னிடம் எத்தனை தரம் சொல்வது? என்னிடம் எந்தத் தீயும் இல்லை. மரியாதையாக இங்கிருந்து போய்விடு. இல்லையென்றால் என் கைகள் உன் முகத்தை பதம் பார்த்துவிடும்" என்று கடுமையான சொற்களைப் பிரயோகித்தார்.

உடனே சுந்திரா இப்படிச் சொன்னான். "ஆகா! உங்கள் பேச்சில் எப்படி தீ பறக்கிறது பார்த்தீர்களா? இன்னும் உங்களிடம் தீ வேகம் தணியவில்லையே? அதனால்தான் சொன்னேன். உங்களிடம் தீ இருக்கிறது, அதைத் தணியுங்கள் என்று!"

அதைக் கேட்ட முனிவர் அவமானத்தால் தலை குனிந்தார். 'இந்த இளைஞன் நம்மிடம் தணிக்கும்படி சொன்னது உண்மையான தீயை அல்ல. கோபம் என்னும் தீயை' என்பதை உணர்ந்து கொண்டார்.

## சிந்திக்க சில நிமிடம்....


* உன்னைப்போலவே உன் அயலவனையும் நேசி. அது உன் வாழ்வில் ஒருபடி உயர்த்திவிடும்.
* மனிதனது வாழ்க்கை ஒரு முரண்பாடு நிறைந்த வரலாறு. அதனை மாற்றியமைக்க முதலில் ஒவ்வொரு மனிதனும் தன்னை திருத்தி நடக்க வேண்டும்.
* நேர்மையும் மற்றவர்களை மதிப்பதுமே முக்தி நெறியின் ரகசியமாகும்.
* ஆண்டவனுக்கு இரண்டு உறைவிடங்கள் உண்டு. ஒன்று சுவர்க்கம். மற்றொன்று நன்றியுள்ள மனிதனின் இதயம்.
* உன்னிடம் உள்ளதைக் கொண்டு திருப்திப்படு. உன்னிடம் இல்லாத ஒன்றுக்கு ஆசைப்படாதே. அவ்வாறு நீ இல்லாத ஒன்றுக்கு ஆசைப்படும்போது உன்னிடம் உள்ளதையும் இழக்க நேரிடும்.

**எஸ்.சாதனா, வின்சன் வீதி, நெடுங்கேணி.**

# உஸ்பெகிஸ்தானில் உண்மைகள் உறங்கவில்லை

முன்னாள் சோவியத் சோசலிசக் குடியரசின் மாநிலங்களில் ஒன்றாக விருந்து தற்போது தனியரசாக விளங்கும் உஸ்பெகிஸ்தானின் கிழக்கு நகரான அந்திஜானில் அண்மையில் வெடித்த வன்முறைகளும், அவற்றை அடக்க இராணுவத்தினர் நடத்திய வெறியாட்டமும் உலகத்தை நடுங்க வைத்துவிட்டன.

ஐநூறுக்கு மேற்பட்ட பொதுமக்களைப் பலிகொண்ட இந்த காட்டுத்தர்பார் பற்றிய செய்திகள் உலகில் எட்டுத் திசைகளிலும் எதிரொலித்தன. இந்த இரக்கமற்ற அநியாயக் கொலைகள் கொடுத்த அதிர்ச்சியிலிருந்து உலகம் இன்றும் மீளவில்லை. மாறாக அடுத்த அடி எங்கே விழப்போகிறதோ என்று அது ஏங்கிக்கொண்டு இருக்கிறது.



இறந்தோரின் சடலங்கள் அடக்கம் செய்யப்படுகின்றன

முன்னர் குறிப்பிட்டதுபோல் இந்தக் கொடூர சம்பவத்தின்போது ஐந்நூறுக்கு மேற்பட்டோர் பலியாகினர். சுமார் 2000க்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர். மேலும் 1000க்கும் மேற்பட்டோர் உஸ்பெகிஸ்தானின் அயல்நாடான கிர்கிஸ்தானில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். ஆனால், ஜனாதிபதி கிரிபோல் பொலிஸார் உட்பட 123பேர் மட்டும் இறந்ததாகச் சொல்லியிருக்கிறார். இது பற்றி மேல் விசாரணைகள் நடத்துவதற்கென உஸ்பெகிஸ்தான் புறப்பட இருந்த ஐ.நாவின் மனித உரிமைகள் குழுவுக்கு, நிலைமை இப்போது கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதென்று கூறி அதன் கோரிக்கையை நிராகரித்துவிட்டார்.

உஸ்பெகிஸ்தானில் கடந்த 13ஆம் திகதி காலை உண்மையில் நடந்தது என்ன? முதல் நாள் இரவு அந்த நாட்டின் ஜனாதிபதி – சர்வாதிகாரி இஸ்லாம் கரிமோவின் ஆட்சிக்கு எதிராக 70 – 100 பேர் அடங்கிய கிளர்ச்சிக் குழு ஒன்று அந்திஜானில் உள்ள சிறைச்சாலையின் கதவை உடைத்து நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளை விடுவித்தது. அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சித்தார்கள் என்ற பெயரில் இஸ்லாமியக் குழுக்களைச் சேர்ந்த பெருந்தொகையானோர் கைதுசெய்யப்பட்டு இந்த சிறைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மறுநாள் சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பேரலை ஒன்று அரசாங்கக் கட்டடங்களை ஆக்கிரமித்துக்கொண்டது. இவ்வாறு அரசாங்கக் கட்டடங்களுக்குள் உட்புகுந்த மக்கள் கூட்டத்தின் மீது இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். காயமடைந்து நிலத்தில் வீழ்ந்து கிடந்தவர்களையும் இராணுவத்தினர் தேடிச் சென்று சுட்டுக்கொன்றனர்.

மத்திய ஆசியாவிலேயே அதிக சனத்தொகையைக் கொண்டதும், உலகின் பருத்தி உற்பத்திசெய்யும் முன்னணி நாடுகளில் ஒன்றானதுமான உஸ்பெகிஸ்தானில் எண்ணெய் மற்றும் எரிவாயு போன்ற இயற்கைவளங்களும் காணப்படுகின்றன. ஆனால், அதன் பொருளாதார நிலை படுமோசம். வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறம். தங்கள் ஜீவனோபாயத்துக்கு மக்கள் நடத்தும் வாழ்க்கைப் போராட்டம் மறுபுறம். இவைமட்டுமன்றி ஏராளமான வேறுபல பிரச்சினைகளும் அங்கு உண்டு.

ஆனால், இவற்றுக்கெதிராக மக்கள் புரட்சி ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டு அங்கு அராஜக ஆட்சி நடத்துகிறார் படுமோசமான சர்வாதிகாரியாக வர்ணிக்கப்படும் அந்நாட்டு ஜனாதிபதி இஸ்லாம் கிரிமோவ். தனது இரும்புப்பிடியால் மக்களின் எதிர்ப்பு அலைகளை அடக்குவதற்கு அவர் முழு முயற்சி எடுக்கிறார். ஆனால் மக்கள் எதிர்ப்பு அலையானது பேரலையாகக் கிளர்ந்தெழுந்து கிரிமோவின் ஆட்சியை வெகுவிரைவில் கவிழ்த்துவிடும் என்ற எதிர்பார்ப்பு உலக அரங்கில் இப்போது காணப்படுகிறது.

வாஷிங்டனில் உள்ள நிக்சன் என்று அழைக்கப்படும் பாதுகாப்பு அமைப்பின் இயக்குநரான செய்னோ இதுபற்றித் தெரிவிக்கையில் இஸ்லாம் கிரிநோவினது முடிவின் ஆரம்பமே இந்தக் கிளர்ச்சிகள் என்று கூறியிருக்கிறார். இத்த வன்முறைகள் மீண்டும் ஒருமுறை தலையெடுத்துப் பரவக்கூடும் என்றும் அவர் எச்சரித்து இருக்கிறார்.

உஸ்பெகிஸ்தான் மக்கள் தம்நாட்டு அரசுக்கு எதிராகக் கொதித்துக் கிளம்பி இருக்கும் இத்தருணத்தில் அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் கிரிமோவை நம்மவர் என்று அணைத்துப்பிடித்துக் கொண்டு இருக்கிறது.

உலகில் உள்ள ஊழல் நிறைந்த சர்வாதிகார ஆட்சிகளில் ஒன்றாக கிரிமோவின் ஆட்சி இனங்காணப்பட்டுள்ள போதும். ஆயுதங்கள் வாங்குவதற்கென அமெரிக்க அரசு இவருக்கு 25மில்லியன் டொலர்களை கடனாகக் கொடுத்துள்ளது. அதுமட்டுமா? 40.5மில்லியன் டொலர்கள் பொருளாதார உதவியாகவும், 18 மில்லியன் டொலர்கள் பயங்கரவாத எதிர்ப்புக்காகவும் அமெரிக்காவினால் வழங்கப்பட்டிருக்கின்றது. தவிர 2003இல் உஸ்பெகிஸ்தானுக்கான உதவித்தொகையை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் 86 மில்லியன் டொலர்களால் அதிகரித்தும் இருக்கிறார்.

பயங்கரவாதத்துக்கு எதிராக, உலகளாவிய ரீதியில் நடத்தப்படும் போருக்கு தானே தலைவன் என்று தன்மீது முத்திரை குத்தியிருக்கும் அமெரிக்கா – 'ஜனநாயகம்' தனிமனித சுதந்திரம், என்றெல்லாம் பறைசாற்றும் அமெரிக்கா – உலகின் மிகப்பெரிய பயங்கரவாதியான கிரிமோவுக்கு இத்தகைய பாரியநிதி உதவிகளை வழங்குவது ஏன்?

அமெரிக்க இராணுவத்துக்கு, உஸ்பெகிஸ்தானின் ஆப்கானிஸ்தானுடனான நீண்ட எல்லைப் பகுதியான கார்சகானாபாத் பகுதியில் பெரிய தளம் ஒன்று உண்டு. இங்கு அமெரிக்க இராணுவத்துருப்புக்கள் பெரிய அளவில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு சரக்குகள் அனுப்பும் பாதை இந்த எல்லையில் அமைந்திருப்பதுடன் மத்திய ஆசியாவில் அமெரிக்கச் செல்வாக்கை உயர்த்திக்காட்டும் தளமாகவும் இது காணப்படுகிறது.

மேலும் எண்ணெய் வளமுடைய காஸ்பியன் படுகையில் அமெரிக்கா தலைநிமிர்த்தி நிற்பதையும் இத்தளம் சுட்டிக்காட்டுகிறது.

இந்தக் காரணங்களினால் தான் கிரிமோவுக்கு தலைதடவ அமெரிக்கா விரும்புகிறது. இப்போது அவருக்கு எதிராக எதிர்ப்பு அலைகள் ஆவேசத்துடன் பொங்கி எழுவதைப் பார்த்துப் பயப்பட ஆரம்பித்திருக்கும் அமெரிக்கா கிரிமோவுக்குப்பின்னர் யாரென்ற கேள்வியையும் தனக்குள்ளே கேட்க ஆரம்பித்துவிட்டது.

இவ்வாறு அமெரிக்கா தனது கைகளைப்பிசைந்து கொண்டு யோசிக்கும் அளவுக்கு இந்த எதிர்ப்பு அலைகளின் பின்னணியில் யார் இருக்கிறார்கள்?

உஸ்பெகிஸ்தானில் வீறுகொண்டு எழுந்த இந்தக் கிளர்ச்சிக்கு உந்துவிசையாக இருந்தது அமெரிக்காவுக்கு எதிரான இஸ்லாமிய தீவிரவாதிகளே என்று குற்றம் சாட்டப்படுகிறது. கிரிமோவும் இதையேதான் சொல்லுகின்றார். ஆனால், இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க ஆதாரபூர்வமான சாட்சியங்கள் எதுவும் கிடைக்கவில்லை. மக்கள் மத்தியில் உஸ்பெகிஸ்தான் ஆட்சிக்கு எதிராக ஊறிப்போயுள்ள வெறுப்பு உணர்வே இந்த வன்முறைகளுக்கான காரணம் என்று பரவலாக நம்பப்படுகிறது. இது இப்படி இருக்க, இஸ்லாமிய பாணியிலான பலமான கிளர்ச்சி ஒன்று முகிழ்த்து எழுந்து தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளையும் நிராகரிப்பதற்கு இல்லை என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

"இந்தக் கிளர்ச்சிகளைக் கண்டு நாங்கள் வெளியேற வேண்டியது இல்லை. உஸ்பெகிஸ்தான் இன்னொரு ஆப்கானிஸ்தானாக மாறட்டும்" என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

அமெரிக்கா மட்டுமல்ல ரஷ்யாவும் இந்த நிலைமையைக் கண்டு நிம்மதி இழந்துபோய் உள்ளது. தலிபானுடன் உறவு வைத்துள்ள முஸ்லிம் அடிப்படைவாதிகளே மக்கள் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டனர் என்றும், பலாத்காரத்தை அடக்க பலத்தை பிரயோகிக்கும் உஸ்பெகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கு மாஸ்கோவின் ஆதரவு என்றும் உண்டென்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

ரஷ்ய அதிகாரிகளோ இன்னும் ஒருபடி மேலே சென்று, 'உஸ்பெகிஸ்தானின் அந்திஜானில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு சர்வதேச பயங்கரவாத வலையப் பின்னல் மட்டுமன்றி ரஷ்யாவுக்கு இந்தப் பரந்த பகுதியில் இருக்கும் செல்வாக்கை சரித்து அதை மேலும் பலவீனப்படுத்துவதற்கு அமெரிக்கா செய்யும் இரகசியச் சதியின் பிரதிபலிப்பே இது என்றும் விளக்கி இருக்கின்றனர்.

இவற்றை எல்லாம் மையமாக வைத்துப்பார்க்கும்போது ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் மீண்டும் ஒரு பனிப்போர் தொடங்கிவிட்டதா என்று கேட்கத் தோன்றுகிறது. அத்துடன், கைறிக்ஸ்தான், தாஜிகிஸ்தான், கஸகஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் உஸ்பெகிஸ்தானின் இந்த வன்முறைத் தீப்பொறி பறந்து பின்னர் தீச்சுவாலையாக அந்த நாடுகளில் கொழுந்துவிட்டு எரியுமா? என்ற கேள்வியும் பூதாகாரமாக உலகின் முன் எழுந்து நிற்கின்றது.

**-மூர்த்தி-**

உஸ்பெகிஸ்தானில் மட்டுமல்ல 'உலகில் நடைபெறும் அத்தனை அரசியல் நாடகங்களுக்கும் அமெரிக்காவே காரணம் என்று கூறுவதுடன் நின்றுவிடாது சர்வதேச மன்னிப்புச் சபையின் 2005ஆம் ஆண்டுக்கான அறிக்கை "உலகம் பூராவும் மனித உரிமைகள் மலினப்படுவதற்கான பொறுப்பு அமெரிக்காவையே சாரும்" என்றும் புட்டுக்காட்டி இருப்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆம், உஸ்பெகிஸ்தானில் தமது உறவினர்களின் சடலங்களை மக்கள் தேடிக்கொண்டிருந்த வேளையில், "இருபகுதியினரும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்" என்று பக்கம் சாராது பூசி மெழுகி அறிக்கை வெளியிட்ட அமெரிக்கா தனது புவிசார் நலன்களுக்காக அடுத்து எங்கு தாக்குதல் நடத்த தன்னைத் தயார்படுத்துகிறதோ? யார் அறிவார்?

பிந்துனுவெல புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்கைதிகள் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 அன்று பெருங்காடையர் கூட்டத்தால் வெட்டியும், கொத்தியும் படுகொலை செய்யப்பட்டனர்.

சம்பவத்தில் 24 தமிழ் கைதிகள் உயிரிழந்தனர் 14 பேர் படுகாயமுற்றனர். இச்சம்பவம் தீபாவளி நாளிலேயே இடம்பெற்றது. 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைப்படுகொலைகளுடன் இதை ஒப்பிட முடியும். சிங்களப் பேரினவாதம் அன்று முதல் மேலும் மேலும் கோரமாகவே வளர்ந்து வருகிறது என்பதை அது தெளிவாக சுட்டி நின்றது. அதேபோல் சிங்கள அரசுகள் செய்யும் விசாரணைகள், நீதித்துறையின் செயற்பாடுகள் எப்போதும் சிறுபான்மையினருக்கு

# பிந்துனுவெல படுகொலை: எதிர்பாராத தீர்ப்பும் ஏமாற்றமும்

அநீதியுடனும், பேரினவாதத்துக்கு பக்கபலமாகவும் செயற்பட்டன. ஏனைய துறைகளைப் போல் நீதித்துறையையும் பேரினவாதம் தனக்கேற்ற முறையில் தேவையானதுபோது வளைக்க தவறுவதில்லை.

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பாக அப்பிரதேசக் கிராமவாசிகள் மற்றும் முகாம் பொறுப்பதிகாரி ஆகியோர் உட்பட 41 பேருக்கு எதிராக கொழும்பு 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றில் சட்டவிரோதக் கூட்டம், கொலை, கொலைச் சதி செய்தல், கொலைமுயற்சி ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் சரத் அம்பேபிட்டிய, எரிக் பஸநாயக்க, உபாலி அபேரட்ண ஆகியோரைக் கொண்ட மன்று வழக்கை விசாரணை செய்தது.

வழக்கு விசாரணைகளின் நடுவில் போதிய சாட்சியம் இல்லாததால் 23 எதிரிகள் விடுவிக்கப்பட்டனர். விசாரணைகளின் முடிவில் இதே காரணத்துக்காக மேலும் 13 பேர் விடுதலையாகினர். எஞ்சிய ஐவருக்கும் மரணதண்டனையும், 26 வருட கடுழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

தியத்தலாவ பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் டிரோன் றோஜர் ரட்ணாயக்கா, பிந்துனுவெவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சேனக ஜயம்பதி கருணசேன மற்றும் பொதுமக்களான டி.எம்.சேபால தீமாநாயக்க, எம்.ஏ.சம்மி, ஆர்.எம். பிரேமானந்த ஆகியோருக்கே இத்தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதற்கு எதிராக அவர்கள் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தனர். அது நீதியரசர்கள் ரி.வி.வீரசூரிய, நிஹால் ஜயசிங்க, என்.கே.உடலகம, என்.ஈ.திஸநாயக்கா, ராஜா பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

மேன்முறையீட்டு ஆரம்ப விசாரணைகளின் நடுவில் சப் இன்ஸ்பெக்டர் டிரோன் றோஜர் ரட்ணாயக்கா விடுவிக்கப்பட்டனர். இந்த நிலையில் இறுதித் தீர்ப்பு வழங்கிய உயர் நீதிமன்றம் எதிரிகள் நால்வரையும் முற்றாக விடுவிக்கும் உத்தரவை ஏகமனதாக அறிவித்தது.

இதிலிருந்து ஒன்றை தமிழ்பேசும் மக்கள் புரிந்து கொள்ள முடியும். அதாவது சிங்கள தேசத்திடம் இருந்து எப்போதும் நியாயம் கிடைக்கப்போவதில்லை என்பதுதான் அது.

இலங்கையின் நீதித்துறையின் செயற்பாடுகள், பல சந்தர்ப்பங்களில் சர்வதேச அமைப்புக்களின் விமர்சனங்களுக்கு உள்ளாகி வந்தன. அந்த வகையில் தற்போதைய பிந்துனுவெவ விசாரணையில் நீதித்துறையின் செயற்பாடு குறித்து ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில் "இலங்கையின் நீதித்துறைக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் கிளர்ந்தெழ வேண்டிய நேரம் இது" எனத் தெரிவித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களாவன, "இலங்கையின் நீதி முறையானது குற்றம் இழைத்தோரைத் தண்டிக்காது காப்பாற்றுவதை உறுதிசெய்வதன் மூலம் குற்றமிழைக்கிறது. இந்தச் சம்பவத்தில் யார் உண்மையான சூத்திரதாரிகள்? இதற்கு பின்னால் இருந்து இயக்குவித்தவர்கள் யார்? என்ற கேள்விகளுக்கு நீதித்துறையிடம் பதில் இல்லை.

இந்தப் படுகொலையில் இருந்து தப்பிப் பிழைத்தோரிடமும், பலியானோரின் உறவினர்களிடமும் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக இந்தக் கேள்விகள் உள்ளன. அதற்குரியபதில் அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

இந்தப் புனர்வாழ்வு முகாம் அரச பாதுகாப்பில் உள்ளது. அப்படி இருந்தும் படுமோசமான முறையில் அங்கு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். எனினும் இப்படுகொலைவிடயத்தில் நீதியை வழங்கத் தவறியமைக்கு இலங்கை அரசே முழுப்பொறுப்பு."

இவ்வாறு அந்த அறிக்கையின் முக்கியபகுதிகள் சிங்கள அரசையும், அதன் நீதித்துறையையும் கடுமையாக கண்டித்துள்ளன.

காலம்காலமாக நிகழ்ந்த பல படுகொலைகளுக்கென அமைக்கப்பட்ட பல விசாரணைக்குழுக்களுக்கு என்ன நடந்தது என்பதை யாரும் அறியார். இந்த நிலையில் அவ்வாறு இல்லாது விசாரணை நடந்து முடிந்து நீதிவழங்கிய போதும் அது ஏமாற்றமே அளித்துள்ளது.

இவற்றுக்கு காலங்காலமாக சிங்கள மேலாண்மையைத் திணித்துவரும் பேரினவாதமே பொறுப்பேற்கவேண்டும். தமிழர்களின் தனியரசுக் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் அரச நீதித்துறையை தமிழர்கள் வரவேற்பதைத் தவிர வேறுவழியில்லை.

-கே.பி-

# அரசியல் வம்பு



அம்பி

## இப்படிப் பயமா?

ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் சிலர் ஜப்பான் செல்வதற்காக கட்டுநாயக்க விமானநிலையத்திற்குச் சென்றபோது அங்கு இவர்களை படமெடுப்பதற்கு ஊடகவியலாளர்கள் சிலர் திரண்டிருப்பதை அறிந்தனர். ஊடகவியலாளர்களின் கண்களுக்குச் சிக்கினால் ஜப்பான் விஜயம் தொடர்பில் திரிவுபடுத்தப்பட்ட கருத்துக்கள் வெளிவரலாம் என கருதிய ஜே.வி.பியினர் ஊடகவியலாளர்களின் பார்வைக்கு படாமல் பொதுமக்கள் செல்லும் வழமையான நுழைவாயில் வழியாகச் சென்றனர். அங்கே மக்களோடு மக்களாக சென்றதால் பல மணிநேரம் வரிசையில் காத்துக்கிடக்க வேண்டிய பரிதாப நிலை ஜே.வி.பியினருக்கு ஏற்பட்டது. கொழும்பில் இருந்து ஜப்பானின் நரிட்டா விமான நிலையத்துக்கு செல்வதற்கு பத்தரை மணித்தியாலங்கள் வரை பிடிக்கும். இதே விமானத்தில் அரச சமாதான செயலகத்தின் பணியாளர் ஜயந்த தனபாலவும் சென்றதால் பத்தரை மணித்தியாலங்கள் தனபாலவுடன் உரையாடும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. இங்கு பொதுக்கட்டமைப்புக்கு குறித்தே முக்கியமாக உரையாடப்பட்டதாம்.

## விட்டுக்கொடுங்கள்!

ஜனாதிபதி கடந்தவார இறுதியில் ஜே.வி.பி முக்கியஸ்தர்களை சந்தித்தார். பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவே இந்த சந்திப்பு அமையும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மேல் மாகாண சபை விவகாரம் குறித்து அங்கு ஆராயப்பட்டமை அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. தலைவர் நாட்டில் இல்லாததன் காரணமாக பொதுக்கட்டமைப்பு பற்றி பேச வேண்டாம் என்று ஜே.வி.பியினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே, பொதுக்கட்டமைப்பு குறித்து இங்கு மூச்சு கூட விடப்படவில்லையாம். மேல் மாகாணசபை முதலமைச்சர் விவகாரத்தில் சற்று நெகிழ்வான போக்கைக் கடைப்பிடிக்குமாறு ஜனாதிபதி ஜே.வி.பி. தரப்பினரிடம் மிகவும் பணிவாகக் கேட்டுக்கொண்ட போதிலும், பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைப் போன்றே இந்த விவகாரத்திலும் திடமான போக்கை ஜே.வி.பி கடைப்பிடிக்கவுள்ளதாம். எனினும், பரிசீலித்துப் பார்க்கிறோம் என்று ஜனாதிபதிக்கு சமாதானம் கூறியுள்ளது ஜே.வி.பி.

## மிலிந்த+ஜனாதிபதி

எஸ்.பி.யின் விவகாரம் குறித்து ஐ.தே.க முக்கியஸ்தரான மிலிந்த மொறகொட ஜனாதிபதியுடன் இரண்டு மணிநேரம் நடத்திய பேச்சின் போது தற்போதைய அரசியல் நடப்புகள் குறித்தும் ஆராயப்பட்டிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நடவடிக்கைகள், கொள்கைகள் குறித்து கடுமையாக விமர்சித்துப் பேசிய ஜனாதிபதி, பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்துப் பேச விடுத்த அழைப்பின் போது ரணில் அந்த அழைப்பை நிராகரித்தது குறித்து காரசாரமாக விமர்சித்திருக்கிறார். இந்த விமரிசனங்களை அமைதியாக செவிமடுத்த மிலிந்த பதில் ஏதும் பேசாது பேச்சுக்களை முடித்துக் கொண்டு திரும்பியிருக்கிறார். பாவம் யார் பக்கம் தான் அவரால் பேசமுடியும்.

## ஐ.தே.க எதிர்ப்பு

ஜனாதிபதியுடன் எஸ்.பி. விவகாரம் குறித்து பேச மிலிந்த சென்றமை குறித்து ஐ.தே.கவுக்குள் பலத்த எதிர்ப்பாம். தற்போது பேச்சுக்கள் எந்தவித முன்னேற்றமும் இன்றி முடிவடைந்தமை குறித்து ஐ.தே.கவினர் சலித்துக் கொள்கின்றனராம். இதை எதிர்பார்த்துத்தான் இந்த தூது வேலை வேண்டாம் என்று கூறியதாக அவர்கள் மிலிந்தவிடமே வெளிப்படையாக தெரிவித்திருக்கிறார்கள். இந்த எதிர்ப்புகளினால் மிலிந்த கலக்கம் அடைந்துள்ளாராம்.

## தேர்தலுக்குத் தயார்

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தினால் தனிவழியை நோக்கி அடியெடுத்து வைக்க ஆரம்பித்துள்ள ஜே.வி.பி, ஜனாதிபதி தேர்தலில் தனித்து போட்டியிட தீர்மானித்து, அதற்கான முன் ஏற்பாடுகளையும் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதாம். ஜனாதிபதி வேட்பாளராக சோமவன்சவினதும், நந்தன குணதிலக்கவினதும் பெயர்கள் அரசியல் குழுவில் அடிபட்டுள்ள நிலையில் இந்த முடிவை எடுக்கும் பொறுப்பை மத்திய செயற்குழுவிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். இது குறித்து சுதந்திரக்கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

# போர் விரைவில் மூளும்?

"தென் தமிழீழத்தில் யுத்தம் தொடங்கிவிட்டது. அது வடக்கிலும் பரவும் சூழல் ஏற்பட்டுள்ளது. எதற்கும் புலிகள் தயார்"

இவ்வாறு அண்மையில் புலிகளின் தளபதி ஒருவர் தெரிவித்திருந்தார்.

இவர் இவ்வாறு கூறிய சமகாலத்தில் புலிகளின் அனைத்துலகத் தொடர்பாகம் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள தனது தலைமைச் செயலகத்தில் இருந்து தனது சர்வதேச கிளைகளுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தது. அது மிகவும் இரகசியமாக அனுப்பப்பட்டிருந்தது. சில நாட்களின் பின்பு சில இணையத்தளங்களில் அது வெளியிடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் பல தகவல்கள் உள்ளன. தமிழ் மக்களை அதிர்ச்சியுறச்செய்யும் வகையில் திடுக்கிடும் தகவல்கள் காணப்படுகின்றன.

விடுதலைப்புலிகளின் சர்வதேச செயற்பாடுகளை வழிநடத்தும் தலைமைச் செயலகம் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ளது. புலிகளின் சர்வதேச கிளைகளின் செயற்பாடுகள் - குறிப்பாக போராட்டத்துக்கு ஆதரவான பிரசாரங்கள் - நிதி சேகரித்தல் உட்பட பல முக்கிய செயற்பாடுகளை வழிநடத்திவருகிறது புலிகளின் அனைத்துலகத் தொடர்பகம். இதன் பொறுப்பாளராக இருப்பவர் புலிகளின் மூத்த உறுப்பினரான கஸ்ரோ.

இந்த தொடர்பகத்தில் இருந்தே புலிகளின் ஆய்வறிக்கை 'சமகால அரசியல் நிலவரம்' எனும் தலைப்பில் அனுப்பிவைக்கப்பட்டது. இந்த அறிக்கை மூலம் பல விடயங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன.


'போரையே தனது தீர்வாக அரசு தெரிவு செய்துள்ளது. போருக்குத் தயாராகும் நிலைக்குப் புலிகள் தள்ளப்பட்டுள்ளனர். தமிழர்களுக்கு வழங்கப்பட்ட ஒரே தெரிவு போர் மாத்திரமே. போர் தவிர்க்க முடியாததொன்று. அது மிகவும் குறுகிய காலத்தில் நடக்கும் என்பதே எமது இறுதிச் சொற்கள்" என்று அந்த ஆய்வறிக்கையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வறிக்கை ஈழத் தமிழர் போராட்டத்துக்கு எதிரான இந்தியாவின் நகர்வுகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் ஈ.பி.டி.பி. அமைப்பின் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார் கிளை அலுவலகங்களில் இந்திய உளவு அமைப்பான 'றோ'வின் அலுவலகங்கள் இயங்குவதாகவும் தெரிவித்துள்ளது.

மிகநீண்ட கால அறிக்கை பலதரப்பையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. அண்மைக்காலமாக புலிகளின் முக்கியஸ்தர்கள், தமது பொறுமையை அரசு சோதிப்பதாகவும் தலைவர் விரைவில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துவந்தனர்.

தற்போதைய சமாதான காலத்தில் உண்மையில் அரசு அக்கறை காட்டாது படைக்கு ஆட்களைச் சேர்ப்பதிலும், ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவிப்பதிலும் தீவிரம்காட்டிவரும் அதேவேளை வடக்கு-கிழக்குப் பகுதியில் இராணுவ நிலைகளைப் புதுப்பித்து மறுசீரமைத்தும் வருகிறது.

பாதுகாப்புக் கெடுபிடிகளும் படைத்தரப்பினால் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. அரசின் இந்த போர் நகர்வுகள் பல வழிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவ வழிகளில் மட்டுமன்றி உயர்பாதுகாப்பு வலயம் என தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து நிற்கும் படைகள் தமிழர் நிலப்பகுதிகளில் புத்தர்சிலைகளையும் நிறுவி மேலுமொரு ஆக்கிரமிப்பை நடத்த முற்படுகின்றன. இவ்வாறான நிலையில் இந்தச் செயற்பாடுகள் ஒருபோரை மிக நெருங்கிவரச் செய்துவிட்டன. இவை புலிகளின் ஆய்வறிக்கையில் பிரதிபலிக்கின்றன.



அனைத்துலக செயலகப் பொறுப்பாளர் கஸ்ரோ

கடந்த வருடம் மாவீரர் நாள் உரையில் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் தாம் பொறுமையின் எல்லையை அடைந்துவிட்டதாகவும் போரே ஒரேவழி எனவும் தெரிவித்திருந்தார். எனினும் பின்னர் ஏற்பட்ட கடல் பேரனர்த்தம் காரணமாக போர் பின்தள்ளிப் போயிருந்தது. பிரபாவின் உரையின் அதேபாணியில் இந்த அறிக்கை மீண்டும் வந்துள்ளது.

தற்போது புலிகளும் போருக்குத் தயாரகிவிட்டார்கள் என்பது தெளிவாகிவிட்டது. விடுதலைப்புலிகள் தம்மை சகல வழிகளிலும் பலப்படுத்தியுள்ளனர். பல புதிய படையணிகளையும் உருவாக்கியுள்ளனர்.

தற்போதைய ஒரு போர் தயார்நிலை கடந்த வருடமும் காணப்பட்டது. கடந்த வருடம் நவம்பர் மாதம் இந்திய ஊடகவியலாளர் ஒருவரை (தமிகத்தைச் சேர்ந்தவர்) தலைவர் பிரபா சந்தித்து அளவளாவினார். அப்போது ஒரு கட்டத்தில் பிரபா சொன்னாராம் "இனி அடிக்கிற அடியில சந்திரிகா எங்களிடம் தனி நாடு கேட்பார்" என்று.

இந்த போர் அரங்கை இனித் திறப்பது யார் என்பதுதான் எஞ்சியுள்ளது என்கிறார்கள் தற்போதைய நிலைமையை அவதானிப்போர்.

புலிப்போராளிகள் மீது தாக்குதல் நடத்த அரச புலனாய்வுத்துறை ஆரம்பித்தபோதே யுத்தத்துக்கான வாசல் திறக்கப்பட்டுவிட்டது. எனினும், மேற்படி நிழல்யுத்தத்தை அதேபாணியில் புலிகள் எதிர்கொண்டனர். அது இன்னும் முடியவும் இல்லை. அது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அதன் பிந்திய நிலவரம் கிருலப்பனையில் வைத்து இராணுவப் புலனாய்வுத்துறையின் முதலாவது கட்டளையிடும் அதிகாரி மேஜர் முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்டமை ஆகும்.

இந்த நிகழ்வு இராணுவப் புலனாய்வுத்துறையை திகிலடையச் செய்துள்ளது என்றும் இராணுவப் புலனாய்வுத்துறை குழம்பிப்போய் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் கொழும்பில் தமது செயற்பாடுகளை கடந்த சில வாரங்களில் மட்டுப்படுத்தியிருந்தனர் எனினும் மீண்டும் அவை அதிகரிக்கக்கூடும்.

இரு தரப்பும் செய்துள்ள போர் பிரகடனங்கள், மிக விரைவில் போரைச் சாத்தியமாக்கும் நிலைமை உள்ளது. பொதுக்கட்டமைப்பு குறித்து சர்வதேசம் வலியுறுத்திவரும் நிலையில் களநிலவரமோ வேறு மாதிரி வேறுதிசையில் போய்க்கொண்டிருக்கின்றது.

இந்த வகையில் போர்நிறுத்த உடன்படிக்கையின் கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளையும் இலங்கை அரசு நிறைவேற்றப் போவதில்லை. தமிழர்களின் கோரிக்கைகளை வழங்குவதில்லை என்றும் அது உறுதியாக தீர்மானித்துள்ளது. திரும்பமுடியாத தூரத்துக்கு சிங்களதேசம் முன்னேறிவிட்டது. இனிப் போரைத்தான் தனது தீர்வாக அரசு தெரிவுசெய்துள்ளது என்றும் புலிகளின் அறிக்கையின் ஒருபகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-கலின்-

போர் என்பது இனித் தவிர்க்க முடியாததாகிவிட்டது. 4 ஆம் கட்ட ஈழப்போர் மூண்டுவிடும் சூழல் நெருங்கிவிட்டது என்பதே இன்றைய களநிலை.

## கிரிக்கெட் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கிறார் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி

இன்றைய இளைஞர்களை அதிகம் கவர்ந்த விளையாட்டாக கிரிக்கெட் இருந்து வருகிறது. இதைப் பயன்படுத்தி பல தனியார் அமைப்புகளும், முன்னாள் வீரர்களும் கிரிக்கெட் பயிற்சி நிலையங்களை நடத்தி வருகிறார்கள்.



இப்போது இந்தப் பட்டியலில் இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் சௌரவ் கங்குலியும் சேரப்போகிறார். விரைவில் இளைய தலைமுறையினருக்கு கிரிக்கெட் பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்றை இவர் கொல்கத்தாவில் தொடங்கப் போகிறார்.

இந்தப் பயிற்சி மையத்தின் ஆலோசகராக இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் கிரேக் சப்பலை நியமிக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் அமைய இருக்கும் இந்தப் பயிற்சி நிலையத்தில் 12 வலைப்பயிற்சி மைதானங்கள் அமைய இருக்கின்றன. இது தவிர நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பொருத்தப்பட்ட உடற்பயிற்சி மையம், உடை மாற்றும் அறைகள், மருத்துவ சிகிச்சை நிலையம், உணவகம் மற்றும் கிரிக்கெட் தொடர்பான புத்தகங்கள் கொண்ட நூலகம் போன்றவையும் இப்பயிற்சி நிலையத்தில் அமைந்திருக்கும்.

இந்தப் பயிற்சி மையத்தில் 8 முதல் 19 வயது வரையான இளம் கிரிக்கெட் வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். இந்தப் பயிற்சிகளில் துடுப்பாட்டம் தொடர்பான பயிற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

வேகப்பந்து வீச்சாளர்கள் மற்றும் சுழற்பந்து வீச்சாளர்களை உருவாக்க பல பயிற்சி மையங்கள் உள்ளன. ஆனால் துடுப்பாட்ட வீரர்களை உருவாக்கும் பயிற்சி மையங்கள் குறைவாகவே உள்ளன.

எனவே இந்தியக் கிரிக்கெட் அணிக்கு சிறந்த துடுப்பாட்ட வீரர்களை உருவாக்கும் வகையில் இளம் வயதிலேயே வீரர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு துடுப்பாட்ட நுணுக்கங்களை கற்றுக்கொடுக்க திட்டமிட்டிருக்கிறார் கங்குலி.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு இந்தப் பயிற்சி மையத்தில் முழு நேரமாக பணிபுரியவும் கங்குலி முடிவு செய்திருக்கிறார்.

## சச்சின், வசிம் அக்ரம் புகழ்பாடுகிறார் இலங்கை அணித்தலைவர் மார்வன்

டெஸ்ட் கிரிக்கெட்டில் 6 தடவைகள் இரட்டைச் சதம் அடித்து சாதனை படைத்தவர் இலங்கை அணித்தலைவர் மார்வன் அத்தபத்து. எல்லோரும் அவரது ஆட்டத்தைப் பார்த்து வியக்க, அவர் வியக்கும் துடுப்பாட்ட வீரர், பந்து வீச்சாளர் யார் தெரியுமா? அவர்கள் சச்சின் டெண்டுக்கரும், வசிம் அக்ரமும் தான்.



இது குறித்து மார்வன் அத்தபத்து கூறியதாவது—

''நான் சச்சினின் தீவிர ரசிகன். அவர் மிகவும் சிறப்பான வீரர். என் மனைவிக்கும் அவர் விளையாட்டைப் பார்ப்பது என்றால் மிகவும் பிடிக்கும். தற்போது அவர் ஆட்டத்தில் மாற்றம் வந்திருக்கிறது. வயது ஏற ஏற நெருக்கடியும் அதிகரிப்பதால் இந்த மாற்றம் ஏற்படுகிறது. சச்சினும் இதற்கேற்ப மாறியிருக்கிறார்.

''எனக்கு மிகவும் பிடித்த பந்துவீச்சாளர் வசிம் அக்ரம். ஒரு ஓவரின் 6 பந்துகளையும் வெவ்வேறு விதமாக வீசக்கூடிய திறமை அவரிடம் உள்ளது. தனது சிறப்பான பந்துவீச்சின் மூலம் ஆட்டத்தில் எந்தவித மாற்றத்தையும் அவரால் ஏற்படுத்த முடியும்.'' —என்று சச்சின் மற்றும் அக்ரமின் புகழைப்பாடுகிறார் அத்தபத்து.

## ஜேர்மனி கால்பந்து வீரர்களை ஆட்டிப்படைக்கும் பயிற்சியாளர்


ஒவ்வொரு அணியையும் ஏதாவது ஒரு விடயம் ஆட்டிப்படைக்கும். இந்த நிலையில் ஜேர்மனி கால்பந்து அணியை காலணி விவகாரத்தில் ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கிறார், அந்த அணியின் பயிற்சியாளர் ஜுயர்ஜென்கிலின்ஸ்மான். அந்த அணிக்கு அனுசரணை செய்யும் 'அடிடாஸ்' காலணியைத் தவிர வேறு எந்த காலணியையும் வீரர்கள் அணியக் கூடாது. மீறி அணியும் வீரர்களுக்கு, தேசிய அணியில் இடம் கிடையாது. — என்று அவர் கண்டிப்புடன் கூறியுள்ளார்.

இதனால் வெவ்வேறு நிறுவனங்களுடன் தனிப்பட்ட ஒப்பந்தம் செய்துள்ள ஜேர்மனி வீரர்கள் திண்டாட்டத்தில் உள்ளனர். தங்கள் பிரச்சினையை ஜேர்மனி கால்பந்து அணி நிர்வாகிகளுக்கு கடிதம் மூலம் எழுதியுள்ளனர். ஆயினும் பயிற்சியாளர் கிலின்ஸ்மான் — 'அடிடாஸ்' காலணி அணியாமல் வேறு காலணி அணிவதற்காக எந்த வீரராவது சட்டபூர்வமான நடவடிக்கைகளில் இறங்கினால் அவருக்கு கண்டிப்பாக அணியில் இடம் கிடையாது. —என்று கண்டிப்பாகக் கூறியுள்ளார். இதனால் வீரர்கள் சட்டபூர்வமான நடவடிக்கைகளில் இறங்குவதற்கு சற்று தயக்கத்தில் உள்ளனர்.

## முதலிடமே என் லட்சியம் —கூறுகிறார் ஷரபோவா—

இன்றைய டெனிஸ் உலகின் இளம் புயலாக கருதப்படுபவர், 18 வயது நிரம்பிய ரஷ்ய இளம் மங்கை மரியா ஷரபோவா.

தற்போது உலக டெனிஸ் தரவரிசையில் முதல் இடத்தில் அமெரிக்க வீராங்கனை டேவன்போர்ட் உள்ளார். எப்படியாவது டேவன்போர்ட்டை பின்தள்ளி முதல் இடத்தைப் பிடித்துவிட வேண்டுமென முழு மூச்சாக ஈடுபட்டு வருகிறார் ஷரபோவா.



அண்மையில் நடந்த போட்டி ஒன்றில் மயிரிழையில் ஷரபோவா தோல்வியைத் தழுவினார். இந்த நிலையில் இத்தாலியின் ரோம் நகரில் டெனிஸ் போட்டி ஒன்று கடந்த 2 வாரங்களுக்கு முன்பு நடந்தது. இப்போட்டியில் எப்படியாவது வெற்றி பெற்று இழந்த பெருமையை மீட்டு விட வேண்டுமென துடித்த ஷரபோவா, சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெட்டி சிண்டரிடம் 3–6, 6–3, 6–1 என்ற செட் கணக்கில் தோல்வியைத் தழுவினார்.

இந்த ஆட்டத்தில் ஷரபோவா வென்றிருந்தால் டெனிஸ் தரவரிசையில் முதலிடத்திற்கு வந்திருப்பார். அடுத்தடுத்து தோல்வியைத் தழுவியதால் மீண்டும் அதே இடத்திலேயே (2ஆவது) அவர் உள்ளார்.

எப்படியும் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே என் லட்சியம் என்று கூறி அதற்காக கங்கணம் கட்டி தீவிர பயிற்சி எடுத்து வருகிறார் ஷரபோவா.

## விளையாட்டுச் செய்திகள்! ஷெனியா

## முன்னாள் வீராங்கனைக்கு விருந்து

நாடியா கொமான்சி என்பவர் பிரபல 'ஜிம்னாஸ்டிக்' வீராங்கனை. ருமேனியா நாட்டில் பிறந்த இவர் தனது 15ஆவது வயதிலேயே ஒலிம்பிக்கில் களம் புகுந்தவர்.

1979ஆம் ஆண்டு தனது 15ஆவது வயதில் ஒலிம்பிக்கில் களமிறங்கிய இவர், மிக நேர்த்தியாக 'ஜிம்னாஸ்டிக்' செய்பவர் என்ற பெருமையைப் பெற்ற முதல் வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது.

1989ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டிக்குப்பின் 'ஜிம்னாஸ்டிக்'கில் இருந்து ஓய்வு பெற்ற அவர் அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேறிவிட்டார்.

நாடியா சமீபத்தில் போர்த்துக்கல் நாட்டிற்குச் சென்றார். அங்கு கடந்த வேருடங்களாக சிறந்த விளையாட்டு வீரர் — வீராங்கனைகளுக்கு விருது வழங்கப்பட்டுவருகிறது. அதே போல் இந்த ஆண்டும் அந்த விழா போர்த்துக்கல் நாட்டின் எஸ்டோரில் நகரில் உள்ள அரண்மனை ஒன்றில் சமீபத்தில் நடந்தது. இதில் கலந்து கொள்வதற்காக நாடியா மிகவும் கவர்ச்சியாக உடையணிந்து வந்திருந்தார்.

அவரை ஸ்பெயின் நாட்டு மன்னர் ஜுயின் கார்லஸ் கட்டிப்பிடித்து முத்தமிட்டு வரவேற்றார். அந்த காட்சியைத்தான் படத்தில் காண்கிறீர்கள்.

[redacted]

## அணிக்காக எனது விக்கெட்டை தியாகம் செய்யத் தயார் — அப்ரிடி

அதிரடி வீரர்களான ஷேவாக்கையும், அப்ரிடியையும் ஒப்பிட்டு இப்போது பலர் பேசுகின்றனர். இதுபற்றி அப்ரிடியின் கருத்து இதோ—



''நான் ஒரு சுழற்பந்து வீச்சாளராகத் தான் அணியில் இடம்பிடித்தேன். ஆனால் நைரோபியில் 37 பந்துகளில் சதம் அடித்து உலக சாதனை படைத்தபோது நான் அதிரடி துடுப்பாட்ட வீரர் என்ற முத்திரை குத்தப்பட்டு, இன்று வரை நான் ஒரு துடுப்பாட்ட வீரனாகவே பார்க்கப்படுகிறேன்.

"பந்து எந்த திசையில் பிட்ச்சாகி வருகிறதோ அந்த திசையில் நானும் ஷேவாக்கும் துடுப்பெடுத்தாடுவோம். மற்ற வீரர்கள் குறிப்பிட்ட திசையில்தான் அடிப்பார்கள். ஆனால் நாங்கள் எல்லா திசைகளிலும் அடிப்போம். அதனால்தான் எங்களால் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க முடிகிறது. அதேசமயம், இதனால் எங்கள் விக்கெட்டுக்கள் பறிபோகும் அபாயமும் சில சமயம் ஏற்பட்டுவிடும்.

''நான் ஒரு போதும் சொந்த சாதனைக்காக விளையாடியதில்லை. விரைவாக குவிக்கும் ஓட்டங்கள் தான் அணிக்கு உதவும் என்று எனக்குத் தெரியும். எனவே என் விக்கெட்டை அணிக்காக தியாகம் செய்ய என் மனதைத் தயாராகவே வைத்திருப்பேன். ஷேவாக்கும் என்னைப்போன்ற மனநிலை உடையவர்தான்'' — என்கிறார் அப்ரிடி.

# கலைமாமணி சுப்பு ஆறுமுகத்தின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள்

தமிழர்களின் ஜனனம் ஆரம்பம் முதல் இறுதிவரை, இசையோடு பின்னிப்பிணைந் துள்ளது. தாலாட்டுகையில், ஊஞ்சலாடுகையி ல், விளையாடுகையில், வழிபடுகையில், வாழ்த்துகையில், நாற்றுநடுகையில், களை பிடுங்குகையில், நெல்குற்றுகையில், வண்டி ஓட்டுகையில், வள்ளம் வலிக்கையில், விறகு சுமக்கையில், மீன்பிடிக்கையில், இறப்பு நிகழ்கையில் எனப் பற்பலவேளைகளிலும் நாட்டுப்புற மக்களிடம் கூட இசை வாழ்வில் இரண்டறக் கலந்து நிற்கிறது. அவர்களின் வாயிலிருந்து எழுகின்ற எழுதா இலக்கியங் களாகிய பாடல்களும் இசை வடிவிலேயே ஒலிக்கின்றன.

பக்திப் பெருக்கெடுத்து ஓடிய பல்லவர் ஆட்சிக்காலத்தில் தேவாரத் திருவாசகத் திரு முறைகள் இசையோடு பாடப்பட்டு பக்தியை வளர்த்தன. எனவே, தமிழர் வாழ்வில் எக் காலத்திலும் இசை தன் இனிய உன்னத இடத்தை வகித்து வந்தவண்ணம் உள்ளது. ஆதலினால் தான் தமிழை இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என மூன்றாக வகுத்து, இசையை நடுநாயகமாக வைத்து வளர்த்து வருகின்றனர்.

நல்ல விழுமியங்களையும், சிறந்த பண் புகளையும், நூல்களில் வாசித்துக்கொள் ளப் படித்தவர்களால் முடியும். அவர்கள் மேடைப் பேச்சுகளின் வாயிலாகவும் கிரகித் துக் கொள்ளமுடியும். எனினும், வாழ்வுக்கு அவசியமான நல்ல கருத்தொன்றை சாதாரண மக்களிடம் பரப்புவதற்கு சுவையான இலகு

நம்பிக்கை, பணிவு, தொண்டு, மனிதநேயம் முதலிய நற்பண்புகள் இவ்வாறான நிகழ்ச் சிகளைக் கேட்போரின் உள்ளங்களில் அவர் களை அறியாமலேயே எளிதாகப் பதிந்து விடுகின்றன.

ஏனைய கலைகளைப் போல இதனை



எல்லோரும் கற்றுப் பயிற்சி பெற்றுவிட ...யாத வெகு நுட்பமான நாட்டார் கலை ... அதனால் தான் ஒரு சிலராலேயே மட்டும் ...னை நிகழ்த்தி சாதனைகளைப் புரிய ...கின்றது. கடவுளின் அனுக்கிரகமும், ...னமும், நிறைந்த தமிழ்ப் புலமையும், ...டா முயற்சியும் மிக்கவர்கள் மட்டுமே ...தில் வல்லுநர்களாக விளங்கமுடியும்.

இன்று நம் மத்தியில் வில்லிசை மூலம் ...பண்புகளையும், தெய்வத் திருவிளை ...டல்களையும், மகான்களின் வரலாறு ...ளையும், மிக ஜனரஞ்சகமான முறையில் ...பீரமான குரலில் எடுத்துச் சொல்வதில்

முடிசூடா மன்னராக விளங்குபவர் கலைமா மணி, வில்லிசை வேந்தர், கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்களாவர்.

தமிழன்னையைப் பற்பல வகைகளில் அணி செய்ததில் தமிழ்நாடு திருநெல் வேலிச் சீமை முன்னோடியாக விளங்குகி றது. உலகப் புகழ்பெற்ற வில்லிசை வேந்த ராகத் திகழும் சுப்பு ஆறுமுகம் அவர்களை ஈன்றளித்ததினால், இன்றும் அதன் பெருமை வானுயர்ந்து நிற்கிறது. நாட்டுப் புறக் கலை யென நவீனவாதிகளால், புறக்கணித்து ஒதுக்கப்பட்டதால் நலிவுற்றுப்போயிரு ருந்த வில்லுப்பாட்டின் சிறப்பையும், ஆற்ற லையும், தமது அயராத ஆர்வத்தினாலும், ஆற்றலினாலும் தூக்கி நிமிர்த்தி உலகமே வியக்கும் வண்ணம் நிலைநிறுத்தியிருக்கும் பெருமை கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்க ளுக்குரியது. அதன் காரணமாகத் தமிழ் இலக் கியத்திற்கும் தமிழ் நாட்டுப்புறக் கலைக்கும் மிகச் சிறந்த பங்களிப்பை அவர் புரிந்து வரு கின்றார்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சை யில் முதல் பிரிவில் சித்தி பெற்றிருப்பதுவே இவரின் தமிழ் பாண்டியத்திற்குச் சான்று. மகாகவி பாரதியாரின் கண்ணன் பாட்டை ஒத்ததாக குமரன் பாட்டை இயற்றி கவிஞராக இலக்கியப் பிரவேசம் செய்த இவர், தமது வில்லுப்பாட்டுகளுக்கான பாடல்களைத் தாமே வடித்துக்கொள்கிறார். இவர் எழுதியுள்ள 20 நாவல்களில் இரண்டு திரைப்படங்களாகத்




தயாரித்து வெளியிடப் பெற்று பாராட்டைப் பெற்றுள்ளன.

திரைப்பட ரசிகர்களால் நகைச்சுவை மன்னர் எனப் போற்றப்பட்ட என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் புகழ் பெற்ற மகாத்மா காந்தி வில்லுப்பாட்டைப் பாடியது டன் மற்றும் என்.எஸ்.கே. அவர்கள் திரைப் படங்களில் பாடிய அர்த்தமுள்ள நகைச் சுவைப் பாடல்கள், வசனங்கள் என்பவற்றின் கர்த்தாவும் சுப்பு ஆறுமுகம் அவர்களே. கருத் துகளை வெறுமனே சொல்வது காற்றுடன் கலந்து போய்விடும். ஆனால் நகைச்சுவை யுடன் கூறினால், கேட்பவர்களின் மனதில் ஆழமாய் பதிந்துவிடும். சிரிக்க வைத்து, சிந் திக்க வைக்கும் தனி ஆற்றல் படைத்தவர் சுப்பு ஆறுமுகம் அவர்கள்.

சென்ற 40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் நாடு, சிங்கப்பூர், இலங்கை முதலிய நாடுகளில் ஆயிரக்கணக்கான வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளின் மூலம் மக்களின் மனதைக் கொள்ளை கொண்ட இவரின் நிகழ்ச்சிகளை அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன், விஜய் தொலைக்காட்சி முதலிய இலத்திரனியல் ஊடகங் களும் விட்டு வைப்பதில்லை. அத னால் அவரின் கலைத்திறன் தமிழ் கூறும் நல்லுகம் எங்கும் பரவியுள் ளது.

கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர் களின் தனித்துவமான தமிழ்கலைப்பணி யைப் பாராட்டி தமிழ் நாட்டு அரசு கலை மாமணி விருது அளித்து கௌரவித்துள் ளது. சென்னை சேக்கிழார் மன்றம் 'வில் லிசை வேந்தர்', பாரத கலாசார அமைப்பு 'ஞானகலா பாரதி', கலிபோர்னியாவில் இயங்கும் உலகக் கலை கலாசாரக் கழகம் 'இலக்கிய கலாநிதி' முதலிய பட்டங்களைச் சூட்டி மகிழ்ந்துள்ளன. இராஜசேகர் அண் ணாமலைச் செட்டியார் அறநிதியம், ஒரு லட்ச ரூபாவையும் 'தமிழ்ச் சான்றோர்' விரு தையும் இவருக்கு அளித்து கௌரவித்துள் ளது.

உலகத்தை நல்வழியில் இட்டுச் செல்ல அவதரித்த உத்தமர்களாகிய இராமகிருஷ்ணர், அன்னை சாரதா தேவி,விவேகானந்தர், ஸ்ரீ சத்திய சாயி பாபா ஆகிய பெரியார்களின் வரலாறுகளை தமது நிகழ்ச்சிகளின் மூலம் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் தமது கணீரென்ற குரலாலும், பாடல்களா லும் பரப்புவதில் கலை மாமணி சுப்பு ஆறு முகம் அவர்களின் கலைத்திறமை மிக்க முழுக்குடும்பத்தினருமே அர்ப்பணிப் புடன் கலைச் சேவையாற்றி வருகின்றனர். அவருடைய மகன் காந்தி, மகள் பாரதி, மரு மகன் பேராசிரியர் திருமகன் இவர்கள் இரு வரின் மகன் செல்வன் கலைமகன் ஆகி யோரும் கலைமாமணி அவர்களின் வில் லுப்பாட்டு நிகழ்சிகளில் கலைஞர்களாகப் பங்கேற்று நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாகச் சோபிக்கச் செய்து வருகின்றனர்.

கொழும்பு பார்ன்ஸ் பிளேசிலுள்ள இலங்கை ஸ்ரீ சத்திய சாயி பாபா மத்திய கூட் டமைப்பினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 11ஆம் திகதி இலங்கை வருகின்ற கலை மாமணி சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில் லுப்பாட்டு, அவர்களின் நிகழ்ச்சிகள் எமது நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற விருப்பது இலங்கைக் கலை ஆர்வலர்களுக் குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பு. சத்திய சாயி பகவானின் 80ஆவது பிறந்த தினத்தை ஒட்டி பகவானின் நாமம் அகில இலங்கையி லும் கொடி கட்டிப் பறக்க பகவானின் வாழ்க்கை வரலாற்றை பல பகுதிகளாகப் பிரித்து வில்லுப்பாட்டிலே இசைக்க சுப்பு ஆறுமுகம் குழுவினர் இலங்கை வரவிருக் கின்றனர்.

தமிழர்களுக்கே உரித்தான வில்லுப்பாட் டுக் கலையைத் தரணி எங்கும் பரப்பி வரும் கலைமாமணி சுப்பு ஆறுமுகம் அவர்களின் நிகழ்ச்சிகள் ஜூன் மாதம் 12ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிசனிலும்,14 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 15ஆம் திகதி பருத்தித்துறையிலும், 17ஆம் திகதி வவு னியா நகர மண்டபத்திலும்,19ஆம் திகதி திருகோணமலை காளி கோவில் மண்டபத் திலும், 20ஆம் திகதி மட்டக்களப்பு தேவநாய கம் மண்டபத்திலும்,21ஆம் திகதி கல்முனை இராமகிருஷ்ண மிசன் பள்ளிமண்டபத் திலும்,23ஆம் திகதி ஹட்டன் மாணிக்கப் பிள்ளையார் ஆலய மண்டபத்திலும், 25ஆம் திகதி கொழும்பு ஜிந்துப்பிட்டி செட்சணத் தார் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ் தான மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.



திருமறைக் கலாமன்றத்தினர் அண்மையில் பலிக்களம் என்னும் நாடகத்தை, அளம்பில் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் அரங்கேற்றியபோது எடுக்கப்பட்ட படம்.

## ரங்கேற்றம்






செல்வி புதுலபரமி சுமதிபாலாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கொழும்பு சென் பிறிஜெட்ஸ் கொன்வென்டில் கல்வி கற்கும் செல்வி புதுலபரமி, கலாசூரி வாசுகிசண்முகம்பிள்ளையின் கலைத்திறன் மிக்க மாணவிகளில் ஒருவராவார்.

பல வருடங்களாக கலாசூரி வாசுகிசண்முகம்பிள்ளையிடம் பரத நாட்டியக் கலையைப் பயின்று வரும் செல்வி புதுலபரமி பரதநாட்டிய நுணுக்கங்களை மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பதுடன் தனது நாட்டிய நிகழ்வுகளின்போது அவற்றை வெளிப்படுத்தி பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்தும் வல்லமை பெற்றவர். அவரது அங்க அசைவுகளும் முக பாவனைகளும் நடன ஆர்வலர்களை கவர்ந்து இழுக்கும் சக்தி கொண்டவை.

இதுவரை 75க்கு மேற்பட்ட தமது மாணவியரின் பரதநாட்டிய அரங்கேற்றத்தை மிகத் திறமையாக நடத்தி முடித்துள்ள புகழ்பெற்ற நாட்டிய மேதை கலாசூரி வாசுகி சண்முகம் பிள்ளைக்கு செல்வி புதுலபரமி சுமதிபாலாவின் அரங்கேற்றம் ஒரு மைல் கல்லாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

# கவிதைப் புனல்

## உனக்காகத்தானே!

விளையாடும்
விழிகளுக்குள்
குடியேறி
நீ வந்தாய்.
விழி திறக்க
முடியவில்லை.
வழி கூடத்
தெரியவில்லை.
நினைவுகளில்
நீயிருக்க
கனவுகளில்
நான் நனைந்தேன்.
விடிகாலை
புலர்ந்தபோது
கனவுகளை
நான் தொலைத்தேன்.
நிஜமாக உனைச்சேர
தவம் கூட
நானிருப்பேன்.
உனக்காக
என்று சொன்னால்
உயிர் கூட
நான் தருவேன்.

*கி.திரிவேணி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## விசித்திர விளைநிலம்

எனது இதயம்
தூய விளைநிலம்.
பாவையின்
நினைவுகளை
பயிர் செய்தேன்.
அவள் காதல்
மழை பொழிந்தாள்.
மூச்சு முட்ட
முத்தமிட்டு
உரம்போட்டாள்.
நீக்கமற முளைத்து
நிறைந்ததுவோ
அவள் நினைவு.
கடுகளவு இடமேனும்
கண்டதில்லை
களைமுளைக்க.
இருந்தும் ஏனோ
களைநாசினி
தெளிக்கின்றாள்
தடுப்பு முறையாக.
அவள்
கொடுக்கும்
களைமருந்து
கெடுக்கும் வினையாகி
பயிரை
பாதிக்க விடலாமோ?
வீணாக விசம் தெளித்து
காதற்பயிர் கருகிவிட...
காணப்படும்
இடைவெளியில்
களை வந்து சேராதோ?
இல்லை...
இந்த இதயம்
ஒழுக்க விழுமியங்களால்
உழுது புரட்டப்பட்ட
விசித்திர
விளைநிலம்.
வேறு பயிரேதும் இங்கு
வேர்விட முடியாது.
வேண்டாம் இனியும்.
வீசி எறிந்து விடு.
மறுபடியும்
முத்தமிடு.
அறுவடைக்காலம் இது.
அலுக்காமல்
உரம்போடு.
ஆயிரம்
காலத்துப் பயிர்-இதை
ஆயுளின் அந்தம்வரை
அற்புதமாய் வளர்ப்போம்.

*மாணியூர் குணா*
*யாழ்.பல்கலைக்களகம்.*

## காத்திருக்கும் காதலன்

நாயகியே
நாளும்
உன் நினைவு
என்னுள் வந்து
நர்த்தனமாடுது.
ஏனோ
உன் முகம்
என்
சிந்தையில் வந்து
சித்திரம் போடுது.
மானே
உன் மனதில்
ஓர்
இடத்துக்காக
என் மனமும்
ஏங்குது.
தேனே உன்னை
சிகரத்தில் வைக்க
என் இதயம் நாடுது.
நானே
உன் காதலன்
என்று சொல்ல மட்டும்
ஏன் உன்
உதடுகள் நடுங்குது?
நீயே என் காதலி
என்று சொல்ல
உன் உதடுகள்
திறந்திடு.
மங்கையே உன்
தயக்கம்
தினம் என்னை
வாட்டுது.
உன் நினைவால்
தினம் என் சிந்தை
தீயினில் வேகுது.
தீயாய்
என்னுடலும்
உன்வரவுக்காய்
ஏங்குது.
நீயாய் எனை நாடி
வருவாய் என
நாளும்
என் மனம்
காத்திருக்கு.

*செல்வன்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## தித்திப்பு

என்
குற்றங்களுக்கான
தண்டனைகளாய்
உன் நினைவு...

என் தனிமையின்
குடிசையில் மட்டும்
தங்கிவிட்டுப்போகும்
அந்தரங்கம் நீ!

என்னை
மறந்துவிட்டாயா
என்று உன்
கேள்விக்கு
இல்லை என்று
சம்மதித்த
மௌனங்களின்
பதிலை
புரியாத புதிர் நீ!

பிரிவெனும்
வேதனையை
உன்
மணவறையில்
புதைத்துவிடும்
வன்முறை நீ!

என்
வார்த்தைகள் கூட
உனக்கு வலிக்காமல்
பார்த்திருக்கும்
பாசமுள்ள
வாலிபன் நான்!

மனங்களில்
மௌன வெளி
கடந்து
காதலுடன்
உயரப்பறந்த பின்பு
சேர்வதுதான்
காதல்நீதி.

இன்றுமட்டும் கூடி
நாளையே
பிரிவோமா
என்ற
வார்த்தைகளால்
நெருப்பை
உமிழும் நீ
"தீ"!

டெ.விக்கிணேஸ்வரன்,
ஹட்டன்.

## ஏன் இந்த மௌனம்?

*கல்லுக்குள் தேரை கண்டேன்.*
*கதறிக் கண்ணீர்*
*விட்டழுதது தேரையே*
*கடவுள் உன்னையும்*
*காப்பாற்றுவார்.*
*கற்றவர்கள் சொல்லிய பாடம் இது.*
*கரை புரண்டோடி பேரலைகள்*
*கரையொதுங்கின உயிரற்ற உடல்கள்*
*இறைவா! உயிரெல்லாம்*
*உனது படைப்பல்லவா?*
*கருணை நிறைந்த உன் உள்ளமதில்*
*கயமை உணர்வு தான் நிறைந்துள்ளதோ*
*அனர்த்தத்தின் அழுகுரல்கள்*
*இன்னும் ஏன் அடங்கவில்லை*
*நீயொரு கல்லோ கல்லறையோ*
*இறைவா இன்னும் ஏன் மௌனம்*
*கண்திறந்து பார்த்து நீர்*
*கருணை மொழி பொழிவதெப்போ*
*துவண்டு நிற்கும் இதயங்களின்*
*துயரதனை துடைப்பதெப்போ*

*க.கனகலிங்கம்,*
*கல்கிசை.*

## என்னையும் கவிஞனாக்கினாய்

பெண் குலமே...
உனக்கென்
வணக்கம்!
நீ
கவிஞர்களின்
பொக்கிஷம்!
இலட்சியவாதிகளின்
தடைக்கல்!
பெண்ணே!
நீ
மட்டும்
என்னை
சந்தித்திரா விட்டால்
சுற்றிக்கொண்டிருக்கிற
உலக
உருண்டைக்கு
தலை
சுற்றியிருக்கும்...
கிழிந்த
கோட்டுக்குள்
தன்
வறுமையை
மறைத்துக்கொண்டு
பெண்ணுக்காக
வாழ்த்துப்பாடிய
ஒரு
மகாகவியின்
மண்ணிலிருந்து
கொண்டு
ஒரு
பெண்ணால்
அழிந்து
நானும்
கவிஞனாகியிருக்கிறேன்...
சிரிக்கவைத்த
என்னை
சிந்திக்க
வைத்திருக்கிறாய்
பெண்ணே
உனக்கு
நன்றி!!!

*எஸ்.ஜே.பி,*
*வத்தளை.*

## *இதயக்குமுறல்*

*இரக்கமில்லாத*
*இனவாதிகளின்*
*ஊனப்பசிக்கு*
*இருட் சிறையினுள்*
*இரும்புப் பிடியில்*
*சிக்கி*
*செய்வதறியாது*
*அழுகிறோம்.*
*இமைகள் மூடி*
*தூங்குகிறோம்.*
*தூக்கமும் வரவில்லை*
*எதிர்காலத்தை*
*தொலைத்துவிட்டதாக*
*இதயத்தில் பிரம்மை.*
*சோகத்தால்*
*நிரம்பி இதயம்*
*குமுறுகிறது.*
*எமக்குள்*
*அமிழ்ந்து கிடக்கும்*
*வேதனைகள்*
*எமக்கு மட்டுமே*
*சொந்தமென!*
*இருளின் ஆதிக்கம்*
*நிலவொளியை*
*காண விடுவதாக*
*இல்லை!*

யோ.கிறிஸ்டி,
களுத்துறைச்சிறைச்சாலை.

## *மறந்துவிடாதே!*

உனக்குப்புரியும்.
என் கனவுக்குள்
புதைந்திருக்கும்
நீயே என்
வாழ்க்கை என்பது!
தெரிந்தும்
உன்
வாழ்க்கையோடு
நீயே
விளையாடிக்கொண்டிருப்பது
உனக்கு
வேடிக்கையாக
இல்லையா?
விளையாடு...
நான் மறுக்கவில்லை.
ஆனால்
என்னை நீ
பந்தாடுவது
உன்னை நீயே
அணு அணுவாய்
அழிப்பதுபோலாகும்
என்பதை மட்டும்
மறந்துவிடாதே!

*எஸ்.நிலா,*
*கொழும்பு.*

## நம் காதலுக்காக

நாம் சேர்ந்திருந்த
நாட்களின்
சில
நிமிடக் கணங்களையும்
நெஞ்சில்
நிலைத்துவிட்ட
சில்லறை
நினைவுகளையும்
சேர்த்துச் சேர்த்து
கட்டுகிறேன்
எம் காதலுக்காய்
ஒரு மணி மண்டபம்

*பொ.கிரிதரன்,*
*விசுவமடு.*


## *தோழி*

*என் கண்ணீர்த்துளிகளை*
*துடைத்துவிட்ட*
*அந்த விரல்கள்..*
*என் காயம்பட்ட இதயத்திற்கு*
*மருந்திட்ட*
*அந்த மனசு...*
*என் காய்ந்துபோன வாழ்க்கையை*
*ஈரமாக்கிய*
*அந்த அன்பு...*
*இவற்றுக்கெல்லாம்*
*சொந்தக்காரிதான்*
*என்னுயிர்த் தோழி...*
*அவளை நேரில் பார்த்து பேசும்*
*நாட்கள்*
*சொற்பமானவைதான்....*
*ஆனாலும்*
*ஒவ்வொரு நொடியும் அவள்*
*அன்பை உணர்கிறேன்*
*என் கையடக்க*
*தொலைபேசியூடாக...*

*வாணி, கந்தர்மடம்.*

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

*கடந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் 14153 டாலர் பெறுமதியான துவக்கு ஒன்றையும் 2700 டாலர் பெறுமதியான சைக்கிள் ஒன்றையும் ஆயிரக் கணக்கான டாலர்கள் மதிப்புடைய மீன் பிடிப்பதற்கான தூண்டில் ஒன்றையும் பரிசுகளாகப் பெற்றிருந்தார்.



அதே நேரம் உப ஜனாதிபதி டிக்செனிக்கு கலையம்சம் நிறைந்த ஓவியங்கள், சிலை ஆகியவை பரிசுப் பொருட்களாக அதே காலப் பகுதியில் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி புஷ்ஷுக்கு நத்தார் பண்டிகையின்போது 595 டாலர்கள் பெறுமதியான மேசை மணிக்கூடொன்றை அன்பளிப்பாக கொடுத்தார். உப ஜனாதிபதி டிக்செனி அந்த மணிக்கூடு இப்போது புஷ்ஷின் அலுவலக மேசையை அலங்கரிக்கிறது.

2004ஆம் ஆண்டில் சுமார் 26 346 டொலர்கள் பெறுமதியான பரிசுப் பொருட்கள் ஜனாதிபதி புஷ்ஷுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் அநேகமானவை அவரது சொந்த மாநிலமான டெக்சாசிலுள்ள அவரது நண்பர்களால் வழங்கப்பட்டவை. அதேசமயம் இவரின் பரிசுப் பொருட்களுக்கான பெறுமதி உப ஜனாதிபதி டிக்செனுக்குக் கிடைத்த பொருட்களின் பெறுமதியை விட நான்கு மடங்கு அதிகமானதாம்.

புஷ் பெற்றுக்கொண்ட பரிசுப் பொருட்கள் வீட்டுக்கு வெளியே அவர் ஈடுபடும் பொழுதுபோக்குகளுடன் தொடர்புடையவை. ஆனால் உப ஜனாதிபதி டிக்செனி பெற்றுக்கொண்ட பரிசுப் பொருட்கள் வீட்டுக்குள் அவர் ஈடுபடும் பொழுதுபோக்குகளுடன் சம்பந்தப்பட்டவையாகும்.

*சரிந்த நிலையில் நாம் படுப்பதால் எமது உடலுக்கான இரத்த ஓட்டம் பாதிக்கப்படுவதோடு தோள்பட்டைகளிலும் கழுத்து, இடுப்பு, முதுகு போன்ற இடங்களிலும்,வலி ஏற்பட ஏதுவாகிறது. உடல் மரத்துப்போகும் தன்மையும் அதிகரிக்கும்.முப்பது வயதுக்குப்பிறகே இந்த நிலைமை ஏற்படுகிறது.


மல்லாந்து படுப்பதால் இந்த வலிகளிலிருந்து நிவாரணம் கிடைக்கும். தவிர முதுகு வலி, இடுப்பு வலி உள்ளவர்கள் வெறும் தரையில் மல்லாந்து தான் படுக்க வேண்டும் என்று டாக்டர்கள் அறிவுறுத்துகிறார்கள்.


*உலகின் முதல் பெண் டாக்டர் லண்டனைச் சேர்ந்தவர். ஆனாலும் அவரை டாக்டராக்கிய பெருமை தமிழ்நாட்டுக்குத்தான். லண்டனைச் சேர்ந்த மெரி ஹெர்லிம் ஒரு பெண் என்பதால் அவருக்கு இடம் கொடுக்க மறுத்தது லண்டன் மருத்துவக் கல்லூரி. இதனால் அவர் 1875 ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து டாக்டராகப் படித்தார். உலகின் முதல் பெண் டாக்டரை உருவாக்கிய பெருமை தமிழகத்துக்குத்தான்.

* ஷேட்டின் மேல் டை அணிவதற்கு அநேக ஆண்களுக்கு விருப்பம். ஒருசில அலுவலகங்களில் கட்டாயம் டை அணிய வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள் அல்லவா? நீங்கள் சரியாகத்தான் டை அணிந்திருக்கிறீர்கள் என்று எப்படித் தெரிந்து கொள்வீர்கள்? சிம்பிள்.

உங்கள் டையின் நுனிப்பக்கம் உங்கள் இடுப்புப் பட்டிக்கு(பெல்ட்) ஒரு அங்குலம் கீழே இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

* இப்போது அநேகர் கோப்பியின் இனிய சுவைக்கு அடிமையாகிவிட்டார்கள். காலை எழுந்ததும் ஒரு கோப்பை கோப்பி, பின்னர் காரியாலயத்துக்குப் போகும்போது ஒரு கோப்பை. இப்படியே தொடர்ந்து ஒரு நாளைக்கு சுமார் ஏழு அல்லது எட்டு கோப்பைகளாகக் குடித்து முடித்துவிடுவார்கள். கோப்பி உங்கள் இதயத் துடிப்பை நிமிடத்துக்கு 16 தடவைகள் அதிகரிக்குமாம். இப்போது என்ன சொல்கிறீர்கள்? நிறுத்தமாட்டீர்களா கோப்பி குடிப்பதை?
















இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஜூன் 5 ஆம் திகதி வெளியிடப்பட்டது.